# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

இரண்டாம் பதிப்பு

விலை: 20

சுடர் 32 கதிர் 296 புரட்டாதி 02ஆம் நாள் திங்கட்கிழமை 18 செப்ரெம்பர் 2017 வள்ளுவர் ஆண்டு 2048

பக்கங்கள்: 28


## மாகாண சபைகளுக்குத் தேர்தலை நடத்துவதில் அரசுக்குக் குழப்பம்

கொழும்பு, செப். 18

கிழக்கு, வடமத்திய மற்றும் ஊவா மாகாண சபைத் தேர்தலை நடத்துவதில் அரசு குழப்ப நிலைக்குள் உள்ளதாக அறியமுடிகின்றது.

அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டவரைவில் திருத்தங்களை முன்வைப்பது சாத்தியமாகாது என சட்டமா அதிபரும் சட்ட வல்லுநர்களும் அரசுக்கு ஆலோசனை வழங்கியுள்ளனர். உயர் நீதிமன்றின் வியாக்கியானத்துக்கு அமைவாகவே இந்த ஆலோசனையை அவர்கள் தெரிவித்துள்ளனர். இதனால் 20ஆவது திருத்தச் சட்டவரைவைக் கைவிடும் முடிவில் அரசு உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், இனிவரும் தேர்தல்கள் அனைத் >> 25

## எந்தவொரு தேர்தலுக்கு முன்பாகவும்

# அரசமைப்புக்கான கருத்துக் கணிப்பே முதலில்வேண்டும்

### அரசிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அழுத்தம் திருத்தமாகத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 17

நாட்டில் எந்தவொரு தேர்தலை நடத்துவதற்கு முன்னரும், புதிய அரசமைப்புக்கான பொது வாக்கெடுப்பே நடத்தப்படவேண்டும் என்று அரசிடம் அழுத்தம் திருத்தமாகக் கூறியுள்ளது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

கிழக்கு, வடமத்தி, சப்ரகமுவ ஆகிய மாகாணங்களுக்கான தேர்தல் எதிர்வரும் டிசெம்பரில் நடைபெறலாம் என்கிற எதிர்பார்ப்பு எழுந்துள்ள நிலையில் இந்த விடயத்தை அரசிடம் மீண்டும் ஆணித்தரமாகக் கூட்டமைப்புக் கூறியுள்ளது.

3 மாகாண சபைகளுக்கும் இப்போது தேர்தல் நடத்தப்பட்டால் அது புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகளைக் கடுமையாகப் பாதிக்கும் என்று நம்பப்படுகின்றது. மாகாண சபைத் தேர்தல் அதைத் தொடர்ந்து உள்ளூராட்சி சபைத் தேர்தல் என்று அடுத்தடுத்து தேர்தல்கள் வந்தால் புதிய அரசமைப்பு முயற்சி நிச்சயமாகப் பின்தள்ளப்பட்டுவிடும் என்று அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

நீண்ட இழுபறியின் பின்னர் எதிர்வரும் வியாழக்கிழமைதான் புதிய அரசமைப்புத் தொடர்பான இடைக்கால அறிக்கை நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது. இந்தத் தருணத்தில் தேர்தல் ஒன்று வருவது அனைத்தையும் அடியோடு குழப்பிவிடக்கூடும் >> 24

## 20ஐ ஆதரிப்பதா இல்லையா? கூட்டமைப்பு கூடி ஆராய்கிறது

யாழ்ப்பாணம், செப். 18

"அரசமைப்பின் 20 ஆவது திருத்தம் நாளை மறுதினம் நாடாளுமன்றில் இரண்டாம் வாசிப்புக்கு எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன்னதாக, கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழுக் கூட்டம் நடைபெறும். 20ஆவது திருத்தத்துக்கு ஆதரவு வழங்குவதா இல்லையா? என்பது தொடர்பில் இதன்போதே முடிவு எடுக்கப்படும்"

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்கட்சித் தலைவருமான இரா.சம்பந் >> 25



இவையள் என்னதான் கத்தினாலும் காதிலை ஏறவா போகுது?...

## தமிழ் அரசுக் கட்சி மீது ஈ.பி.ஆர்எல்எவ் சீற்றம்

### இடைக்கால அறிக்கையின் இணைப்பில் தமது கட்சியைப் புறம்தள்ளிவிட்டதாம்

யாழ்ப்பாணம், செப். 18

"வழிநடத்தல் குழுவின் இடைக்கால வரைவுக்குப் பின்னிணைப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அறிக்கையாகச் சமர்ப்பிக்கப்பட்டது, தமிழ் அரசுக் கட்சியின் யோசனைதான். அந்தக் கட்சி இப்படிச் செயற்படுவதை நாம் கண்டிக்கின்றோம்"

இவ்வாறு ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சி தெரிவித்துள்ளது.

ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் உயர்பீடச் சந்திப்பு வவுனியாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்தச் சந்திப்பில் >> 24

## கஞ்சா விற்பவரைக் கைது செய்ய சென்ற பொலிஸ் மீது தாக்குதல்

### மணலாற்றில் பதற்றம்;16 பேர் கைது

முல்லைத்தீவு, செப்.18

கஞ்சா விற்பனை செய்யப்படுகின்றது என்று கிடைத்த தகவலை அடுத்து தேடுதல் நடவடிக்கைக்குச் சென்ற பொலிஸார் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. அதில் 3 பொலிஸார் காயமடைந்தனர். பொலிஸாரின் வாகனமும் சேதமடைந் >> 24

## சாராயம் குடிக்குமிடத்தில் ஏற்பட்ட முறுகல் முடிந்தது வாள்வெட்டில்

### 4 பேர் படுகாயம்; பரந்தனில் நேற்றுச் சம்பவம்

கிளிநொச்சி, செப். 18

பரந்தன் மதுபானசாலையில் ஏற்பட்ட முறுகல் வாள்வெட்டில் முடிந்தது. இரு கும்பல்களுக்கு இடையே ஏற்பட்ட இந்த மோதலில் 4 பேர் படுகாயமடைந்தனர். அவர்கள் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வாள்வெட்டு பரந்தன் நான் >> 24

## ஒன்பது மாகாண சபைகளையும் ஒக். 2 கலைத்துவிட யோசனை

### மைத்திரி, ரணிலிடம் கபே முன்வைப்பு

கொழும்பு, செப். 18

முதலமைச்சர்கள் மற்றும் ஆளுநர்களின் இணக்கப்பாட்டுடன் நாட்டின் 9 மாகாண சபைகளையுமே எதிர்வரும் ஒக்ரோபர் 2ஆம் திகதி கலைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது கபே அமைப்பு.

சகல மாகாண சபைகளுக்குமான தேர்தலை ஒரே நாளில்நடத்துவதற்கு அரசு எடுத்துள்ள தீர்மானத்துக்கமையவே அரச தலைவர், தலைமை அமைச்சர் ஆகியோரிடம் மேற்படி யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது என்று கபே (நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம்) தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பின் ஊடகப்பிரிவு விடுத்துள்ள >> 25

## சீனப் பயணத்தை கைவிட்டார் மகிந்த

கொழும்பு, செப். 18

சீனப் பயணத்தை திடீரென கைவிட்டு பின்வாங்கியுள்ளார் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச.

"இலங்கையில் முக்கிய சில அரசியல் நிகழ்வு >> 25

## மிக முக்கிய கூட்டத் தொடர் நாடாளுமன்றில் நாளை ஆரம்பம்

### அனைவரது கவனமும் அதன் மீதே

யாழ்ப்பாணம், செப். 18

நாளை ஆரம்பமாகும் நாடாளுமன்றக்கூட்டத்தொடர்மிகமுக்கியமானது என்பதுடன் பல தரப்பினராலும் உற்று நோக்கப்படுகின்ற ஒரு தொடராக அமைந்துள்ளது.

இந்த மாதத்தின் இரண்டாவது நாடாளுமன்றக் கூட்டத் தொடர் >> 25

## வங்காள விரிகுடாத் தாழமுக்கம் தெற்கிலிருந்து வடக்குக்கு நகர்வு

### யாழ். பல்கலை. மூத்த விரிவுரையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 18

வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் வடக்கு மாகாணத்தை நோக்கி நகர்வதால் இரு தினங்களுக்கு பலத்த காற்று வீசுவதுடன் மழையும் பெய்வதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாக யாழ்ப்பாணப் பல்கலைக் >> 24

## குடாநாட்டில் ஒருதொகுதி காணிகளை டிசெம்பருக்குள் விடுவிக்க இணக்கம்

### பலாலியில் நேற்று நடந்த சந்திப்பில் முடிவு

யாழ்ப்பாணம், செப். 18

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஒரு தொகுதிக் காணிகள் இந்த ஆண்டு இறுதிக்குள் விடுவிக்கப்படும் என்று பாதுகாப்புத் தரப்பினர், மாவட்ட நிர்வாகத்துக்கு அறிவித்துள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் சு.முரளிதரன், கரவெட்டி, பருத்தித்துறை, தெல்லிப்பழை, உடுவில், கோப்பாய், நல்லூர், சண்டிலிப்பாய் பிரதேச செயலர்கள் ஆகியோர் பாதுகாப்புத் தரப்பினரை பலாலி பாதுகாப்புப் படைத் தலைமையகத்தில் நேற்றுக் காலை 10.30 மணியிலிருந்து 12.30 மணி வரை சந்தித்துக் கலந்துரையாடினர்.

கலந்துரையாடலின் ஆரம்பத்தில், யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை தொடர்பில் மாவட்ட நிர்வாகத்தினதும், இராணுவத்தினதும் தரவுகள் வேறுபட்டு இருப்பது தொடர்பில் பேசப்பட்டுள்ளது. இதன் பின்னர் காணி விடுவிப்புத் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

வயாவிளான், பலாலி வடக்கு அந்தனிபுரத்தில் பாதுகாப்புத் தரப்பினர் வசமுள்ள பாடசாலை >> 25


see more news in newuthayan.com


## காணாமல் ஆக்கப்படுதலை குற்றமாக்கும் சட்டவரைவை மீள ஒத்திவைத்தது அரசு

### மகிந்த அணியின் கடும் எதிர்ப்பையடுத்து

யாழ்ப்பாணம், செப். 18

பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்படுதலைக் குற்றமாக அறிவிக்கும் சட்டவரைவை, மகிந்த அணியுடனான சந்திப்பையடுத்து எதிர்வரும் 21ஆம் திகதி மீளவும் ஒத்திவைப்பதற்கு அரசுதீர்மானித்துள்ளதாக நம்பகரமாக அறிய வருகின்றது.

மகிந்த அணி, பௌத்த மகாநாயக்க தேரர்கள், கடும் போக்குடைய சிங்கள தேசியவாத அமைப்புகள் இந்தச் சட்டவரைவுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கிவந்த நிலையில், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும், தினேஸ் குணவர்த்தன தலைமையிலான மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் இரவு அரச தலைவரின் இல்லத்தில் நடைபெற்றது.

சுமார் 2 மணிநேரத்துக்கு அதிகமாக நடைபெற்ற இந்தச் சந்திப்பையடுத்தே, சட்டவரைவு >> 24



# கூட்டரசின் ஆட்சியில் குடிசைப் பாடசாலைகள் கட்டடங்களாக மாற்றம்

## தலைமை அமைச்சர் பெருமிதம்

கொழும்பு, செப். 18
கூட்டரசு அரசைப் பொறுப்பேற்ற பின்னர், நாட்டின் அபிவிருத்திக்காகப் பல திட்டங்களை நடை முறைப் படுத்தியுள்ளோம். ஓலைக் கூரைகளாக இருந்த பாடசாலைகள், ஓடுகள் போடப்பட்ட கட்டடங்களாக மாறியுள்ளன. சிறந்த கட்டட வசதிகளையும், பௌதிக வளங்களையும் வழங்கி கல்வி அபிவிருத்திக்கான திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளோம்.

இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கல்வி அமைச்சால் முன்னெடுக்கப்படும் சிறந்த பாடசாலை அருகிலுள்ள பாடசாலை என்ற வேலைத் திட்டத்தின் கீழ், பறகஹதெனிய தேசிய பாடசாலையில் 12கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள கட்டடத் தொகுதிக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. அதில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

நான் கல்வி அமைச்சராக இருந்த கால கட்டத்தில், தென்னை ஓலையால் மேயப்பட்ட பாடசாலைகள் இருந்தன. தற்போது அவை ஓடு போடப்பட்ட பாடசாலைகளாக மாற்றியமைக்கப்பட்டுள்ளன. கூடுதலான நிதி ஒதுக்கீடுகளை வழங்கி அவற்றைச் சீர் செய்துள்ளோம். அதேபோன்று புதிய வேலைத் திட்டங்கள் உள்ளன. நாட்டில் சகல பாடசாலைகளிலும் வளங்கள் சீரமைக்கப்பட்டுள்ளன. கற்றலுக்குத் தேவையான வசதி வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. பாடசாலையின் கல்வி மட்டத்தை எதிர்காலத்தில் அதிகரிக்கச் செய்யவேண்டும் என்ற பொறுப்பு அனைவருக்கும் உள்ளது - என்றார்.

இந்த நிகழ்வில் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம், வடமேல் மாகாண அபிவிருத்தி மற்றும் உள் விவகார மற்றும் கலாசார அமைச்சர் எஸ் பி. நாவின்ன, குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜே. சீ. அலவத்துவெல மாவத்தகமப் பிரதேச சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் முஹமட், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்திய மாகாண சபை உறுப்பினர் ஹிதாயத் சத்தார், மருத்துவ அதிகாரி சாபி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ஐ-10)

# பொன்சேகாவுக்கு எதிராக கந்தளாயில் ஆர்ப்பாட்டம்

கந்தளாய், செப். 18
அமைச்சர் சரத் பொன்சேகா மற்றும் பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு எதிராக கந்தளாய் 93ஆம் கட்டைப் பகுதியில் நேற்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. அவர்களது உருவப் பொம்மைகளை எரித்து ஆர்ப்பாட்டக்காரர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.



பௌத்த மதகுருமாருக்கு எதிராக அவர்கள் இருவரும் வெளியிட்டுள்ள கருத்துக்கு ஆட்சேபனை தெரிவித்தே, இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் பிரதேசத்திலுள்ள 50க்கும்' மேற்பட்டவர்கள் கலந்துகொண்டனர். "நெகனஹிர ஜன அஹிதி சுறகீம சங்விதானய" என்ற அமைப்பு இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்தது. அதேவேளை அவர்களுக்கு எதிராக திருகோணமலை வாழ் பௌத்த குருமார்களும், பௌத்த மக்களும் ஒன்றிணைந்து திருகோணமலை நகரின் மணிக்கூட்டு கோபுரச் சந்தியில் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-10, 45)

தியாக தீபம் திலீபனுக்கு நேற்று மூன்றாவது நாளாகவும், நல்லூரர் பின் வீதியில் அமைந்துள்ள அவரது நினைவுத்தூபியில் அஞ்சலி செலுத்தப்பட்டது. (ஐ)



# காணாமற்போனோர் உடன்பாட்டில் போர்க்குற்ற விசாரணைக்கும் ஏற்பாடு

## பந்துல எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு.செப்.18
காணாமற் போனவர்கள் தொடர்பான பன்னாட்டு உடன்பாட்டில், போர்க்காலத்தில் நடந்த மோதல்கள் தொடர்பான விசாரணைகளை நடத்துவதற்கான ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன என்று பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் உட்பட சட்ட வல்லுநர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

கூட்டு எதிர்க்கட்சியின் ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பில் நேற்று நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள காணாமல் போனவர்கள் தொடர்பான உடன்பாடு மூலம், போரில் பங்குகொண்ட படையினரும், தலைவர்களும் வெளிநாடுகளின் நீதிமன்றங்களுக்குக் கொண்டு செல்லப்படுவார்கள். இந்த உடன்பாடு கடந்த காலம் தொடர்பில் பாதிப்புகளை ஏற்படுத்தாது என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார். அவர் அவ்வாறு கூறினாலும் போர் தொடர்பான விசாரணைகளை நடத்துவதற்கான ஏற்பாடுகள் உடன்பாட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது - என்றார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அண்மையில் பிரதியமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அருந்திக பெர்னாண்டோவும் கலந்து கொண்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# நியூயோர்க் பயணமானார் அரச தலைவர் மைத்திரி

கொழும்பு.செப்.18
ஐ.நா. சபையின் 72ஆவது பொதுச் சபை அமர்வில் பங்கு பற்றுவதற்காக அரச தலைவர் மைத்திரி பால சிறிசேன அமெரிக்காவுக்கு நேற்றுக் காலை பயணமானார் குழுவினர் அமெரிக்காவுக்குச் சென்றுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் 72ஆவது பொதுச் சபை அமர்வு, செப்ரெம்பர் 19ஆம் திகதி நியூயோர்க் நகரத்தில், ஐக்கிய நாடுகள் சபையின் யப்பட்டதன் பின்னர், உரை நிகழ்த்தும் மூன்றாவது பொதுச் சபை அமர்வு இதுவென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அதேவேளை அமர்வில் கலந்துகொள்ளும் உலகத்



என்று அரச தலைவரின் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

கட்டுநாயக்க, பண்டாரநாயக்க பன்னாட்டு வானூர்தி நிலையத்திலிருந்து, அரச தலைவர் உள்ளிட்ட தூதுக் தலைமையகத்தில் ஆரம்பமாகவுள்ளது. அதில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன சிறப்புரை நிகழ்த்துவார். மைத்திரிபால அரச தலைவராகத் தெரிவு செய் தலைவர்கள் பலருடனும் அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார் என்றும் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்தது. (ஐ)

# நாட்டின் தேசிய வருமானம் கடன் செலுத்தப் போதாது

**மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் தெரிவிப்பு**

நுவரெலியா, செப். 18
எமது நாடு பெரிய கடன் சுமையைத்தாங்கியுள்ளது. 2009ஆம் ஆண்டு அரசுக்குக் கிடைத்த வருமானம் 70 ஆயிரம் கோடி ரூபா ஆகும். உலக நாடுகளில் வாங்கிய கடனுக்கான வட்டியைச் செலுத்த 82 ஆயிரம் கோடி ரூபா தேவை. அவ்வாறு இருக்கையில் நாட்டின் தேசிய வருமானம் கடன் செலுத்தப் போதுமானதாக இல்லை. அதனாலேயே எமது பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்க்க முடியாதுள்ளது.



இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைமைத்துவத்தின் கீழ் இயங்கும் ஊக்கமுள்ள பிரஜைகள் அமைப்பின் நுவரெலியா மாவட்ட மாநாடு, நுவரெலியா கவிதாஸ் கட்டடத்துக்கு முன்பான வெளியரங்கில் நேற்று நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

மருத்துவமனைகளில் இரண்டடி, மூன்றடி தூரத்தில் கட்டில்கள் போடுவது ஒருவருடைய நோய் மற்றவருக்கு தொற்றக்கூடாது என்ற நோக்கத்தில் ஆனால் இலங்கையில் கட்டில்கள் தூர இருந்தாலும், ஒரு கட்டிலில் இரண்டு மூன்று நோயாளிகள் உள்ளனர். இது எமது நாட்டின் பொருளாதார நிலையைக் காட்டுகின்றது. நாட்டில் இடம் பெறும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியாத சூழ்நிலை காணப்படுகின்றது.

சுகாதாரப் பிரச்சினை, கல்விப் பிரச்சினை, இளைஞர்களின் தொழில் பிரச்சினை, விவசாயத்துறை தொடர்பான பிரச்சினை அனைத்தையும் தீர்ப்பதற்கு மக்கள் விடுதலை முன்னணி புதிய கொள்கையை உருவாக்கியுள்ளது. அதற்காக நாட்டின் புத்திஜீவிகள் அனைவரும் எம்முடன் கைகோர்த்துள்ளனர். அவர்களுடன் 2020 இல் எமது நாட்டை நாம் பொறுப்பேற்கத் தயார். அதற்காக அனைவரும் ஒன்று சேர வேண்டும் - என்றார். (ஐ-10)



சண்டிலிப்பாய் சந்தியில் இருந்து 7ஆம் கட்டைப் பகுதிக்குச் செல்லும் சாலையில், மின் கம்பம் ஒன்று சாலைக்குக் குறுக்காகச் சரிந்தது. அதனால் அந்தப் பகுதியில் சிறிது நேரம் போக்குவரத்துத் தடைப்பட்டது. மின்கம்பத்தை நிலைநிறுத்துவதற்காக நிலத்தில் நடப்பட்டிருந்த கம்பி அறுந்ததை அடுத்தே, மின்கம்பம் சரிந்தது எனத் தெரிவிக்கப்பட்டது. மின்சார சபையினர் பிற்பகல் அதனைச் சீரமைத்தனர். (ஐ-10)

# அடுத்த தேர்தலில் ஆளுமையற்றவரை தெரிவு செய்யாதீர்கள்

## வாக்காளரிடம் கோரிக்கை

மட்டக்களப்பு, செப். 18

மக்களுக்கு உரிய சேவைகளை முன்னெடுக்கக் கூடிய திறனுடைய ஒருவரையே அரசியலுக்குத் தெரிவு செய்யுங்கள். மீண்டும் மீண்டும் ஆளுமையற்ற ஒருவரைத் தெரிவு செய்து கடந்த தேர்தல் தெரிவுகளில் விட்ட தவறுகளை இனியும் விடாதீர்கள்.

இவ்வாறு அம்பாறை மாவட்டப் பொதுப் பணிகள் அமைப்பின் தலைவரும் அட்டாளைச்சேனைப் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினருமான எஸ்.எல். முனாஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அரசியல்வாதிகளின் சமகால நடவடிக்கைகள் தொடர்பாக ஊடகங்களுக்கு நேற்றுக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

தற்போது மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசியல் வாதிகள் ஒரு சிலரின் நடவடிக்கைகளை நோக்கும் போது, வெட்கக் கேடாக உள்ளது. ஆர்ப்பாட்டத்தில் மக்களோடு சேர்ந்து பதாகை பிடிப்பவர்களாக மட்டுமே அவர்களைக் காண முடிகின்றது. அதில் கேலிக்கும் கிண்டலுக்கும் உரிய விடயம் என்னவென்றால், மக்களின் நலனுக்காக அல்லாமல் ஊடகங்களில் பணியாற்றும் ஒரு சிலரின் நிகழ்ச்சி நிரலுக்காக அவர்கள் இயங்குகிறார்கள். நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள் கொடுக்கும் தலைப்பில் ஆர்ப்பாட்டங்களை ஏற்பாடு செய்து, அந்த இடத்துக்குப் போய் நின்று பதாகையைப் பிடித்துக் கொண்டு கூக்குரல் எழுப்புகிறார்கள்.

ஆனால், நாடாளுமன்றக் கூட்டங்களில் நாட்டு நடப்புக்கள் பற்றியும், மக்களின் அபிவிருத்தி பற்றியும் தீர்மானம் எடுக்கும் பொழுது அவர்கள் நாடாளுமன்றத்தில் இருப்பதில்லை. நாடாளுமன்றத்துக்கும் அரச மேல் மட்ட அதிகாரிகளுக்கும் மக்களின் பிரச்சினைகளை எடுத்துச் சொல்வதற்கு அவர்களுக்கு மாற்று மொழி ஆற்றலும் இல்லை, அதிகாரிகளிடத்தில் அலுவல்களை முடிக்கக் கூடிய ஆளுமையும் இல்லை. அடுத்த தேர்தலில் அப்பாவி மக்களின் வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்காக அவர்கள் வெறுமனே ஆர்ப்பாட்டங்களை ஏற்பாடு செய்கின்றார்கள்.

மக்கள் அடுத்த தேர்தலிலும் இத்தகைய அறிவும் ஆற்றலும், ஆளுமையும் இல்லாதவர்களைத் தெரிவு செய்து இனிமேலும் தவறிழைத்து விடக் கூடாது - என்றார்.

(ஜ-10, 46)

# லயன்ஸ் கழகத்தின் சமூக நலத்திட்டங்கள்

சாவகச்சேரி, செப் 18

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் சமூக நலத்திட்டங்கள் , மீசாலை கிழக்கு மதுவன் சனசமூக நிலையத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்டன.



அதில் பார்வையில் குறைபாடுள்ள மக்களுக்குக் கண் பரிசோதனைகளை மேற்கொண்டு, பொருளாதார நிலையில் பின்தங்கிய 50க்கும் மேற்பட்டவர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகளும், சனசமூக நிலையத்தில் இயங்கும் முன்பள்ளிச் சிறார் களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

கழகத் தலைவர் லயன் உ. சிசில் றெமின்டஸ் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது. அதில் கழக உறுப்பினர்களான லயன் கா.சற்குணதேவன், லயன் இ.கோகுலன், லயன் வீ.மகாலிங்கம், லயன் செ.சுப்பிரமணியம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

(ஜ-9)

# குளவி கொட்டியதில் மூவருக்குப் பாதிப்பு

வவுனியா, செப். 18

கடும் காற்றினால் வீதியோரமாக இருந்த பெரும் குளவிக் கூடு கலைந்து வீதியால் சென்றவர்களைக் கொட்டியது. அதில் இரண்டு மாணவர்கள் உட்பட மூவர் பாதிக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் வவுனியா ஓமந்தைத் தொடருந்து நிலையத்திலிருந்து சுமார் 100மீற்றர் தூரத்திலுள்ள அரச முறிப்புப் பகுதியில் விளாத்திக்குளம் செல்லும் முதன்மை வீதியில் நடந்தது. வீதியோரத்தின் ஒதிய மரத்திலிருந்த குளவிக் கூடு, கடுங்காற்றினால் கலைந்தது. வீதியால் சென்ற மூவரைக் குளவிகள் கொட்டின. பாதிக்கப்பட்ட மூவரும் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

அந்தப் பகுதியில் கடந்த சில மாதங்களுக்கு முன்னரும் குளவிக் கூடு கலைந்து, அந்த வீதியால் சென்ற இருவர் குளவிக் கொட்டுக்கு இலக்காகினர். ஒதிய மரத்திலுள்ள குளவிக் கூட்டை அகற்றி, அந்த வீதியால் செல்வோருக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ஜ-10)

# படையினர், பொலிஸாருக்கு மட்டக்களப்பில் 39 வீடுகள்

**ரணவிரு சேவா அதிகார சபை நடவடிக்கை**

மட்டக்களப்பு, செப். 18

போர் இடம்பெற்ற காலப்பகுதியில் உயிரிழந்த அல்லது சம்பவங்களின்போது அங்கவீனமடைந்த படையினர் மற்றும் பொலிஸாரின் குடும்பங்களுக்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் 39 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

அதற்கான நடவடிக்கைகளை ரணவிரு சேவா அதிகார சபை மேற்கொண்டு வருகின்றது என்று சபையின் மாவட்ட அலுவலர் ரி.எச். கீர்திகா ஜயவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பாக ஊடகங்களுக்கு நேற்றுக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

போர் இடம்பெற்ற காலப்பகுதியில் உயிரிழந்த, காணாமல் ஆக்கப்பட்ட, அல்லது சம்பவங்களின்போது அங்கவீனமடைந்த படையினர் மற்றும் பொலிஸாரின் 136 குடும்பங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது வரை இனங்காணப்பட்டுள்ளன. அந்தக் குடும்பங்களுக்காக சேமநலன்களை ரணவிரு சேவா கவனித்து வருகின்றது. அதனடிப்படையில் தெரிவு செய்யப்பட்டோருக்கான வீடமைப்புத் திட்டம் தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

ஒவ்வொரு வீட்டுக்கும் தலா 22 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவிடப்படுகிறது. இந்த வீடுகளை நிர்மாணிக்கும் திட்டம் கடந்த ஜூன் மாதம் 19 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. தற்போது நிர்மாணப்பணிகள் இறுதிக் கட்டத்தில் உள்ளன. அமைக்கப்பட்ட வீடுகள் நவம்பர் மாதம் பயனாளிகளிடம் கையளிக்கப்படவுள்ளன. வாழைச்சேனை, ஏறாவூர், மட்டக்களப்பு நகர், காத்தான்குடி, களுவாஞ்சிக்குடி, பட்டிப்பளை மற்றும் மங்களகம ஆகிய இடங்களில் 19 வீடுகள் தமிழ் குடும்பங்களுக்கும், 19 வீடுகள் முஸ்லிம் குடும்பங்களுக்கும், ஒரு வீடுசிங்களக் குடும்பத்துக்கும் வழங்கப்படும். ரணவிரு குடும்பங்களின் சேவைகளை விரிவாக்கும் நோக்கில் மேலும் தேவையுள்ள பயனாளிக் குடும்பங்களுக்கு வீடமைப்பு உள்ளிட்ட பல்வேறு சேவைகள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன - என்றார்.

(ஜ-10, 46)



# எமது சொந்த மண்ணில் ஏதிலிகளாக வாழும் நிலைமை

## கேப்பாபிலவு மக்கள் வேதனை

முல்லைத்தீவு, செப்.18

எமது சொந்த மண்ணிலேயே நாம் ஏதிலிகளாக வாழும் நிலமையில் இருக்கிறோம். போராட்ட காலத்தில் பட்ட துன்பங்களை விட, அதிக துன்பத்தைத் தற்போது அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம். இனியும் எங்களுக்கு இந்த நிலமை வேண்டாம். எங்களை எமது சொந்த நிலத்தில் குடியமர அனுமதியுங்கள்.

இவ்வாறு கேப்பாபிலவில் காணி விடுவிப்புக் கோரி தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்கள் தெரிவித்தனர்.

கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதி கேப்பாபிலவு இராணுவ முகாமுக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட போராட்டம், ஆறு மாதங்களைக் கடந்துள்ளது.

" பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் தொடர் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றோம். இராணுவத்தினர் மற்றும் தமிழ் மக்கள் பிரதிநிதிகளைச் சந்தித்து எமது போராட்டத்துக்குத் தீர்வு பெற்றுத் தருமாறு கேட்க இருக்கின்றோம். எமது காணிகளுக்குள் கால் பதிக்கும் வரை நாம் போராட்டத்தை நிறுத்தப் போவதில்லை. இது எமது பூர்வீக நிலத்தை விடுவிப்பதற்கான போராட்டமேயன்றி, அரசுக்கோ, படையினருக்கோ எதிரானதல்ல. தம்மை நல்லாட்சி அரசு என் அடையாளப்படுத்துபவர்கள், மக்களுடைய சொந்த நிலத்தை விடுவிப்பதற்கு எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காமை வேதனை தருகிறது" என்று கேப்பாபிலவு மக்கள் தெரிவித்தனர்.

(ஜ)

# வந்தாறுமூலை வளாகத்தில் நாளை கற்றல் செயற்பாடுகள்

மட்டக்களப்பு, செப். 18

கிழக்குப் பல்கலைக் கழகம் வந்தாறுமூலை வளாகத்தில், கடந்த 3 மாதங்களாக இடம்பெற்றுவந்த அசாதாரண சூழ்நிலை முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதையடுத்து, இறுதியாண்டு மாணவர்களுக்கான கற்றல் செயற்பாடுகள் நாளை முதல் ஆரம்பமாகும் என கிழக்குப் பல்கலைக்கழக பிரதி உப வேந்தர் மருத்துவ கலாநிதி கே.ஈ. கருணாகரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

"கடந்த 8ஆம் திகதி கிழக்குப் பல்கலைக்கழகப் பேரவை, மத்திய குழு மற்றும் மாணவர் பிரதிநிதிகள் ஆகியோருக்கிடையில் இடம்பெற்ற முத்தரப்புப் பேச்சுக்களின் விளைவாக, மாணவர்களின் பிரச்சினை முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. இறுதியாண்டு மாணவர்கள் இன்று பல்கலைக்கழக விடுதிகளுக்கு வருகை தர வேண்டும். நாளை கற்றல் செயற்பாடுகள் ஆரம்பமாகும். அதேவேளை ஏனைய முதலாமாண்டு, இரண்டாமாண்டு, மூன்றாமாண்டு மாணவர்களின் அனைத்துக் கற்றல் செயற்பாடுகளும் ஒக்ரோபர் 2ஆம் திகதி ஆரம்பமாகும்" என்றும் அவர் தெரிவித்தார்.

(ஜ-10, 46)

உங்கள் பிரதேசங்களில் நடக்கும் நிகழ்வுகளை உலகறியச் செய்ய எமக்கு அனுப்புங்கள்



உதயன் DIGITAL
newuthayan.com
Leading Tamil News website in Sri Lanka
(+) 94 77 316 5555

## மின்சார சபை ஊழியர்கள் நேற்றும் பணிப்புறக்கணிப்பு

கொழும்பு.செப்.18

நாடளாவிய ரீதியில் இலங்கை மின்சாரசபை ஊழியர்களால் முன்னெடுக்கப்படும் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் நேற்று 5ஆம் நாளாகவும் முன்னெடுக்கப்பட்டது.

மூன்று கோரிக்கைகளை முன்வைத்து கடந்த 13 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் தொடர்பாக பல பேச்சுக்கள் இடம்பெற்றன. எனினும் பேச்சுக்களில் தீர்வுகள் எட்டப்படாத நிலையில் ஊழியர்கள் நேற்றும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

“மின்சார சபை ஊழியர்களுக்கு எதிராக அரசு எந்தவிதமான நடவடிக்கையை எடுத்தாலும், எமது கோரிக்கைகளுக்கு உரிய தீர்வு கிடைக்கும் வரை வேலைநிறுத்தப் போராட்டம் தொடரும். தீர்வு கிடைக்காவிடில் மின்சார சபையை முன்றுகையிட்டுப் போராட்டம் நடத்துவோம்” என்று இலங்கை மின்சார சபைத் தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

**பணிக்குத் திரும்ப அழைப்பு**

பொதுமக்களின் நலனைக் கருத்திற் கொண்டு மின்சார சபை ஊழியர்களை உடனடியாகப் பணிக்குத் திரும்புமாறு மின்சார சபை அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய வேண்டுகோள் விடுத்துள்ளார்.

“கடந்த 5 நாள்களாக இலங்கை மின்சார சபை ஊழியர்கள் மூன்று அம்சக் கோரிக்கையை முன்வைத்து பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர். அதனால் பொதுமக்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகி இருப்பதுடன், பல்வேறு அத்தியாவசிய சேவைகளும் தடைப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

பணிப்புறக்கணிப்பைக் கைவிட்டு, உடனடியாக ஊழியர்கள் கடமைக்குச் சமுகமளிக்கவும். ஊழியர்களின் கோரிக்கைகள் தொடர்பில் பேச்சு மூலம் இணக்கப்பாடு ஒன்றை எட்டலாம். சில கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்ற முடியாது. கட்டம் கட்டமாக அவற்றை நிறைவேற்ற சிறிது காலம் எடுக்கும் என்பதைப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும். மனிதத்தன்மை இல்லாத இந்தப் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் பங்கேற்காத இலங்கை மின்சார சபை ஊழியர்களுக்கு எனது அமைச்சரவை சார்பில் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்” என்று அவர் தெரிவித்துள்ளார்.

**மின்மாற்றிகளுக்கு பொலிஸ் பாதுகாப்பு**

மின்சார விநியோக மின்மாற்றி நிலையங்களுக்குப் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது என்று மின்சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

தமது பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்காவிட்டால் மின்சக்தி அமைச்சை முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்தவுள்ளனர் என்று ஊழியர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். அதன் காரணமாக மின்சார விநியோக மின்மாற்றி நிலையங்களுக்குப் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது என்று மின்சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது. சில பகுதிகளில் மின்விநியோகக் கம்பிகளை அறுக்கும் விசமச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ஐ)

பத்திரிகைகளில் பெயர் வரவேண்டுமென்பதற்காக

# விளங்காமல் சிலர் அரசியலில் கொக்கரிப்பு

## மாவை எம்.பி. விசனம்

யாழ்ப்பாணம், செப். 18

“இங்குள்ளசிலர்பத்திரிகைகளில்தமது பெயர்கள்வரவேண்டும்என்பதற்காக ஒன்றுமே தெரியாமல் எமக்கு அ.ஆ. படிப்பிப்பதுபோலகருத்துக்களைக்கூறி வருகின்றனர். இளையோர் சிலரும் இவ்வாறுநடந்துகொள்கின்றனர். இது தான் எமது அரசியலில் உள்ள பிரச்சினை. நாம்கூட்டாட்சியைக்கைவிட்டு விட்டோம்.வடக்கு-கிழக்குஇணைப்பை கைவிட்டுவிட்டோம். தலைமையைத் தூக்கி எறிய வேண்டும் என்றும் ஒன்றுமே விளங்காமல் சிலர் கொக்கரிக்கின்றனர்”

இவ்வாறு இலங்கைத் தமிழரசுக்கட்சியின்தலைவரும்நாடாளுமன்றஉறுப்பினருமான மாவை. சோ. சேனாதிராசா சீற்றத்துடன் தெரிவித்தார்.

கோப்பாய் கோமான் வன்னியசிங்கத்தின் 57ஆவது நினைவுப் பேருரை கோப்பாய் வடக்கு சித்திரவேலாயுதர் கோவில் மண்டபத்தில் நேற்று இடம் பெற்றது. அதில்கலந்துகொண்டுஉரையாற்றுகையில்அவர்மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இளையோருக்கு சில விளக்கங்களை நாம் வழங்க வேண்டிய தேவை உள்ளது. அரசியல் என்பது எமது மண்ணில் எவ்வாறு அர்ப்பணிப்புடன் பயணிக்கின்றது என்பதற்கு தமிழ் அரசுக் கட்சி சிறந்த உதாரணமாக இருக்கும். எமது மக்களின் விடுதலைக்காகவே கட்சி ஆரம்பகாலத்திலிருந்து பயணித்துக்கொண்டிருக்கின்றது. அதில்வன்னியசிங்கம் முக்கிய பங்கு வகிக்கின்றார். தந்தைசெல்வாநாடாளுமன்றத்தேர்தலில் தோற்றபோதிலும் வன்னியசிங்கம் கோப்பாய் தொகுதியில் வெற்றி பெற்றிருந்தார்.

முன்னைய காலத்தில் தமிழ் அரசுக் கட்சியின் கூட்டங்களில்சிலர் விசமத்தனமான குழப்பங்களை செய்ய முயற்சித்த துண்டு. அந்தச் செயற்பாடுகள் இப்போதும்அதிகமாகக்காணப்படுகின்றன. அதுஒருபிரச்சினையல்ல. இலங்கையில்தனிச்சிங்களச்சட்டம்கொண்டுவரப்பட்டபோதுகொழும்பில்நாடாளுமன்ற வளாகத்துக்கு முன்பாகவும் காலி முகத்திடலிலும் குருதி சிந்திப் போராட்டம்செய்தவர்கள்தமிழ்அரசுக் கட்சிக்காரர்கள் என்பதை மக்கள் அறிவார்கள்.

மிகக்குறைந்த எண்ணிக்கையைக் கொண்ட ஒரே தேசிய இனம் ஈழத்தமிழர்கள்தான். அவர்களில் ஏராளமானோர் சுய நிர்ணய உரிமையுடன் வாழ வேண்டும் என்பதற்காக அகிம்சைப்போராட்டங்களையும்ஆயுதப் போராட்டங்களையும் நடத்தி தமது இன்னுயிர்களைத்தியாகம்செய்துள்ளனர்.

வன்னியசிங்கம்நாடாளுமன்றஉறுப்பினராக இருந்தபோது குருதி சிந்திய நிலையில் தனது உள்ளாடையுடன் நாடாளுமன்றில் உரையாற்றினார். காலி முகத்திடலில் அவர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டனர்.

தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தில் எமது உச்சப் பலம் விடுதலைப்புலிகள் ஆயுதம் ஏந்திப்போராடிய காலத்திலேயே இருந்தது. அதனை யாராலும் மறுக்க முடியாது. நாம் அதில் நேரடியாகப் பங்கு பற்றாவிட்டாலும் நாம் அவர்களுடன் புரிந்துணர்வுடன் பயணித்தோம்.

தற்போது நாம் பன்னாட்டின் உதவியுடன்பயணித்துவருகின்றோம். தமிழர்களுக்கான சுய உரிமை விடயத்தில் இந்த அரசும் ஏமாற்றும் வகையில் செயற்பட்டால் வடக்கு கிழக்கு ரீதியாக இந்த நாட்டில் கூட்டு அரசு மட்டுமல்ல எந்த ஆட்சியும் நடைபெறாத நிலமை ஏற்படும். அந்தவேளையில் ஐ.நாவும் வெளிநாடுகளும்எமக்குப்பக்கபலமாக இருக்க வேண்டும் என்று கோரியுள்ளோம்.

தமிழர்களுக்குக் கிடைத்துள்ள அரசியல் சந்தர்ப்பத்தை மூழ்கடிக்க சிலர் முயற்சித்து வருகின்றனர். எமது கட்சியின்கொள்கைமற்றும்கடந்தமாகாண சபைத் தேர்தலின்போது முன்வைத்த அறிக்கையில் கூட்டாட்சி பற்றி பேசியுள்ளோம்என்றுகூறிசிங்களதீவிரவாதிகள் எம்மீது வழக்கு தாக்கல் செய்தனர். ஆனால் எமக்கு நீதிமன்றில் நீதி கிடைத்துவிட்டது.



தற்போதையஅரசமைப்புஉருவாக்கத்தில் தென்னிலங்கைத் தலைவர்கள் கூட்டாட்சியைஏற்கமாட்டார்கள்என்று கூறிவரும் நிலையில் நாமும் ஒற்றையாட்சியை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதில்வைராக்கியமாகஉள்ளோம். இந்த நாட்டில் உள்ள ஒன்பது முதலமைச்சர்களும் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும்என்பதில்திடமாகஇருக்கின்றனர். ஆகவே நாம் பெறவிருக்கும் அதிகாரத்தைக் கொழும்பு அரசு மீளப் பெறமுடியாத வகையான ஏற்பாடுகள் உள்ளன. சில சிங்கள தீவிரவாதிகள் கூட்டாட்சியைப் பிரிவினைவாதம் என்று கூறி வருகின்றனர். எதிர்வரும் 21 ஆம் திகதி புதிய அரசமைப்பின் இடைக்கால அறிக்கை வரும்போது சொல்லப்படும் வார்த்தையில் அனைவரும் அதனை விளங்கிக்கொள்வர். வடக்கு-கிழக்குஇணைப்புத்தொடர்பில் தமிழ்முஸ்லிம்மக்கள்ஒருபுரிந்துணர்வுக்குவந்துள்ளனர்.முழுமையாகஅதனை இணைக்கநாம்அனைத்துமுயற்சிகளையும் எடுத்து வருகின்றோம்.

“இந்த நாட்டில் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும். பகிரப்பட்ட அதிகாரங்கள் கொழும்பு அரசால் மீளப்பெறமுடியாத ஏற்பாடுகள்செய்யப்படவேண்டும்என்பதில் இந்த நாட்டின் அனைத்து தரப்புகளும் உறுதியாக உள்ளது.

வடக்கு கிழக்கு இணைப்பு இடம்பெற வேண்டும் என்பதை, தமிழ் அரசுக் கட்சிக்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்கின்தீர்ப்புஎடுத்துக்காட்டுகின்றது - என்றார்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண அவைத்தலைவர் சி.வி.கே. சிவஞானம், மாகாண சபை உறுப்பினர்கள் உள்ளிட்டபலரும்கலந்துகொண்டனர். (உ-வ-4-8-32)

## நாய் கடித்துக்குதறி 7 நாள் சிசு இறப்பு

கொழும்பு,செப்.18

நாயொன்று கடித்துக் குதறியதால், பிறந்து 7 நாள்களேயான சிசு உயிரிழந்தது.

இந்தத் துயரச் சம்பவம் ஹபரண, நாமல்துவப் பகுதியில் நேற்று நடந்தது. வீட்டில் நித்திரையில் இருந்த சிசுவை நாய்கடித்துக்குதறியது. அதையடுத்து படுகாயங்களுடன் ஹபரண மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட சிசு மேலதிக சிகிச்சைக்காக தம்புள்ளை மருத்துவமனைக்கு மாற்றப்பட்டது. அங்கு சிகிச்சை பயனின்றி சிசு உயிரிழந்தது எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ க.1)

## மரத்திலிருந்த வீழ்ந்த மாணவனுக்குக் காயம்

சாவகச்சேரி,செப்.18

நாவற்பழம் பிடுங்க மரத்தில் ஏறிய மாணவன் கைதவறிக் கிழே வீழ்ந்தான். அதில் அவனது கைமுறிந்தது எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் மிருசுவில் வெட்டுவெளிப் பகுதியில் நேற்று நடந்தது. அதே இடத்தைச் சேர்ந்த சிவகுமார் மயூரன் ( வயது -12) என்பவருக்கே கைமுறிந்தது. மாணவன் சிகிச்சைக்காக சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ-9)



## பன்னாட்டு லயன்ஸ் கழக மரநடுகை வாரம் ஆரம்பம்

சாவகச்சேரி , செப். 18

பன்னாட்டு லயன்ஸ் கழகங்களின் 306 பி 1 மாவட்டத்தின் மரநடுகை வாரம் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

அதன் ஆரம்ப நிகழ்வாக சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட 20 சனசமூக நிலையங்களில் நேற்று மரக்கன்றுகள் நடப்பட்டன.

கழகத் தலைவர் லயன் உ.சிசில் றெமின்டஸ், சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் உறுப்பினர்களான லயன் வீ.மகாலிங்கம், லயன் செ.சுப்பிரமணியம், லயன் இ.கோகுலன், லயன் கா.சற்குணதேவன் உட்பட பலர் கலந்து கொண்டு மரங்களை நட்டனர்.

இந்த வாரத்தில் தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள பொது அமைப்புகளுக்கு மரக்கன்றுகள் வழங்கப்படும் என்று சாவகச்சேரி லயன்ஸ் கழகம் தெரிவித்தது. (ஐ-9)



இரணைப்பாலைப் பகுதியில் வீசிய சுழல் காற்றினால் இரணைப்பாலை சென் அன்ரனீஸ் விளையாட்டுக் கழகத்தின் பொருள்கள் பாதுகாக்கும் கட்டடத்தின் கூரை முற்றாகத் தூக்கி வீசப்பட்டது. அதனை அண்மித்த பகுதியில் குடியிருக்கும் மக்களின் வீடுகளும் பகுதியளவில் சேதமைடைந்தன எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# வடமராட்சி கிழக்கில் சீரற்ற போக்குவரத்து

## நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

கரணவாய் செப் 18

வடமராட்சி கிழக்குக்கான போக்குவரத்து சீரின்மை யால் அரச அலுவலர்கள் உட்பட அப்பகுதிக்குச் செல்லும் பலரும் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட் டது.

வடமராட்சி கிழக்குப் பேருந்து சேவைகள் சீரின்மையால் பொதுமக்கள் பாதிக்கப்படுவதாக அரச அதிகாரிகளுக்கு பலமுறை சுட்டிக்காட்டப்பட்டுள்ள போதிலும் உரியவர்கள் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை எனப் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாகக் காலை நேரத்தில் பேருந்து சேவைகள் சீரின்மையாக உள்ளதாகவும் வடமராட்சி கிழக்குக் குப் பயணிப்பவர்கள் பாடசாலைப் பேருந்துச் சேவையில் அதிகாலையிலேயே பயணிக்க வேண்டியுள்ளது. இதனால் இந்தப்பகுதிக்கு அன்றாடம் கடமைகளுக்குச் செல்கின்ற சாமானிய மக்களும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களில் பணியாற்றுகின்றவர்களும் வியாபாரிகளும் பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அதிகாலை நேர பாடசாலைச் சேவைப் பேருந்தினைத் தவறவிடுகின்றவர்கள் உரிய நேத்தில் கடமைகளுக்குச் சமுகமளிக்க முடியாமல் பரிதவிக்கின்றனர். இதனால் பயணிகள் புதுக்காட் டுச் சந்தியில் இருந்து முச்சக்கர வண்டிகளில் பெருந்தொகையான பணத்தைக் கொடுத்துச் செல்லவேண்டி உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்விடயம் தொடர்பாக அரச போக்குவரத்து அதிகாரிகளுக்குத் தெரிவித்துள்ள போதிலும் அவர்கள் எந்தவொரு நடவடிக்கையும் கடந்த ஒருவருடமாக எடுக்கவில்லை எனவும் பிரதேசத்தில் கடமையாற்றுகின்ற அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் இந்தவிடயத்தில் அக்கறையுடன் செயற்பட வேண்டும் எனவும் பொது மக்கள் கேட்டுக் கொண்டனர். (21-108)

## வல்லிபுர ஆழ்வார் வருடாந்தத் திருவிழா புதனன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப்.18

வரலாற்றுச்சிறப்பு மிக்க வடமாரட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த பெரும் திருவிழா நாளைமறுதினம் புதன் கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பாகி 17 தினங்கள் நடைபெற உள்ளது.

எதிர்வரும் 26ஆம் திகதி செவ்வாய்க்கிழமை 7ஆம் திருவிழா வரை சுவாமி உள்வீதி உலாவும், 27ஆம் திகதி புதன் கிழமைமுதல் அடுத்தமாதம் 6ஆம் திகதி வரை சுவாமி வெளிவீதி உலாவும் இடம்பெறும்.

முக்கிய திருவிழாக்களான குருக்கட்டு விநாயகர்தரிசனம் 27ஆம்திகதி புதன்கிழமையும், வெண்ணைய்த்திருவிழா 28 ஆம் வியாழக் கிழமையும், துகில் திருவிழா 29ஆம்திகதிவெள்ளிக்கிழமையும், பாம்புத் திருவிழா 30 ஆம் திகதி சனிக்கிழமையும், ஹம்சன் போர் திருவிழா அடுத்த மாதம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமையும், வேட்டைத்திருவிழா 2 ஆம் திகதி திங்கட்கிழமையும், சப்பறத்திருவிழா 3 அம் திகதி செய்வாய்க்கிழமையும், தேர்த்திருவிழா 4 ஆம் திகதி புதன்கிழமையும், சமுத்திரத்தீர்தத்திருவிழா 5ஆம் திகதி வியாழக்கிழமையும், கேணித் தீர்த்திருவிழா 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் நடைபெற உள்ளன. அன்றையதினம் மாலை 5 மணிக்கு கொடி இறக்கத்துடன் பெரும் திருவிழா நிறைவுபெறும்.

வடக்கு வெளிவீதியில் சுவாமி உலாவரும் போது கற்கோவளம் அறநெறிப்பாடசாலை மாணவர்கள் பங்கேற்கும் நிகழ்ச்சி ஒன்று அந்நாள் திருவிழா கருத்தை சித்தரிக்கும் முறையில் இடம்பெறும். பெரும்திருவிழாவின் பகல் திருவிழா காலை 8 மணிக்கும் இரவுத்திருவிழா மாலை 4.30 மணிக்கும் தினமும் ஆரம்பாகும்.

பெரும் திருவிழா காலத்தில் பருத்தித்துறை மந்திகை ஊடாக வல்லிபுர கோயில், பருத்தித்துறை தும்பளை ஊடாக வல்லிபுர ஆழ்வார் கோயில், யாழ்ப்பானம் வல்லிபுர கோவில் ஊடாக பருத்தித்துறை ஆகிய பாதைகளில் சிறப்பு பஸ் சேவைகள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன.

சமயக் கோட்பாடுகளுக்கும் கலாசாரத்துக்கும் அமைவாக அடியவர்கள் உடைகள் அணிந்து தங்க ஆபரணங்கள் அணிவதை தவிர்த்து திருவிழாக்களில் கலந்து கொள்ளுமாறு ஆலய அறங்காவலர்சபை வேண்டுகோள் விடுத்துள்ளது. (ய-173)



பாடசாலை அதிபர்களுக்கான சிறப்புச் செயலமர்வு யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. வடக்கு மாகாணப் பாடசாலைகளில் 2017 ஆம் ஆண்டு ஜீ.சி.ஈ.சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகளின் அடைவு மட்டத்தை உயர்த்தும் நோக்கில் வடக்கு மாகாணத்தில் உள்ள 12 கல்வி வலயங்களின் அதிபர்களுக்கு இந்தச சிறப்பு செயலமர்வு இடம்பெற்றது. (21-10)

## கே.கே.எஸ். வீதியில் வடிகால் சீரமைப்பு

யாழ்ப்பாண நகரின் கே.கே.எஸ்.சாலையில் வெள்ளம் தேங்காதவாறு சாலையோரத்தில்வடிகால் வாய்அமைக்கும்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக இந்துக் கல்லூரிச்சந்திக்கு அருகில்மழை காலத்தில் வெள்ளம் அதிகளவில் தேங்கி நிற்கும். இதனால் சாலையோரம் பயணிப்போர் சிரமப்பட்டு வருகின்றனர். குறிப்பாக மாணவர்கள் அதிகம் சிரமப்பட்டனர். இதனால் சாலைஅபிவிருத்திஅதிகாரசபைகே.கே.எஸ்.சாலையோரமாக வெள்ளம் வழிந்தோட வசதியாக கால்வாய் அமைக்கும் பணியில்ஈடுபட்டுவருகின்றது என்று அதிகாரசபையின் தலைமைப் பொறியியலாளர் தெரிவித்தார்.

இதேசமயம் வடிகால் வாய் அமைப்பதில் தாமதம் ஏற்பட்டால் மழைகாலத்தில் வெள்ளம் தேங்கி நிற்காதவாறுமாற்றுஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என்றுமாநகரஆணையாளர் தெரிவித்தார். கடந்த ஆண்டைப் போன்று இந்த ஆண்டிலும் நீர் இறைக்கம் மோட்டார் மூலம் வெள்ளம் அகற்றப் படும்என்றும்ஆணையாளர் கூறினார். (ய-17)

## பெறுமதியான பொருள்கள், பணம் பருத்தித்துறையில் திருட்டு

யாழ்ப்பாணம், செப். 18

பருத்தித்துறையில் சிவன் கோயிலை அண்மித்துள்ள நிறுவனம் ஒன்றில் மடிகணினிகள் உள்ளிட்ட பொருள்கள் திருடப்பட்டுள்ளன என்று பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை இரவு திருட்டு இடம்பெற்றுள்ளது. நிலையத்தின் முன்பக்க வாசல் கதவைப் பிரித்து உள்ளே சென்று 2 மடிகணினிகள், 15 அலைபேசிகள் மற்றும் 90 ஆயிரம்ரூபாபணம்திருடப்பட்டுள்ளன என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் எவரும் கைது செய்யப்படவில்லை. விசாரணை மேற்கொண்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (4-26)

## யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டம் இன்று

யாழ்.மாவட்டத்தின்இவ்வாண்டுக்கானமூன்றாவது மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று 18ஆம் திகதி திங்கள்கிழமை இடம்பெறும். இதற்கானஏற்பாடுகளைமாவட்டச்செயலாளர்நா.வேதநாயகன்மேற்கொண்டுள்ளார்.

2017இல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றஅபிவிருத்தித்திட்டங்களின்31.08.2017 வரையான முன்னேற்ற அறிக்கை, அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றுவதில் உள்ள தடைகள், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் அனுமதி பெறவேண்டிய விடயங்கள் இதன்போது ஆராயப்படும்.

அத்துடன்கடந்த மே30இல்நடைபெற்றகூட்டத்தின் தீர்மானத்துக்கு அமைய மாவட்ட மட்டத்தில் கலந்துரையாடப்பட வேண்டிய விவரங்களை அனுப்பிவைக்குமாறு திணைக்களத் தலைவர்களுக்குமாவட்டச் செயலாளர்கேட்டுக்கொண்டுள்ளார்எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. (ய-50)

# கோப்பாய் தேசிய கல்வியியற்கல்லூரியில் முத்தமிழ் விழா

யாழ்ப்பாணம்.செப்.18

"இலங்கைத்தமிழர் வரலாறு, பண்பாட்டை அர்த்தப்படுத்துவோம்" எனும் தொனிப்பொருளிலான முத்தமிழ் விழா கோப்பாய் தேசிய கல்வியற் கல்லூரியில் அண்மையில் இடம்பெற்றது.

நிகழ்வுகள் கல்லூரியின் பீடாதிபதி ச.அமிர்தலிங்கம் தலைமையில் கல்லூரிக் கலையரங்கில் நடைபெற்றது. இதில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தகை சார் பேராசிரியர், வேந்தர் சி.பந்தமநாதனும், அவரது பாரியார் திருமதி பத்மலீலா பத்மநாதனும், சிறப்பு விருந்தினர்களாக கொழும்புத்தமிழ்ச்சங்கத் தலைவர் த.சிவசுப்பிரமணியமும், பம்பலப்பிட்டி பெல்வோர் பன்னாட்டுப் பாடசாலை ஆசிரியை ச.கணபதிப்பிள்ளையும் கலந்து கொண்டனர். மாணவர்களின் கலை நிகழ்வுகள் மற்றும் "வீர சங்கிலி "சிறப்பு மலர், "வீர சங்கிலியன்" நூல்கள் ஆகியன வெளியீட்டு வைக்கப்பட்டன.(21.ரி)







# மாற்றுத் திறனாளியின் பத்து ஆடுகள் திருட்டு

## பருத்தித்துறையில் சம்பவம்

யாழ்ப்பாணம், செப்.18
மாற்றுத்திறனாளி ஒருவரின் பத்து ஆடுகள் திருடப்பட்ட சம்பவம் ஒன்று நேற்றுமுன்தினம் இரவு பருத்தித்துறையில இடம் பெற்றுள்ளது.

அவரது வாழ்வாதாரமாகக் காணப்பட்ட 10 நல்லின ஆடுகளே இவ்வாறு இரவோடிரவாகத் திருடப்பட்டுள்ளன.

அவற்றின் பெறுமதி சுமார் 3 லட்சம் ரூபாவுக்கும் அதிகமானது என்று தெரிவிக்கப்பட்டது.

மாற்றுத்திறனாளியான மேற்படி நபருக்கு வேறு வருமானமில்லை.

அதனால் தனது வாழ்வாதாரத்துக்காக வழங்கப்பட்ட நல்லின ஆடுகளை வைத்து அவற்றின் எண்ணிக்கையைப் பெருக்கி வருமானமீட்டி வந்துள்ளார்.

சம்பவதினம் இரவு படுக்கைக்குச் சென்றவர் காலையில் எழுந்த பின்னரே ஆடுகள் திருட்டுப்போயுள்ளதை தெரிந்து கொண்டார்.

அவரது வீட்டுக்குப் பின்புறமாக கொட்டில் அமைக்கப்பட்டு அதில் ஆடுகளை வளர்த்து வந்துள்ளார்.

சம்பவம் தொடர்பான முறைப்பாட்டை அடுத்து பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(ய-426)

# யாழ்.மண்டிகைக்குளம் சீரமைப்பு: சுற்றுலாத் தளமாக்கவும் நடவடிக்கை



யாழ்ப்பாணம், செப்.18
சங்கானை மண்டிகைக் குளம் சுற்றலாப் பயணிகளைக் கவரும் வகையில் சீரமைக்கப்பட்டு வருகின்றது.

இக்குளத்தை மையப்படுத்தி அப்பிரதேசத்தை சுற்றுலாத் தளமாக அபிவிருத்தி செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுதொடர்பில் வலி.மேற்குப் பிரதேச செயலாளர் கமநல சேவைகள் திணைக்களத்துடன் பேச்சுக்களில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் தெரிவிக்கப்பட்டதாவது:
மண்டிகைக்குளத்தை ஆழமாக்கும் வேலைகள் நடைபெற்று வருகின்றன.
ரூபா 40 இலட்சம் செலவில் தொல்புரம், கமநல சேவை நிலையத்தால் வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அரச தலைவர், தலைமை அமைச்சர் மற்றும் முன்னாள் அரச தலைவர் சந்திரிகா ஆகியோரின் சமூக வழிகாட்டலின் கீழ் வேலைகள் இடம்பெற்று வருகின்றன. எதிர்வரும் காலங்களில் இந்தக் குளத்தின் மூலம் போதியளவு மழைநீரைத் தேக்கி வைத்துக் கொள்ள முடியும். அத்தோடு குளத்தை அண்டிய வயல், தோட்டக்காணிகளுக்கு தேவையான நேரத்தில் நீரைப் பெறமுடியும்.

மாவட்டத்தில் நிலவிய கடும் வறட்சியால் மண்டிகைக் குளம் வற்றிக் கட்டாந்தரையாகக் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. (ய-21-29-50)

# ஆறு சாலைகள் ஒன்றிணையும் சந்திக்கு மின்விளக்கு இல்லை

## சங்கத்தானையில் இந்த அவலம்

யாழ்ப்பாணம், செப்.18
சாவகச்சேரி சங்கத்தானை தொடருந்து நிலையத்திற்கு அருகில் ஆறுசாலைகள் ஒன்றிணையும் சந்தியில் சாலை மின்விளக்குகளைப் பொருத்துமாறு பொதுமக்கள் நகரசபையிடம் கோரிக்கை விடுக்கின்றனர்.

இதுதொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:
அப்பகுதியில் மீனாட்சியம்மன் சாலை, சாரதா சாலை, கயிலாயபிள்ளை சாலை, பெருங்குளம் சாலை மற்றும் இந்துக் கல்லூரியின் பின்புறமாக உள்ள சாலை ஆகியவை முதன்மைச் சாலையுடன் இணைகின்றன. இந்தச் சந்தியில் ஏற்கனவே மின்விளக்கு பொருத்தப்பட்டிருந்தது. அது விசமிகளால் உடைத்து நொருக்கப்பட்டது. அதற்குப் பின்னர் இன்னமும் இங்கு மின்விளக்கு பொருத்தப்படாமல் உள்ளது.

இந்த ஐந்து சாலைகளிலிருந்தும் நடந்து, சைக்கிள்களில் வருகின்ற பொதுமக்கள் இரவுவேளைகளில் விபத்துகளில் சிக்கும் அபாயம் உள்ளது. ஏ - 9 சாலையுடன் இணைந்துள்ள வர்த்தக நிலையங்களின் மின்வெளிச்சத்தின் உதவியுடன் மக்கள் நடமாடுகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதுதொடர்பாக சாவகச்சேரி நகரசபைச் செயலாளருடன் தொடர்புகொண்டபோது:
விரைவில் மின்விளக்குள் பொருத்த நடவடிக்கை எடுக்கப்படும எனத் தெரிவித்தார். (ய-9)

# வறட்சி உதவிகள் பெயர்ப் பட்டியல் ஆங்கில மொழியில்

## பொதுமக்கள் விசனம்

தென்மராட்சி, செப்.18
தென்மராட்சிப் பிரதேசத்தில் வறட்சி உதவிப் பொருள்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

எனினும் இந்தப் பொருள்களைப் பெறுவதற்கு ஆங்கிலம் தெரிந்தவர்களை அழைத்துவர வேண்டி ஏற்பட்டுள்ளது என பொதுமக்கள் விசனமடைகின்றனர்.

இதுதொடர்பாக தெரிவிக்கப்பட்டதாவது:
தென்மராட்சிப் பிரதேச செயலர்பிரிவுக்குட்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச்சங்க கிளைக் கடைகளில் வறட்சி நிவாரணப் பொருள் கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இதுதொடர்பான பெயர்ப்பட்டியல் பிரதேச செயலகத்தினால் பலநோக்கக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

எனினம் அப்பட்டியல் ஆங்கில மொழியில் காணப்படுகின்றது. ஆங்கில மொழியில் காணப்படுவதால் தமது பெயர் உள்ளதா எனப் பார்க்க முடியாமல் மக்கள் திண்டாடுகின்றனர்.

இதனால் பலர் ஆங்கில மொழி தெரிந்தவர்களை சங்கத்துக்கு அழைத்து வந்து பட்டியலில் பெயர் உள்ளதா எனப் பார்க்கின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுகிறது.

கிளை முகாமையாளர்கள் பொருள்கள் விநியோகிப்பதில் மும்முரமாக உள்ளனர்.

இதனால் பொதுமக்கள் மொழி தெரிந்தவர்களை அழைத்து வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

எனவே, அடுத்தமுறை நிவாரணப் பொருள்கள் வழங்கும்துபோது பெயர்ப் பட்டியலை தமிழ்மொழியில் அனுப்பி வைக்குமாறு பிரதேச செயலகத்திடம் பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

(ய-9)

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சாவகச்சேரி | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | 80 | 80 | 60 | 50 |
| கத்தரி | 120 | 120 | 140 | 100 | 120 |
| மரவள்ளி | 80 | 80 | 80 | 60 | 70 |
| பயிற்றை | 120 | 160 | 100 | 120 | 140 |
| பாகல் | 180 | 280 | 220 | 300 | 180 |
| க.கிழங்கு | 100 | 100 | 100 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 120 | 120 | 130 | 140 | 120 |
| சி.வெங்காயம் | 240 | 200 | 180 | 140 | 240 |
| பூசணி | 40 | 40 | 40 | 50 | 30 |
| தக்காளி | 180 | 200 | 160 | 200 | 180 |
| வாழைக்காய் | 100 | 100 | 100 | 80 | 80 |
| கீரை | 30 | 30 | 40 | 20 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 30 | 30 | 30 |
| ப.மிளகாய் | 180 | 280 | 300 | 320 | 160 |
| புடோல் | 80 | 80 | 80 | 100 | 80 |
| கோவா | 100 | 100 | 100 | 100 | 80 |
| வெண்டி | 60 | 50 | 50 | 80 | 40 |
| போஞ்சி | 180 | 160 | 200 | 160 | 160 |
| லீக்ஸ் | 140 | 120 | 120 | 120 | 130 |
| தேங்காய் | 80 | 90 | 70 | 90 | 80 |
| உ.கிழங்கு | 120 | 110 | 110 | 110 | 120 |
| தேசிக்காய் | 180 | 350 | 320 | 300 | 300 |
| வல்லாரை | 20 | 20 | 20 | 15 | 15 |
| கறிமிளகாய் | 120 | 100 | 120 | 140 | 140 |
| கரட் | 160 | 160 | 160 | 120 | 140 |
| முருங்கைக்காய் | 100 | 120 | 70 | 40 | 120 |

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 700 | 700 | 1000 | 1000 |
| நண்டு | 350 | 400 | 600 | 200 |
| கணவாய் | 500 | 600 | 800 | 1000 |
| பாரை | 500 | 500 | 700 | 800 |
| சுறா | 500 | 700 | 1000 | 900 |
| சீலா | 400 | 400 | 500 | 400 |
| விளை | 600 | 400 | 500 | 800 |
| முரல் | 400 | 350 | 450 | 500 |
| கும்பிளா | 300 | 300 | 400 | 400 |
| கிளாக்கன் | 800 | – | 600 | – |
| ஓரா | 350 | 300 | 500 | 300 |
| திரளி | 250 | 200 | 200 | 150 |
| நகரை | 250 | 150 | 400 | – |
| சூடை | 150 | 100 | 200 | 160 |
| ஒட்டி | 250 | 200 | 400 | 200 |
| திருக்கை | 350 | 200 | 400 | 200 |
| மதனம் | 250 | 150 | 300 | – |
| கொய் | 150 | 70 | 80 | 100 |
| பாலை | 150 | 200 | 600 | 200 |
| வாளை | 200 | 200 | 500 | – |






## இது புதுசு



தற்போது கைபேசிகளுக்கான நீர்ப்பைகள் அறிமுகமாகியுள் ளன. தண்ணீர்ப் பாவனை யின்போது கைபேசி களை இந்தப் பையின் மூலம் பாதுகாக்க முடியும். இவை 500 ரூபாவிலிருந்து ஆயிரம் ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றன.

# கட்டம் கட்டமாக விவசாயிகளுக்கு இழப்பீட்டுக் கொடுப்பனவுகள்

## விவசாயத் திணைக்களம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.18

யாழ்ப்பணத்தில் கடந்த காலபோக நெற்செய்கையின் போது விவசாயிகள் பாதிக்கப்பட்டனர். இவர்களுக்கு இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் கட்டம் கட்டமாக வழங்கப்பட்டு வருகின்றன. அதற்கான வேலைத் திட்டங்களும் இடம்பெற்று வருகின்றனஎனவிவசாயத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

யாழ்ப்பணத்தில் விவசாயிகளுக்குஇழப்பீட்டுதொகை இன்னும் வழங்கப்படவில்லைஎனபொதுமக்கள் குற்றம்சாட்டி வருகின்றனர். இந்த நிலையிலேயே விவசாயத் திணைக்களம் இதனைத் தெரிவித்துள்ளது.

இவ்வருடத்துக்கான காலபோகநெற்செய்கைக்கான ஆரம்பகட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எனினும், கடந்தகாலபோக நெற்செய்கையின்போது பாதிக்கப்பட்டபலநெற்செய்கையாளர்களுக்கு இதுவரைஇழப்பீட்டுக்கொடுப்பனவு வழங்கப்படவில்லை எனமாவட்ட நெற்செய்கையாளர்கள் விசனம் தெரிவித்தனர்.

கடந்தவருடம் போதிய மழை வீழ்ச்சியில்லை. நாட்டின் பல இடங்களில் நெற்பயிர்கள் அழிவடைந்தன. நெற்செய்கையாளர்கள் பெரும் நட்டத்தை எதிர்நோக்கினர்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட நெற்செய்கையாளர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா வீதம் இழப்பீட்டுக் கொடுப்பனவுவழங்குமாறு அரசதலைவரினால் உத்தரவிடப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள கமநல சேவைகள் நிலையங்களினால் இக் கொடுப்பனவு வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

இருந்தபோதிலும் உரமானியக்கொடுப்பனவுபெற்ற நெற்செய்கையாளர்களுக்கு மட்டுமே இழப்பீட்டுக்கொடுப்பனவுவழங்கப்பட்டது.

இதுதொடர்பில்இழப்பீட்டுக் கொடுப்பனவு பெறாத நெற்செய்கையாளர்கள் முறையிட்டனர். இவர்களிடம் விண்ணப்பப் படிவங்களைப் பெற்ற அதிகாரிகள் விரைவில் கொடுப்பனவு வழங்கப்படுமென அறிவித்தனர்.

இதுவரை கொடுப்பனவு வழங்கப்படவில்லை. இது தொடர்பாக அதிகாரிகளிடம் முறையிட்டும் பயன் கிடைக்கவில்லைஎனவிவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

என்றும், இவ்வருடத்திற்கான காலபோக நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் கொடுப்பனவு இன்னமும் வழங்கப்படவில்லைஎன்பதுகுறிப்பிடத்தக்கது. (ய-8)

# கொக்குவிலில் கைக்குண்டு மீட்பு

யாழ்ப்பாணம், செப்.18

யாழ்ப்பாணம் கொக்குவில் மேற்குப்பகுதியில் கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் தெரிவிக்கப்பட்டதாவது:

அப்பகுதி வளவொன்றில் மதில் கட்டுவதற்காக அத்திபாரம் வெட்டப்பட்டுள்ளது. அப்போது சந்தேகத்துக்கிடமான பொருளொன்று கிடப்பதை தொழிலாளர்கள் அவதானித்துள்ளனர்.

பின்னர் இதுதொடர்பில் காணி உரிமையாளருக்கு உடனடியாகத் தகவலை வழங்கியுள்ளனர்.


குறித்த பொருளை அவதானித்த காணி உரிமையாளர் வெடிபொருளாக இருக்கலாம் என்ற சந்தேகத்தில் உடனடியாக பொலிஸாருக்கு தகவலை வழங்கியுள்ளார்.

சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் சோதனையில் அது கைக்குண்டு என்பதை உறுதிப்படுத்தினர்.

சிறப்பு அதிரடிப்படையினருடன் இணைந்து கைக்குண்டை செயலிக்கச்செய்யும் பணியை முன்னெடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ய-8)

# கிளாலியில் சட்டவிரோதமாக மணல் அகழ்வு; கனியவளத் திணைக்களம் கவனமெடுக்க வேண்டும்

## பளைப் பொலிஸார் தெரிவிப்பு



கிளிநொச்சி, செப்.18

கிளாலி கடற்கரையோரக் கிராமத்தில் சட்டவிரோதமாக தொடர்ந்து மணல் அகழப்பட்டு வருகின்றது. நாம் தொடர்ந்து கண்காணித்து வருகிறோம்.

பலரைக்கைதுசெய்து நீதிமன்றில் முற்படுத்துகின்றோம். எனினும் இதனைக் கட்டுப்படுத்த முடியவில்லை. இதுதொடர்பாக கனியவளத் திணைக்கள அதிகாரிகளும் காத்திரமான நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும். அதற்குநாம்முழுமையான ஒத்துழைப்பை வழங்குவோம் என பளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

கிளாலியில் இடம்பெற்றுவரும் மணல் கொள்ளைதொடர்பில்பொதுமக்கள்மற்றும் அமைப்புகளைச் சார்ந்தவர்கள் தொடர்ச்சியாக கண்டம் தெரிவித்து வருகின்றனர்.

இதுதொடர்பில்கேட்டபோதேபொலிஸ்தரப்பில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

இதுதொடர்பில் கிராமமட்ட அமைப்பகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டதாவது:

கிளிநொச்சி மாவட்டத்தின் பளை பச்சிலைப் பள்ளி பிரதேசசெயலாளர் பிரிவுக்கு உட்பட்டதே கிளாலி கடற்கரைக் கிராமம்

இக்கிரமத்தில்தொடர்சியாகமணல்அகழ்வு இடம்பெற்று வருகின்றது. இதுதொடர்பாக உரிய அதிகாரிகளுக்குப் பலதடவைகள் அறிவிக்கட்டுள்ளது. இதுவரை அதனைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படவில்லை.

மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டதில் இருந்து தொடர்ச்சியாக மண் அகழ்வு இடம்பெற்று வருகின்றது. ஆரம்பத்தில் சிறிது சிறிதாக ஆரம்பிக்கப்பட்ட மண் கடத்தல் தற்போது அதிகரித்து காணப்படுகின்றது.

கடற்கரையை அண்டிய பகுதிகளில் இவ்வாறு மண் தொடர்சியாக அகழப்படுகிறது. அங்கு மிகப்பெரிய பள்ளங்கள் காணப்படுகின்றன. இயற்கையாக அமையப்பெற்ற மண் வளமானது வியாபார நோக்கில் விசமிகளால் சூறையாடப்பட்டு வெளியிடங்களுக்கு ஏற்றப்படுகின்றது.

இதனை தடுப்பதற்கு பல வழிகளிலும் முயன்றோம். இதுவரை முடியவில்லை. மணல் அகழப்படும் இடம் கடலுக்கும் விவசாய நிலத்துக்கும் இடையில் அமைந்துள்ளது. இது தனியாருக்குச் சொந்தமான காணி, பரந்த தோட்டக் காணியாகக் காணப்படுகின்றது. இதனால், கடலரிப்பு, கடல் பெருக்கு ஏற்படும்போது விவசாய நிலங்கள் எல்லாம் உவர்த்தன்மை அடைந்துவிடும். இதனால் இங்கு விசாயத்தை நம்பியுள்ள குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும்இதுதொடர்பாகஉரியதரப்பினர்உடனடியாகநடவடிக்கைஎடுத்துமணல்கடத்தலை தடுக்க வேண்டும் என்று தெரிவித்தனர்

இதுதொடர்பாக பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர்பரமோதயன்ஜெயராணியிடம் கேட்டபோது:

அங்கு மணல் அகழ்வதற்கான அனுமதி தற்போது வழங்கப்படவில்லை: அது நிறுத்தப்பட்டுள்ளது. இருப்பினும்சிலர்தொடர்ச்சியாக மணல் அகழ்வதாக கிராம மட்ட அமைப்புகள் மூலம் தெரிவிக்கப்பட்டது.

இதுதொடர்பாக கிளிநொச்சி மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. பளை பொலிஸாருக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது என்றார். (ய-6)

# போதியஆளணிவளம்இல்லாததால் வடக்கு விவசாயத் திணைக்களத்தில் பணிகளை முன்னெடுப்பதில் சிரமம்

யாழ்ப்பாணம், செப்18

வடக்கு மாகாண விவசாய திணைக்களத்துக்கு போதிய ஆளணி இல்லை. பணிகளை முடிப்பதில் பாரிய சவால்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது என வடக்கு மாகாண விவசாயத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

மாகாண விவசாயத் திணைக்களத்தின் இலங்கைவிவசாயசேவை பதவிக்கு 22 பேர்பணியில் இருக்கவேண்டும். ஆனால் 5 பேர் மட்டுமே எமது திணைக்களத்தில் பணியாற்றி வருகின்றனர்.

மிகுதி 17 வெற்றிடங்களும் நிரப்பப்படாத நிலையில் காணப்படுகின்றன. விவசாயப் போதனாசிரியர் பதவியில்161பேர் இருக்கவேண்டும்.

ஆனால்109விவசாயபோதனாசிரியர்கள் மட்டுமே தற்போது கடமையில் உள்ளனர்.

எமது திணைக்களத்துக்கு தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவியில் 140 பேர் வேண்டும். 29தொழிநுட்ப உத்தியோகத்தர்களே இங்கு கடமையில் உள்ளனர்.

இவ்வாறு பதவி நிலைகளுக்குஅதிகளவானவெற்றிடங்கள்காணப்படுகின்றன. எமதுதிணைக்களத்தினால் செய்துமுடிக்க வேண்டிய பணிகளைஉரியகாலத்தில் செய்து முடிப்பது பெரும் சவாலாக இருக்கின்றது.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இந்த வெற்றிடங்களை பூர்த்திசெய்துதரவேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ய-8)

# வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த தாதியர்களுக்கும் அதிகரிக்கப்பட்ட மேலதிக நேரக்கொடுப்பனவுகள்

## வடக்கு சுகாதார அமைச்சின் செயலாளர் உறுதி

வடக்கு மாகாண தாதியர்களுக்கு அதிகரிக்கப்பட்ட மேலதிக நேரக்கொடுப்பனவு எதிர்வரும் ஒகஸ்ட் மாத சம்பளப் பட்டியலில் இருந்து தொடர்ச்சியாக வழங்கப்படும் என வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருவாகரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது; வடக்கு மாகாண தாதியர்களுக்கு அதிகரிக்கப்பட்ட மேலதிக நேரக்கொடுப்பனவானது ஒகஸ்ட் மாத சம்பளப் பட்டியலில் இருந்து தொடர்ச்சியாக வழங்கப்படும். அதாவது தாதிய உத்தியோகத்தர் தரம் 3இல் உள்ளவர்களுக்கு தற்போது வரை வழங்கப்படும் மேலதிக நேரப்படியான 100ரூபா 2016ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் 150 ரூபாவாக அதிகரிக்கப்பட்டது. இது தொடர்பாக சுகாதார அமைச்சினால் சுற்றறிக்கை அனுப்பப்பட்டது. இருந்தபோதும் இன்றுவரை அதிகரித்த விகிதத்திலான மேலதிக நேரக்கொடுப்பனவுகள் நாடு முழுவதும் உள்ள தாதியர்களுக்கு வழங்கப்படவில்லை.

இருப்பினும் கடந்த ஜூலை மாதம் முதல் நாட்டின் ஏனைய மாகாணங்களில் மேலதிக நேரக் கொடுப்பனவுகள் அதிகரித்து வழங்கப்படுகின்றன. இந்த நிலையில் வடக்கு மாகாணத்தில் உள்ள தாதியர்களுக்குத் தொடர்ந்தும் பழைய சுற்றறிக்கையின் அடிப்படையில் மணித்தியாலத்துக்கு 100ரூபா விகிதமே வழங்கப்படுவதாகச் சுட்டிக்கட்டப்பட்டது. இவ்வாறு வடக்கு மாகாணத்தில் பணிபுரியும் தாதியர்களுக்கு ஜூலை மாதம் முதல் அதிகரித்த விகிதத்தில் மேலதிக நேரக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு மட்டும் 50 மில்லியன் ரூபா நிதி தேவை எனவும் சுட்டிக்காட்டப்பட்டது. இந்த நிலையிலேயே வடக்கு மாகாண தாதியர்களுக்கு ஒகஸ்ட் மாதத்தில் இருந்து அவர்கள் புரியும் மேலதிக நேரப் பணிக்கு புதிய சுற்றறிக்கையின் பிரகாரம் ஒரு மணி நேரத்துக்கு 150 ரூபா விகிதம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பழைய நிலுவைகளுக்கான நிதியைக் கோரி கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அவை கிடைக்கப்பெற்றதும் அக்கொடுப்பனவுகளும் வழங்கப்படும் என்றார். (21-101)

# இழுவைப்படகுச் சட்டத்தை நடைமுறைப்படுத்தாமைக்கு எதிராக மன்னாரில் வழக்கு

## மீனவர் சங்கம் தெரிவிப்பு

மன்னார், செப்.18

இழுவைப் படகு தடைச் சட்டம் இன்னமும் நடைமுறைப்படுத்தப்படாமைக்கு எதிராக மன்னார் மீனவர் சங்கம் சார்பில் நாளை நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது என மன்னார் மாவட்ட மீனவர் சங்கத் தலைவர் சொஸ்சா தெரிவித்தார்.

இதுதொடர்பில் எஅவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை நாடாளுமன்றில் இழுவைப் படகுகிற்கு தடைச் சட்டம் உருவாக்கப்பட்டு வர்த்தகமானி அறிவித்தலும் வெளிவந்தது.

ஆனால் இன்னமும் அது நடைமுறைப் படுத்தப்படவில்லை. இலங்கைக் கடற்பரப்பில் காணப்படும் கடல் வளத்தை அழிக்கும் இழுவைமடித் தொழிலை தடைசெய்ய வேண்டும் என்பதே வடக்கு மாகாண மீனவர்கள் 95 வீதமானவர்களின் கோரிக்கை.

இதனை நாம் நீண்டகாலமாக வலியுறுத்தி வருகின்றோம்.

அதனைத் தடுப்பதற்காக அரசும் புலிகளும் கடும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர்.

விடுதலைப்புலிகள் இருந்த காலத்தில் இதனைத் தடுப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருந்தனர்.

இதன் வெளிப்பாடாகவே இன்றுவரை கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் ஒரு றோலர் படகும் கிடையாது.

ஆனால் யாழ்ப்பாணத்திலும், மன்னாரிலுமே றோலர் படகுகள் காணப்படுகின்றன.

இவற்றிலும் மிகவும் துயரமான விடயம், யாழ்ப்பாணத்தில் 2015ஆம் ஆண்டில் 150 றோலர்கள் மட்டுமே இருந்தன.

ஆனால் தற்போது 500 படகுகளையும் தாண்டியிருக்கின்றது.

இவ்வாறு றோலர் படகின் மூலம் தொழில்புரிந்த 730 குடும்பங்களுக்கு அதனைத் தடுக்கும் நோக்கில், திணைக்களம் மாற்றுத் தொழில் உபகரணம் வழங்கியது.

இதேபோன்று மன்னாரில் தற்போது 220 றோலர்கள் உள்ளன. இங்கு 2014இல் 165 றோளர்கள் காணப்பட்டன. இந்த மீனவர்களுக்கு மாற்றுத் தொழில் உபகரணங்கள் வழங்கப்படவில்லை.

இந்த நிலையிலேயே குறித்த றோலர் மீன்பிடியை தடைசெய்யுமாறு கோரிக்கை விடப்பட்டது. அதன் அடிப்படையில் தனிநபர் சட்டமூலமாக நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு சட்டம் நிறைவேற்றப்பட்டது. இதன்பிற்பாடு இந்த மாத ஆரம்பத்தில் வர்த்தமானி அறிவித்தலும் வெளிவந்தது.

இருப்பினும் சட்டம் இன்னமும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. குறித்த சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டாம் என சிலர் கோருகின்றனர்.

வடக்கில் வாழும் 40 ஆயிரம் மீனவக் குடும்பங்களில் 2 ஆயிரம் மீனவக் குடும்பங்கள்வரையே இந்த றோலரை நம்பி வாழ்கின்றனர்.

இதனால் 40 ஆயிரம் மீனவக் குடும்பமும் மேலும் பாதிப்பை எதிர்கொள்ளும் நிலையே ஏற்படும்.

இவற்றின் அடிப்படையில் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்ட சட்டமூலம் வர்த்தமானி அறிவித்தலை அடிப்படையாக கொண்டு இதனை உடன் நடைமுறைப்படுத்த வேண்டும். இதற்கு உத்தரவிடக்கோரி நாளைய தினம் மன்னார் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது என்றார். (ய-101)

# இந்துக்கள் 21ஆம் திகதியே நவராத்திரி விரதத்தை ஆரம்பிக்க முடியும்

## இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.18

இந்துமக்கள் இம்மாதம் 21 ஆம் திகதி வியாழக்கிழமை அன்றே நவராத்திரி விரதத்தை ஆரம்பிக்கவேண்டும் என இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது. இந்தவருடம் நவராத்திரி விரதம் ஆரம்பிக்கும் தினம் தொடர்பாக வாக்கிய பஞ்சாங்கம் மற்றும் திருக்கணித பஞ்சாங்கம் என்பவை மாறுபட்ட வகையில் இரு தினங்களைக் குறிப்பிட்டுள்ளன. அவையாவன முறையே 20.09.2017 புதன்கிழமை மற்றும் 21.09.2017 வியாழக்கிழமை என இருவேறு தினங்களாகும்.

இதனால் இந்து மக்கள் மத்தியில் நவராத்திரி ஆரம்பிக்கும் தினம் தொடர்பாக குழப்பநிலை உருவாகியுள்ளது.

இதனையடுத்து திணைக்களம் உரிய தரப்பினர்களது ஆலோசனைகளைப் பெற்றுக்கொண்டு மேற்படி திகதியை அறிவித்துள்ளது.

இதுதொடர்பில் இந்துசமய காலாசார அலுவல்கள் திணைக்களத்தில் செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அமாவாசை சேர்ந்த பிரதமையில் கும்பஸ்தானம் செய்தல் விலக்கழிக்கப்பட வேண்டும். கும்பஸ்தாபனம் காலையில் செய்தல் வேண்டும் என நவராத்திரி பூஜா பத்ததையில் (சுப்பிரமணிய சாஸ்திரிகள்) குறிப்பிட்டுள்ளது.

இதன்பிரகாரம் 20ஆம் திகதி புதன்கிழமையன்று அமாவாசையானது திருக்கணித பஞ்சாங்கப்படி மு.ப.10.59 வரையும், வாக்கிய பஞ்சாங்கப்படி மு.ப.11.23 வரையும் உள்ளது. இதனால் அன்றைய தினம் அமாவாசை சேர்ந்த பிரதமையில் நவராத்திரி விரதத்தை ஆரம்பிக்க முடியாது.

மேலும் 21ஆம் திகதி வியாழக்கிழமை திருக்கணித பஞ்சாங்கப்படி மு.ப.10.35 வரையும், வாக்கிய பஞ்சாங்கப்படி மு.ப.11.02 வரையும் பிரதமை திதி வருகின்றது. அதாவது ஆஸ்விஜசுத்தப் பிரதமை உள்ளதால் 21வியாழக்கிழமையே கும்பஸ்தாபனம் செய்து நவராத்திரி விரதத்தை ஆரம்பிக்கவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ய)

# பாலின் விலை அதிகரிப்பு: கூட்டுறவுச் சங்கங்களுக்கு மாகாணசபையின் தீர்மானம் கடிதமூலம் அனுப்பிவைப்பு

யாழ்ப்பாணம், செப்.18

யாழ்ப்பணம் பால் கூட்டுறவுச் சங்கங்கங்கள் தொடர்பில் அண்மையில் மாகாணசபையில் எடுக்கப்பட்ட பரிந்துரைகள் அவற்றுக்கு எழுத்து மூலம் அனுப்பப்பட்டுள்ளன என வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்கள ஆணையாளர் கே.சிவகரன் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ். மாவட்டத்தில் உள்ள பண்ணையாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு யாழ்கோ நிறுவனம் ஊடாக பால் கொள்வனவு செய்யப்படுகின்றது.

பாலுக்கான கொள்வனவு விலையை 67ரூபாயில் இருந்து 72 ரூபாவாக அதிகரிக்குமாறு மாகாண பொதுமக்கள் முறைப்பாட்டு குழு பரிந்துரை செய்தது. இதனை மாகாணசபை அங்கீகரித்திருந்தது.

இந்தவிடயம் தொடர்பில் யாழ்ப்பணத்தில் உள்ள பால் கூட்டுறவுச் சங்கங்களின் கருத்துகளை அறிய வேண்டும். இதற்காக அவர்களுக்கு மாகாணசபையின் பரிந்துரை தொடர்பில் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

அதன்படி மாகாணசபையில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஆராயப்பட்டு வருகின்றது என்றார்.

யாழ். மாவட்டத்தில் யாழ்கோ நிறுவனம் மற்றும் நெஸ்லே நிறுவனம் ஆகியன பண்ணையாளர்களிடமிருந்து பாலை கொள்வனவு செய்கின்றன.

இதில் யாழ்கோ நிறுவனத்தை விட நெஸ்லே நிறுவனம் சற்று அதிக பணம் கொடுத்து பாலைக் கொள்வனவு செய்கின்றது.

யாழ்கோ நிறுவனம்; 67 ரூபாவுக்கு பாலைக் கொள்வனவு செய்து 80ரூபாவுக்கு விற்பனை செய்து வருகின்றது. இந்நிலையில், மேற்படி கொள்வனவு விலையை 67ரூபாவில் இருந்து 80 ரூபாவாக அதிகரிக்க பொதுமக்கள் முறைப்பாட்டு குழு பரிந்துரை செய்கின்றது.

இந்தப் பரிந்துரை உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதற்கும், பண்ணையாளர்களின் நலன்களை பாதுகாப்பதற்காகவும் இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டன என அண்மையில் மாகாணசபையில் தீர்மானிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ய-8)

# விதை உருளைக்கிழங்குக்கு மானிய உதவி வழங்குமாறு கோரிக்கை

அச்சுவேலி, செப்.18

யாழ். மாவட்டத்தின் வறட்சி மற்றும் களநிலையைக் கருத்தில் கொண்டு விதை உருளைக்கிழங்குக்கான மானிய உதவியை வழங்குவதற்கு அரசு ஏற்பாடு செய்யவேண்டும் என உருளைக்கிழங்கு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் யாழ்.மாவட்ட சமாசம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதுதொடர்பில் சமாசத்தின் தலைவர் இ.தெய்வேந்திரன் தெரிவித்ததாவது:

யாழ்.மாவட்டத்தின் வறட்சி நிலைமை மற்றும் காலநிலை முரண்பாடுகள், விலை தளம்பல் போன்ற பல்வேறு காரணிகளால் உருளைக்கிழங்குச் செய்கையாளர்கள் பாதிப்பை எதிர்கொள்ளுகின்றனர். எதிர்பாராத பொருளாதார இழப்புக்கு உள்ளாகி மன உளைச்சலடைகின்றனர்.

எனவே, இந்த வருடமும் விதை உருளைக்கிழங்கு கொள்வனவுக்கு மானிய உதவி வழங்கவேண்டும். இதனை வலியுறுத்தி விவசாயிகள் தரப்பில் சமாசத்துக்கு மனு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்த மனு கொழும்பு அரசின் விவசாய அமைச்சர், வடக்கு மாகாண விவசாய அமைச்சர், யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர், வடக்குமாகாண விவசாயப் பணிப்பாளர் மற்றும் அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கடந்தவருடம் பதிவு செய்த விவசாயிகளுக்கு தலா நான்கு அந்தர் (200கிலோ) விதை உருளைக்கிழங்கு 50 வீத மானிய உதவியில் வழங்கப்பட்டது. இது விவசாயிகளுக்கு பெரும் ஆறுதல் அளித்தது. ஆர்வத்தோடு பயிர்ச்செய்கையில் ஈடுபட்டனர். இந்த வருடமும் விதை உருளைக்கிழங்கு கொள்வனவுக்கு மானிய உதவி வழங்கவேண்டும் எனக் கோரியுள்ளோம் எனத் தெரிவித்தார். (ய-11)

# வடக்கு மாகாணத்தில் சம்பவத் திரட்டுப் புத்தகத்தால் தொண்டர் ஆசிரியர்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம், செப்.18

வடக்குமாகாணத்தொண்டர் ஆசிரியர்களை பாடசாலைகளில் இணைக்கும் போது சம்பவத் திரட்டுப் புத்தகத்தில் பதிவுகளை மேற்கொள்ள வேண்டாம் என பணிக்கப்பட்டது. இதனால் இன்று பலர் சந்தர்ப்பத்தை இழக்கும் நிலமை காணப்படுகின்றது.

தீவக வலயம் உட்பட பல இடங்களில் இவ்வாறு இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுதொடர்பில் தெரிவிக்கப்பட்டதாவது:

வடக்குமாகாணத்தொண்டர் ஆசிரியர்களை பாடசாலைகளில் இணைக்கவே கூடாது என மாகாணக் கல்வி அமைச்சின் ஓர் சுற்றுநிரூபம் இருப்பதாக காரணம் காட்டப்பட்டது. இதனால் எம்மை பாடசாலைகள் உள்வாங்கும்போது தீவகவலயம் உட்பட பல இடங்களில் சம்பவத் திரட்டுப் புத்தகத்தில் பதிவுகளை மேற்கொள்ள வேண்டாம் என கல்வி அதிகாரிகளால் பணிக்கப்பட்டது.

இருப்பினும் வவுனியா, மன்னார் உள்ளிட்ட வலயங்களின் சில கோட்டங்கள் அவ்வாறு கட்டுப்படுத்தாது சம்பத் திரட்டுப் புத்தகத்தில் பதி விட்டுள்ளன.

இதனால் குறித்த வலயத்தில் பணியாற்றிய ஒரு சமூகத்ச்தைச் சேர்ந்த பலரே அந்த ஆவணத்தை சமர்ப்பிக்கும் தன்மை காணப்பட்டது்.

தற்போது மத்திய கல்வி அமைச்சுக் கூறும் இந்த ஆவணம் உள்ள 188 பேருக்கு மட்டுமே ஆசிரியர் நியமனம் வழங்கப்படும் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறெனில் நிச்சயமாக சட்டத்தை இறுக்கமாகப் பேணிய கல்வி வலயங்களுக்கு உட்பட்ட பாடசாலைகளின் கடமையாற்றிய தொண்ட ராசிரியர்கள் நிச்சயமாகப் பாதிக்கப்படுவோம்.

இதேநேரம், இவற்றை நாம் சுட்டிக்காட்ட முனையும்போது கிளிநொச்சியில் சில பாடசாலை அதிபர்கள் 11பேருக்கும், 9 பேருக்கும் என அதிகரித்த எண்ணிக்கையில் கடிதங்களை வழங்கியவற்றை சுட்டிக்காட்டிகின்றனர்.

ஓரிரு இடத்தில் முறைகேடு இடம்பெற்றதாகக்கருதினால் அவை தொடர்பில் விசேடமாக ஆராயப்படலாம். அதைவிடுத்து ஒட்டுமொத்த தொண்டராசிரியர்களையும் புறக்கணிக்கக் கூடாது.

இவ்விடயம் ஒரு நியாயபூர்வமான முறையில் பரிசீலனை செய்யப்பட வேண்டும் என பாதிக்கப்படும் தொண்டராசிரிர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (ய-101)

# அருந்திகவை நெகிழ்ச்சியுடன் வரவேற்ற மகிந்த ராஜபக்ச

பிரதியமைச்சுப் பதவியைப் பறிகொடுத்த நிலையில் மகிந்த ராஜபக்சவைச் சந்திக்கச் சென்ற அருந்திகவை, அவர் அன்போடு வரவேற்றுள்ளதாகத் தெரியவருகின்றது.

கிறித்தவ மத விவகாரங்கள் மற்றும் சுற்றுலா அபிவிருத்திப் பிரதியமைச்சராக இருந்த அருந்திக பெர்னாண்டோ கடந்த வாரம் அமைச்சுப் பதவியில் இருந்து நீக்கப்பட்டார். அவர் உடனடியாக முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவைச் சந்திப்பதற்காக, அவரின் விஜேராம இல்லத்துக்குச் சென்றுள்ளார்.

அருந்திகவைக் கண்டதும் அன்போடு வரவேற்கின்றேன் என்று அவரை நட்பாக வரவேற்று மகிந்த ராஜபக்ச, மகிழ்ச்சியாக உரையாடியுள்ளார். அங்கிருந்த மகிந்த அணியின் முக்கிய தலைவர்கள் பலரும் பலத்த கரகோசத்துடன் அருந்திகவை வரவேற்றுள்ளனர்.

மகிந்த ராஜபக்ச, இனியும் காலம் தாழ்த்தாமல்அரசினுள்இருக்கும்முக்கியமானவர்கள் பலரையும் மகிந்த அணிக்கு அழைத்து வருமாறும் அருந்திக பெர்னாண்டோவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (5)

# ரோஹிங்ய முஸ்லிம்களைப் போன்று நாங்களும் நாடற்றவர்களாகின்றோம்

## ஹசன் அலியின் கவலை இது

கொழும்பு, செப். 18

ரோஹிங்யமுஸ்லிம்களைப் போல நாடற்றவர்களாக மாற்றப்படக் கூடிய அபாயம் எமக்கும் உருவாகி வருவதை நாம் காணக்கூடியதாகவுள்ளது. கிழக்கில் எமக்கு அரசியல் உறுதிப்பாடின்மை, அரசமைப்பு மூலமான பாதுகாப்பு போன்றன இல்லாதபோது அபிவிருத்திகளால் எந்தவொரு பயனுமே இல்லை. இவ்வாறு முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் முன்னாள் செயலர் நாயகமும், சுகாதார துறை முன்னாள் இராஜாங்க அமைச்சருமான எம்.ரி.ஹசன் அலி தெரிவித்தார்.



அஷ்ரப்பின் 17ஆவது ஆண்டு ஒன்றுகூடல் 'தூய முஸ்லிம் காங்கிரஸ்' அணியின் ஏற்பாட்டில் நிந்தவூர் பிரதேச சபை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அந்த நிகழ்வில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.


அவர் மேலும் தெரிவித்ததாவது:

தலைவர் அஷ்ரப் கிழக்கு முஸ்லிம்களின் கலாசாரத்தை வளர்ப்பதற்காகக் கிழக்குப் பல்கலைக்கழகத்தை நிறுவிக் கொடுத்தார். இன்று இந்தப் பல்கலைக்கழகத்தில் பயில்பவர்களில் 60 சதவீதமானோர் சிங்கள மாணவர்கள் உள்ளனர். எமது மாவட்டத்தில் சிங்கள இனத்தவர்களின் சனத்தொகை பல்கிப் பெருகி அதிகரித்துக் காணப்படுகிறது. ஆகவேதான் நாம் தனியான மாவட்டத்தைக் கேட்கின்றோம். கரையோர மாவட்ட கோரிக்கையில் நான் உறுதியாக நின்று பற்றுறுதியுடன் செயற்பட்டு வந்ததாலேயே ஹக்கீம் என்னை வெளியில் அனுப்பினார். அதனால் நான் கட்சியை விட்டு வெளியே வந்தேன்.

சிறுபான்மை சமூகங்கள் அவற்றின் உரிமைகளைக் கொஞ்சம் கொஞ்சமாக நாட்டில் இழந்து வருகின்றன. அம்பாறை மாவட்டத்தில் பெருந்தேசியவாதிகளின் ஊடுருவல் மிகக் கச்சிதமாக இடம்பெற்று வருகின்றது. நிலத் தொடர்பற்ற மாகாணம், கரையோர மாவட்டம், தென்கிழக்கு அலகு என்றுதலைவர் அஷ்ரப்பால் முன்வைக்கப்பட்ட எந்தவொரு தீர்வுத் திட்ட யோசனையை நோக்கியும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கடந்த 17 வருடங்களாகப் பயணிக்கவே இல்லை.

அஷ்ரப்பின் தீர்வுத் திட்ட யோசனைகளில் உயர்ந்ததாகவும், உன்னதமானதாகவும் கரையோர மாவட்டக் கோரிக்கை உள்ளது. இவற்றை நோக்கிப் பயணிப்பதை விடுத்து அபிவிருத்தி விழா கொண்டாடுகின்றனர். வட மாகாணத்தில் அபரிமிதமான அளவில் அபிவிருத்திகள் நடந்துதான் உள்ளன. அவை அமைதியாக நடந்தேறின. அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் போன்றோர் அபிவிருத்தி வேலைகளைக் கண்காணிக்க வேண்டுமே ஒழிய அதில் அவர்கள் குளிர் காய்கின்ற கலாசாரத்துக்கு முடிவு கட்டவேண்டும் - என்றார். (5)

# 'மவுசு' குறையாத மகிந்த ராஜபக்ச



கொழும்பு, செப். 18

முன்னாள் அரச தலைவர் மகிந்தவைக் கண்டவுடன் குழந்தையொன்று அப்பச்சி (அப்பா) வருகின்றார் என்று உற்சாகமாகச் சத்தமிட்டுள்ளது.

வார இறுதியில் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச அநுராதபுரத்தில் மதவழிபாடுகளில் கலந்து கொள்வதற்காகச் சென்றிருந்த போது இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

மகிந்தவின் வருகையை அறிந்து ஏராளமான ஆதரவாளர்கள் அந்தப் பிரதேசத்தில் குழுமியிருந்தனர். மகிந்தவும் ஆதரவாளர்கள் மத்தியில் சென்று சிநேகபூர்வமாக உரையாடியுள்ளார்.

மகிந்தவைக் கண்டதும் குழந்தையொன்று அதோ அப்பச்சி (அப்பா) வருகின்றார் என்று உற்சாகமாகச் சத்தமிட்டுள்ளது. அதனைச் செவிமடுத்த மகிந்தவும் அந்தக் குழந்தையின் அருகில் சென்று தலையைத் தடவிக் கொடுத்து சிறிதுநேரம் செலவழித்துள்ளார்.

முன்னாள் அரச தலைவர் மகிந்தவை அவரது ஆதரவாளர்கள் தேசத்தின் தந்தை என்ற அர்த்தத்தை வெளிக்காட்டும் வகையில் அப்பச்சி (தகப்பன்) என்று அழைக்கும் வழக்கத்தைக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (5)

# பொன்சேகாவால் ராணுவ ஆட்சியை ஏற்படுத்த முடியும்

## அஜித் பிரசன்ன தெரிவிப்பு

பீல்ட் மார்சல் சரத் பொன்சேகாவுக்கு இருக்கும் அதிகாரத்திற்கு அவரால் இராணுவ ஆட்சியைக் கூட ஏற்படுத்த முடியும் என்று மேஜர் அஜித் பிரசன்ன தெரிவித்தார். கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இராணுவத்தின் நிரந்தர உறுப்பினரான பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகிப்பது அரசமைப்புக்கு முரணானது.

சரத் பொன்சேகா சீருடை அணிகின்றார். அவர் ஒரு பீல்ட் மார்சல். இன்னும் பீல்ட் மார்சலுக்குரிய அதிகாரங்களைப் பயன்படுத்தவில்லை. அவர் இராணுவத்தின் நிரந்தர உறுப்பினர் என்பதால், இராணுவத்துடன் தொடர்புகள் உள்ளன. உத்தரவிடும் அதிகாரங்கள் உள்ளன. நிரந்தரமாக இராணுவத்துடன் தொடர்புகளைக் கொண்டிருந்த ஹிட்லர் எப்படி ஆட்சியைக் கைப்பற்றினார் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதும் சரத் பொன்சேகாவுக்கு எதிராகக் கட்டயாம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (5)

# பெண்வேடமிட்ட இராணுவச் சிப்பாய் பொலிஸாரால் கைது

கொழும்பு, செப். 18

பண்டாரவளை பழைய பேருந்து நிலையத்தில் பெண்-வேடம் அணிந்திருந்த ஒருவர் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

பண்டாரவளைக் குற்றத்தடுப்புப் பிரிவினரால் சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

24 வயதான இளைஞன் இராணுவச் சிப்பாய் எனவும் ஆரம்பக் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் தொடர்பிலான விசாரணைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர். (5)

## மரண அறிவித்தல்



பிறப்பு
25 . 07 . 1947

இறப்பு
11 . 09 . 2017

**கணபதிப்பிள்ளை உருத்திரசிங்கம்**

யாழ் அரியாலையைப் பிறப்பிடமாகவும் பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை உருத்திரசிங்கம் 11.09.2017 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - தங்கம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வரும் காலஞ்சென்றவர்களான முருகேசு - இராசாம்பாள் தம்பதிகளின் அன்பு மருமகனும் மனோரதியின் அன்புக் கணவரும் மைதிலி, சர்மிலி, பிரசன்னா ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான பாக்கியலட்சுமி, மகேஸ்வரன், சீதாலட்சுமி, கனகலிங்கம், தனலட்சுமி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் மயூரன், பிரதீபன், துசாந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும் கௌத்தம், அனிஷ், சித்தார்த், சஞ்சய், ஸ்ரேயா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.09.2017) திங்கட்கிழமை பி.ப 12.30 - பி.ப 1.30 மணியளவில் பிரான்சில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**54, அருளம்பலம் வீதி,**
**அரியாலை, யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**முருகேசு குணம் - 021 221 1162**

# அரசு எதிர் நடவடிக்கை எடுத்தாலும் தீர்வு கிடைக்கும்வரை போராட்டம்

## இ.மி.ச ஊழியர்கள்

கொழும்பு, செப். 18

மின்சார சபை ஊழியர்களுக்கு எதிராக அரசு எந்த விதமான நடவடிக்கையை எடுத்தாலும் எமது கோரிக்கைகளுக்கு உரிய தீர்வு கிடைக்கும் வரையில் வேலைநிறுத்தப்போராட்டம் தொடரும் என்று இலங்கை மின்சார சபை தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

வேலை நிறுத்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு 5 நாள்கள் கடந்துள்ளது. இதுவரையில் அதிகாரிகள் எந்தவிதமான தீர்வையும் முன்வைக்கவில்லை. இவ்வாறு அந்தச் சங்கத்தின் செயலர் ரஞ்ஜன ஜயலால் அறிவித்துள்ளார். கடந்த 13ஆம் திகதி நாம் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை ஆரம்பித்தோம். 17ஆம் திகதியுடன் ஐந்து நாள்கள் ஆகின்றன. இன்றும் போராட்டம் தொடரும். அரசு, ஓய்வுபெற்ற ஊழியர்களை வேவைக்கு அழைத்துள்ளது. எந்தவொரு ஓய்வு பெற்ற ஊழியரும் வேலைக் குச் சமூகமளிக்கவில்லை.

பொது மக்களை அசௌகரியங்களுக்குள்ளாக்குவது அரசே. நாம் வேலையிலிருந்து விலகிக் கொண்டவர்களாகக் கருதப்படுவதாகக் கடிதங்கள் கூட அனுப்பப்பட்டுள்ளன. எதிர்வரும் நாள்களிலும் எமது தொழில் தொடர்பில் அரசு எந்தவிதமான முடிவுகளுக்கு வந்தாலும், தமது போராட்டம் தொடரும் - என்றார்.

இதேவேளை, பொதுமக்களைக் கருத்திற்கொண்டு உடனடியாகப் பணிக்குத் திரும்புமாறு மின்சார சபை ஊழியர்களிடம் அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய வேண்டுகோள் விடுத்துள்ளார். (5)

# மகாசங்கத்தினரை நிந்தித்துப் பேசவில்லை

## ரஞ்சன் ராமநாயக்க விளக்கம்

கொழும்பு, செப். 18

தேவையற்ற வேலைகளில் ஈடுபடும் பிக்குகளைப் பற்றியே நான் குறிப்பிட்டேன். இந்த நாட்டில் மதிப்பு மிக்க மகாசங்கத்தினரை நான் நிந்திக்கவில்லை. இவ்வாறு பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்தார்.

பிக்குகளை நிந்தித்துப் பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க வெளியிட்ட கருத்துக்கு எதிராக, பௌத்த மகாநாயக்கர்கள் கடும் கண்டனம் வெளியிட்டனர். இதற்குப் பதிலளித்த பிரதி அமைச்சர் ரஞ்சன் கருத்துத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது நாட்டிலுள்ள மதிப்புறு மகா சங்கத்தினர் நான் தெரிவித்த கருத்தால் குழப்ப மடையத் தேவையில்லை. சில்க் ஆடைச் சம்பவம் மோசமான ஒரு நடவடிக்கை என்று நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. அது தேர்தல்கள் சட்டத்தை மீறும் செயல் எனவும் நீதிமன்றம் கூறியுள்ளது. நீதிமன்றத்தின் தீர்ப்பைக் கேலிக்கைக்கு உள்ளாக்குவது சிறந்த நடவடிக்கையல்ல.

இந்தச் சம்பவத்துக்கு என்னைத் தூற்றிப் பயனில்லை. பிக்குகள் அன்பு, கருணையுள்ளவர்களாக இருத்தல் வேண்டும். இன்றுள்ள சில பிக்குகள் மாளிகைகளைக் அமைக்கின்றனர். சிலர் சோதிடம் சொல்கின்றார்கள்.

மற்றும் சிலர் செவ்வினை சூனியம் செய்கின்றார்கள். பணம் தேடுவதே அவர்களது பிரதான நோக்கம். இவை அனைத்தும் பிக்குகளுக்குத்தேவையற்றவேலைகள்-என்றார். (5)

**காணி விற்பனைக்கு**

யாழ் பஸ்தரிப்பிற்கு முன்பாக கந்தப்பு சேகரம் வீதியில் 10 பரப்பும், 5பரப்பும் யாழ்ப்பாணம் பிறவுண் வீதியில் 2½ பரப்பு (நீராவியடி) காணி விற்பனைக்குண்டு.

**077 723 2535**

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், பலாலிவீதி, திருநெல்வேலி (Farm School) இற்கு அண்மையாக 5 பரப்பு 13.70 குளி அளவு கொண்ட காணி விற்பனைக்குண்டு.

**077 530 3198**

**மணமகள் தேவை**

யாழ். இந்து கௌரவ குடும்பம் 03.05.1983, கிரகநிலை சூரி, செவ், புதன், 8இல். சொந்த வியாபாரம். நகைகளுக்கு மாணிக்க கல் பதிக்கும் கடை. நட்சத்திரம் உத்தராடம் 2 ஆம் பாதம், மகரராசி, பாவம் 33.

**தொடர்பு- 077 636 6012, 077 175 5633**

**விற்பனைக்குண்டு**

நல்ல நிலையிலுள்ள கடை அலுமாரிகள் விற்பனைக்குண்டு

**077 723 2535**

**அறை வாடகைக்கு உண்டு**

தேவவாசா, 54/4, சுன்னாகம் கிழக்கில் சகலவசதி கொண்ட அறை வாடகைக்குண்டு. சைவசமய ஆண் மாணவர்கள் மட்டும் விரும்பத்தக்கது.

**021 561 3336**

**வீடுவாடகைக்கு தேவை**

ஆவரங்கால், புத்தூர், நீர்வேலி, கோப்பாய் பகுதிகளில் அரச உத்தியோகம் பார்க்கும் சிறு குடும்பத்திற்கு வீடு வாடகைக்கு தேவை.

**075 970 3519**



World Class UK Degree @ICBT Jaffna Campus

EQAA

Apply now for New Intake 2017

**ICBT HND IN BUSINESS MANAGEMENT**

Finance/ Marketing/ Human Resource Management

TVEC REGISTERED

Duration
- Full Time: 18 Months (Mon-Fri)
- Part Time: 2 Years (Sat & Sun Evening)

Part Time Entry qualifications: GCE A/L + Work Experience

Cardiff Metropolitan University

**BSc (Hons) BUSINESS MANAGEMENT**

Offered by Cardiff Metropolitan University, UK

Duration
- 1 year

UGC

Entry Qualifications
- Higher National Diploma in Business Management or any other accepted programs.

Why Study ICBT ?
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/Library/Computer Laboratory/ Recreation Area/Modern Lecture Halls.
- Easy Payment schemes

Week End Part Time Classes

0770 746 553 | 0769 289 784

ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk

National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013
Gold Award Winner Education Service Sector

www.icbt.lk

# தமிழரசு தவிர கூட்டமைப்பின் ஏனைய கட்சிகளுக்கு இராஜதந்திரம் தெரியாது

## இப்படிச் சாடுகிறார் அந்தக் கட்சியின் பொதுச் செயலர் துரைராஜசிங்கம்

மட்டக்களப்பு, செப். 18

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தவிர்ந்த ஏனைய மூன்று கட்சிகளும் தீவிர வாதச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்தவர்கள். தமிழ் அரசுக் கட்சிக்கு இருக்கின்ற புலமை அளவுக்கு, அந்தக் கட்சிகளுக்கு இராஜதந்திரப் புலமை இல்லை. இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச்செயலரும் கிழக்கு மாகாண விவசாய அமைச்சருமான கி.துரை ராஜசிங்கம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது தலைவர்களுக்கு உள்ள மிகப் பெரிய நெருக்கடிகளை மனதில் கொண்டு, கோரிக்கைகளில் அதி உச்சமாகப் பெறக்கூடிய அதிகாரங்களை உள்ளடக்கி முழுமையான இணக்கப்பாட்டுடன் அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.

புதிய அரசமைப்பு இந்த ஆண்டு முடிவுக்குள் நிறைவேற்றப்படும். இதற்காக சிங்களத் தலைவர்கள் பல்வேறு வகையான சிரமங்களை எதிர் நோக்குகின்றார்கள். பண்டா - செல்வா ஒப்பந்தத்தை உருவாக்கித்தமது உரிமையைக் கெடுக்கப்போகின்றார் என்பதற்காக முன்னாள் தலைமை அமைச்சர் பண்டாரநாயக்கவை சுட்டுக் கொண்டார்கள். இவற்றையும் நாங்கள் கருத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாகாணசபை உறுப்பினர்கள் ஒரே குரலில் பேசுகின்றார்களா? என்ற கேள்வி தற்போது எழுந்துள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தமிழ் அரசுக் கட்சி, ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப் மற்றும் புளொட் போன்ற கட்சிகள் உள்ளன.

எந்தவொரு விடயத்தையும் தூக்கி எறிந்துவிட்டு போவதென்பது, எங்களுக்கு அருகில் இருப்பவர்கள் கை தட்டுவதற்கு மாத்திரமே சரியாக இருக்கும். பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான விடயமாக இருக்காது. பேச்சுக்கள் நடைபெறும்போது பலவிதமான குழப்பங்கள் வரும் அவற்றை கவனமாக சீர் செய்து கொண்டு செல்ல வேண்டும் - என்றார். (5.46)

# மகிந்தவுக்காக கதவு திறந்தே உள்ளது

## மைத்திரி அணி தெரிவிப்பு

கொழும்பு, செப். 18

மகிந்த எப்போது வந்தாலும் அவரை இணைத்துக் கொள்வதற்கு மைத்திரி அணி தயாராகவே இருக்கின்றது என்று அமைச்சரும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலருமான மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தூய்மையான ஆட்சியை நடத்துவதற்கும் கட்சியைத் தூய்மையாக வைத்திருப்பதற்குமே அரச தலைவர் விரும்புகிறார். யார் குற்றமிழைத்தாலும் அவர்கள் தண்டிக்கப்படுவர் என்று அவர் தெரிவித்துள்ளார். அரச தலைவரினதும் கட்சியினதும் விசுவாசிகளாக இருந்தாலும்கூட பதவி விலக்கப்படுவர். அருந்திக்கவுக்கு நடந்தது அதுதான்.

சுதந்திரக் கட்சியை ஒன்றிணைக்க வேண்டியதன் தேவையும் இன்று எழுந்துள்ளது. எமது கட்சிக்குள் சனநாயகம் உச்சத்தை அடைந்துள்ளது. இதனை மகிந்த தரப்பினர் பிழையாகப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர். சுதந்திரக் கட்சியில் இருந்துகொண்டு புதுக் கட்சியைக் கட்டியெழுப்பும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர். சுதந்திரக் கட்சியின் யாப்பின்படி, இவ்வாறு செய்ய முடியாது. மகிந்த புதுக் கட்சியுடன் செல்வார் என்று நான் நம்பவில்லை. அவரை இழுத்துக் கொண்டு செல்வதற்கு மகிந்த அணியில் உள்ளவர்கள் முயற்சி செய்கின்றனர்.

மகிந்த எப்போது வந்தாலும் அவரை இணைத்துக் கொள்வதற்கு மைத்திரி அணி தயாராகவே இருக்கின்றது. மகிந்தவுடன் எமக்குக் கோபமோ பொறாமையோ இல்லை. நாங்கள் அவருடன் அரசியல் செய்தவர்கள். எல்லோரும் சுதந்திரக் கட்சிக்காரர்கள். எமது தேவை எல்லாம் எல்லோரும் ஒன்றிணைத்து அடுத்த தேர்தலில் சுதந்திரக்கட்சி தலைமையிலான தனி அரசை உருவாக்குவது தான்.

இனி நாம் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கூட்டு அரசை அமைக்கமாட்டோம். ஐக்கிய தேசிய கட்சியும் அதே நிலைப்பாட்டில்தான் உள்ளது. - என்றார். (5.3)

**வீடு வாடகைக்கு உண்டு**

கிளிநொச்சி நகரத்தில் A9 வீதிக்கு அண்மையில் 1500 சதுர அடி கொண்ட விசாலமான வீடு, 05 அறைகள், 02 கோல்கள், வீட்டிற்குள் 04 இணைந்த குளியலறைகள், வெளியில் விசாலமான குளியல் அறைகள், கழிப்பறை, வாகனத் தரிப்பிடம், காவலாளி அறை, பூந்தோட்டம், பெரிய விசாலமான காணி ஆகியவற்றைக் கொண்ட ஏற்கனவே வெளியூர் அரச சார்பற்ற நிறுவனங்களின் பாவனையில் இருந்த விசாலமான வீடு வாடகைக்கு உண்டு. அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் அலுவலகங்கள் விரும்பத்தக்கது.

**தொடர்பு - 071 035 2812**



**கிருஸ்ணா அடகு சேவை**

பதிவு இல *J/DS/BR/472*

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2017ஆம் ஆண்டு 15.03.2017 இற்கு முன்னர் • வைத்த அடகு நகைகள் யாவற்றையும் 2017ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 15ஆம் திகதி (15.10.2017) இற்கு முன்னர் மீட்கவும். மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தைக் கட்டிப் புதுப்பித்துக் கொள்ளவும். புதுப்பிக்கத் தவறின் 15.10.2017 ஆம் திகதியன்று ஏலத்தில் விற்கப்படும் என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

**(2016ஆம் ஆண்டு 12 ஆம் மாதம் 15 ஆம் திகதி முதல் 2017 ஆம் ஆண்டு 03 ஆம் மாதம் 15 ஆம் திகதிக்கு இடைப்பட்ட நகைகள் யாவும் விற்கப்படும்)**

உரிமையாளர் :- **A.S.Surendran**

| | |
|---|---|
| **இல.370, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். 021 490 0311** | **இல.09, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். 021 222 5046** |

# கிழக்குக் கோட்டையைக் கைப்பற்ற மு.காவை வளைக்க அரசு வியூகம்

## மைத்திரி - ரணில் மந்திராலோசனை

கொழும்பு, செப். 18

எதிர்வரும் தேர்தல்களில் கூட்டாகப் போட்டியிடுவது தொடர்பில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் கொள்கையளவில் இணங்கியுள்ள நிலையில் கிழக்கு மாகாணத்தில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸையும் இணைத்துக் களமிறக்குவது குறித்து யோசனை செய்திருப்பதாக அரசியல் வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது. தேர்தல் நடத்தவேண்டி ஏற்பட்டால் அதற்கு முகம் கொடுப்பது தொடர்பில், அரச தலைவரும், தலைமை அமைச்சரும் நேற்று முன்தினம் இரவும் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளனர். அரச புலனாய்வு அறிக்கைகளின் பிரகாரம் கிழக்கு மாகாணத்தில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவற்றின் செல்வாக்கில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக இந்தச் சந்திப்பின்போது பேசப்பட்டுள்ளது. கிழக்கு மாகாணத்தில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு ஆதிக்கம் அதிகமாக இருப்பதாக அரச புலனாய்வுத் தகவல்கள் கூறுவதால் அவர்களையும் அரச கூட்டுடன் இணைத்துக் கொள்வதற்கு பேச்சுக்களை நடத்துவதென மேற்படி சந்திப்பில் தீர்மானிக்கப் பட்டுள்ளது. தேர்தலொன்று வருமாயின் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஏனைய இடங்களில் அரச கூட்டணியாக வரும் கட்சியுடன் இணைந்து போட்டியிட்டாலும் கிழக்கு மாகாணத்தில் அது தனியாகவே போட்டியிடும் எனவும், இதனால் முஸ்லிம் காங்கிரஸை இணைக்கும் பேச்சு இலகுவானதல்ல எனவும் இந்தச் சந்திப்பின்போது கருத்து வெளியிடப்பட்டதாக அறியமுடிகின்றது. (5)

# இரு மதப் பிரிவினரிடையே மோதல்

## 4 பேர் வைத்தியசாலையில் சேர்ப்பு

மட்டக்களப்பு, செப். 18

மட்டக்களப்பு வாழைச்சேனை மருதநகர்ப் பகுதியில் இரு மதப் பிரிவினருக்கிடையில் ஏற்பட்ட கைகலப்பில் 4 பேர் காயமடைந்த நிலையில் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளதாகக் கல்குடா பொலிஸார் தெரிவித்தனர்.

ஒரு மதப்பிரிவினர் தங்கள் வழிபாட்டு நிலையத்தில் வழமைபோல் ஆராதனையில் இருந்தவேளை மற்றுமோர் பிரிவினர் அங்கு நுழைந்ததனை அடுத்து இரு தரப்பினருக்குமிடையில் கைகலப்பு இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர். (5,46)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**பூமணி (பாக்கியம்) சின்னையா**

பிறப்பு
20.10.1928

இறப்பு
28.09.2016

திதி:- திரயோதசி
(18.09.2017)

அம்மா நீங்கள் எங்களை விட்டுப்பிரிந்து
இன்று வருவீர்கள் நாளை வருவீர்கள்
என நினைத்து ஓராண்டு கழிந்ததுவே
அம்மா எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவுகளோடு வாழ்வோம்.

54/20, ஆத்திசூடி வீதி,
யாழ்ப்பாணம்

மகன் - இராசலிங்கம்

## ஓராண்டு நினைவலைகள்

தோற்றம்
06.07.1961

மறைவு
29.07.2016



அமரர்
**தெண்டாயுதபாணி சந்தனக்குமாரன்**

அன்புக்கு இலக்கணமாய் பாசத்தின் பிறப்பிடமாய்
கருணையின் வடிவமாய் பக்தியின் இருப்பிடமாய்
கம்பீர நடையும் என்றும் மறவாத புன்சிரிப்பும் உடையவரே!
எம்மை விட்டு சத்தியாக பிரிந்தது ஏனோ!
பொறுக்காத காலனவன் உம் நல்லுள்ளங்கண்டு
எம்மிடமிருந்து உம்மைப் பிரித்தது ஏனோ?
ஆண்டொன்று ஆனாலும் எம் கண்முன்னே
எப்பொழுதும் எங்களுடன் வாழ்வீர்கள்....!
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

என்றும் உங்கள் அழியாநினைவுகளுடன்
அன்பின் பிரிவால் துயருறும்
அன்பு மனைவி, பிள்ளை

மீசாலை மேற்கு,
மீசாலை.

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் **பஞ்சவர்ணம்பிள்ளை கிருஷ்ணமூர்த்தி**
(தேவி அச்சக ஸ்தாபகர்,
மூர்த்தி விளம்பர சேவை)

அன்பு அப்பா பாசத்தின் நிறைகுடமாய்
பரிவுடன் எமை வளர்த்து கல்வியூட்டி
வாழ்வின் பாதைக்கு வழிகாட்டிய
அன்புத்தெய்வமே! ஆண்டுகள் ஆறு
ஆனாலும் ஆறாது எமது சோகம்
இதயங்களில் சுமையோடு
காத்திருக்கிறோம் அப்பா!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!
உங்கள் நினைவுகளுடன் உங்கள் ஆத்மா சாந்தியடைய
மாரியம்மனை வேண்டி நிற்கும்.

குடும்பத்தினர்.
114/19, நாவலர் றோட்,
யாழ்ப்பாணம்.



மலர்வு
15.03.1936

உதிர்வு
26.09.2011

திதி: சதுர்த்தசி (18.09.2017)

## பதினேழாம் ஆண்டு நினைவலைகள்





அமரர் **கணபதிப்பிள்ளை யோகலிங்கம்**

செல்வி **தமிழரசி யோகலிங்கம்**

05.11.1948 - மண் மகிழ - 23.05.1975
கண் நெகிழ - 26.09.2000

திதி: சதுர்த்தசி 18.09.2017

சோகத்தின் சுமையதனை சுமக்கின்றோம் இதயமதில்
பாசத்தின் உறவுகள் நாம் பரிதவித்து வாடுகின்றோம்
நேசத்தை மறந்தது ஏன் ? நீங்கள் நெடுந்தூரம் சென்று
பதினேழு ஆண்டுகள் ஆயிற்றே !
ஜனனமும் புவியில் புதியது இல்லை
மரணத்தைப் போல் ஒரு பழையதும் இல்லை
இரண்டுமில்லாவிடில் இயற்கையும் இல்லை
இயற்கையின் ஆணைதான் ஞானத்தின் எல்லை

சந்தை வீதி, கொடிகாமம்.
077 844 9462

உங்கள் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்.

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்
05 . 02 . 1943



மறைவு
20 . 08 . 2017

கடந்த 20.08.2017 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

**அமரர் கோவிந்தபிள்ளை பசுபதி**

அவர்களின் சிவப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (19.09.2017) செவ்வாய்க்கிழமை அதிகாலை 5.30 மணியளவில் திருநாவலூர் தெணியம்மன் கோயில் அந்தியேட்டி மடத்தில் நடைபெறும். அந்நிகழ்விலும் தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் முற்பகல் 11 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்துகொண்டு அன்னாரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

மற்றும் அன்னாரின் இறுதிக்கிரியைகளில் பங்கு பற்றி எமக்கு ஆறுதல் கூறிய அன்பு நெஞ்சங்கள் அனைவருக்கும் நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**குறிப்பு:- தயவு செய்து இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.**

குடும்பத்தினர்.
கதிரைவேற்பிள்ளை வீதி,
தம்பசிட்டி.
தொ.பே.இல. 077 843 1249
(திருமதி பசுபதி இந்திராணி)

*உயர் நீதிமன்றத் தீர்ப்புக்கமைய*

# தனியாரின் தொடர்மாடியை மீள வழங்க பூஜித்துக்குக் கடிதம்

கொழும்பு, செப். 18

வெள்ளவத்தை, சப்பல் ஒழுங்கையில் அமைந்துள்ள தனியாருக்குச் சொந்தமான தொடர்மாடி வீட்டை அரசுடைமையாக்கியமை சட்ட ரீதியற்றதெனக் கூறி அதனை மீள ஒப்படைக்குமாறு உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பை நடைமுறைப்படுத்துமாறு, பொலிஸ்மா அதிபருக்கு மனுதாரரின் சட்டத்தரணியால் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

சுவிற்சர்லாந்தை வசிப்பிடமாகக் கொண்ட சண்முகம் சிவராஜா, சிவராஜா சரோஜினி ஆகியோருக்கு வெள்ளவத்தை, சப்பல் ஒழுங்கையில் தொடர்மாடி வீடொன்று அமைந்துள்ளது. முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவினால் 2009ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 7ஆம் திகதி நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட அவசரகால ஒழுங்கின் அடிப்படையில் தொடர்மாடி வீடு வர்த்தமானி அறிவித்தல் மூலம் அரச உடைமையாக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடைப்பிரிவுப் பொலிஸாரின் வேண்டுகோளுக்கு அமைய, தமிழீழ விடுதலைப் புலிகளுக்குத் தொடர்மாடிக் கட்டடத்தில் மருத்துவ நிலையத்தை நடத்துவதற்கு உரிமையாளர்களால் வாடகைக்குக் கொடுக்கப்பட்டது என்ற குற்றச்சாட்டில் அரச உடைமையாக்கப்பட்டுள்ளது.

தொடர் மாடி வீட்டை உரிமையாளர்களிடமிருந்து சட்டரீதியற்ற முறையில் அரச உடைமையாக்கியமைக்கு எதிராக 2010ஆம் ஆண்டு உயர் நீதிமன்றில் அடிப்படை மனித உரிமை மீறல் மனுவைத் தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கில் பொலிஸ் மா அதிபர், அரச தலைவரின் செயலர், பயங்கரவாதத் தடைப்பிரிவின் பொறுப்பதிகாரி, சட்டமா அதிபர் உள்பட நால்வர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டிருந்தனர். இந்த மனு மீதான தீர்ப்பு ஜூலை மாதம் 27ஆம் திகதி வழங்கப்பட்டது. முன்னாள் பாதுகாப்பு அமைச்சரான அரச தலைவர் மகிந்த ராஜபக்சவினால் அரச உடைமையாக்கப்பட்டமை சட்டரீதியற்றதென உயர் நீதிமன்றம் வர்த்தமானி அறிவித்தலை நீக்கியது.

மனுதாரர்களின் அடிப்படை மனித உரிமை மீறல் எனவும் தீர்ப்பு வழங்கியதுடன், தொடர்மாடிக் கட்டடத்தைச் செப்ரெம்பர் மாதம் 27ஆம் திகதி அல்லது அதற்கு முன்னைய திகதியில் பிரதிவாதிகள் மனுதாரர்களிடம் ஒப்படைப்பதுடன் ஐந்து இலட்சம் ரூபா இழப்பீடாக மனுதாரர்களுக்கு வழங்கும்படி உத்தரவிடப்பட்டுள்ளது.

உயர்நீதிமன்ற தீர்ப்பினை நடைமுறைப்படுத்தி, செப்ரெம்பர் மாதம் 27ஆம் திகதி அல்லது அதற்கு முன்னைய திகதியில் தொடர்மாடிக்கட்டடத்தை மனுதாரர்களான குடியிருப்பின் உரிமையாளகளுக்கு கையளிக்கும்படி தீர்ப்பின் அத்தாட்சிப் படுத்தப்பட்ட பிரதியையும் இணைத்து பொலிஸ்மா அதிபருக்கு மனுதாரர்களின் சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசாவினால் கோரிக்கைக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (5)

# உள்ளூராட்சித் தேர்தலுக்கு தயாராகிறது சுதந்திரக் கட்சி

## மைத்திரியே நேரடியாகக் களத்தில்

கொழும்பு, செப். 18

உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான தயார்ப்படுத்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி குதித்துள்ளது.

அந்தக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன நேரடியாகக் களத்தில் இறங்கி, உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் உறுப்பினர்களைத் தெளிவூட்டும் வேலைத் திட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

மேல்மாகாணத்தில் போட்டியிடவுள்ள உறுப்பினர்களைத் தெளிவூட்டும் நிகழ்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலரும், அமைச்சருமான துமிந்த திசாநாயக்க தெரிவித்ததாவது:

சிறிலங்கா சுதந்திரக் கட்சியை முறையான, தூய்மையான கட்சியாகக் கட்டியெழுப்பிக் கடந்த காலத்தில் இடம்பெற்ற தவறுகள் மீண்டும் நிகழாதவண்ணம் அனைத்துத் தரப்பினரும் ஒன்றாக இணைந்து செயலாற்றக் கூடிய அரசியல்க் கட்சியாகக் கட்டியெழுப்ப வேண்டும்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தற்போதைய தலைவர் மைத்திரிபால சிறிசேன அதற்கான தலைமைத்துவத்தைச் சரியான முறை யில் பெற்றுக் கொடுத்துள்ளார். எதிர்காலத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தூய்மையான அரசியல் கட்சியாக வெற்றியை நோக்கிப் பயணிக்கும் - என்றார்.

இங்கு கருத்துத் தெரிவித்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலர் அமைச்சர் மகிந்த அமரவீர, எமது நாட்டின் அரசியல்க் கலாசாரத்தை வெறுப்புக்குள்ளாக்கிய விருப்பு வாக்கு முறைக்குப் பதிலாகத் தொகுதிவாரி தேர்தல் முறையில் எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளமை தூய்மையான அரசியல்க் கலாசாரத்தை மதிக்கும் அனைத்து அரசியல்க் கட்சிகள் மற்றும் பொதுமக்கள் தற்போதைய அரசின் கீழ் பெற்றுக்கொண்டுள்ள முக்கிய மான வெற்றியாகும்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியிடவுள்ள வேட்பாளர்களை மாகாண மட்டத்தில் தெளிவூட்டுவதற்கான செயற்திட்டம் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படும் - என்றார். (5)

# பன்னாட்டு அழுத்தங்களால் அரசின் பாதை மாறாதாம்

## கூறுகிறார் அமைச்சர் சம்பிக்க



கொழும்பு, செப். 18

பன்னாட்டு அழுத்தங்களின் காரணமாகப் பாதையைத் திசைதிருப்ப அரசு ஒருபோதும் முயற்சிக்காது என்று அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இறுதிக் கட்டப் போரில் போர்க் குற்றங்களை இராணுவத்தினர் மேற்கொள்ளவில்லை. இதனை நாம் உறுதியாகக் கூறுகின்றோம். நாட்டின் முப்பது ஆண்டுகாலப் போரை நிறைவிற்குக் கொண்டுவந்த இராணுவத்தைப் பொய்யான காரணிகளினால் தண்டிக்க நாம் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை.

தனிப்பட்ட காரணிகளை நாம் எமது சட்டத்திற்கு அமைவாக விசாரித்து வருகின்றோம். இலங்கையின் உள்ளக விவகாரங்களை எமது நீதிமன்றங்களில் நாம் கையாள வேண்டும். இதில் எந்த அரசு ஆட்சிக்கு வந்தாலும் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. இதை மாற்றியமைக்க யார் முயற்சித்து வந்தாலும் அதற்கு நாம் இடமளிக்கப் போவதில்லை.

புலிகளை நாம் அழித்த போதிலும் பன்னாட்டு ரீதியில் அவர்களின் செயற்பாடுகள் இன்னும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இன்றும் வேறு நாடுகளில் புலிகளின் மீள் இயக்கம் உள்ளது. புலம்பெயர் அமைப்புகளின் உதவியுடன் பன்னாட்டு அமைப்புகளின் மூலமாக இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கப் படுகின்றது. இன்றும் ஐக்கிய நாடுகள் சபையிலும், சிவில் அமைப்புகளின் மூலமாகவும் அவர்களின் குரலே ஒலித்து வருகின்றது.

ஆகவே இவற்றை நாம் கவனத்தில் கொள்ளத்தேவையில்லை.

கடந்த காலத்தில் இலங்கை மீது இருந்த நேரடி அழுத்தங்கள் இன்று கூட்டு அரசின் ஆட்சிக் காலத்தில் குறைக்கப்பட்டுள்ளது. அரச தலைவர் மைத்திரிபால, தலைமை அமைச்சர் ரணில் ஆகியோரின் பன்னாட்டு நட்புறவுகள் இன்று எமது நாட்டை அழுத்தங்களில் இருந்து மீட்டுள்ளது.

இப்போது எழும் சில அழுத்தங்களுக்கு அஞ்சியோ அல்லது மாற்றுக்கொள்கையை உருவாக்கும் நோக்கத்திலோ எமது இராணுவத்தைத் தண்டிக்கும் எந்தவொரு வாய்ப்பையும் எம்மால் ஏற்படுத்திக்கொடுக்க முடியாது. எமது பாதையைப் பன்னாட்டுத் தேவைக்கு ஏற்ற வகையில் மாற்றியமைக்க முடியாது.

அவ்வாறு மாற்றியமைக்கப்பட்டால் அது நாட்டின் இறைமையில் பாதகத்தை ஏற்படுத்தும் வகையில் அமையும். அரசாக நாம் ஒருபோதும் இதற்கு இடமளிக்கப் போவதில்லை - என்றார். (5)

# மேல்மாகாணத்தில் குப்பை கொட்டிய 99பேர் கைது

கொழும்பு, செப். 18

மேல் மாகாணத்தில் முறையற்ற விதத்தில் குப்பை கொட்டிய 99 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இராணுவம் மற்றும் பொலிசார் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே இவர்கள் கைதாகியுள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். கொழும்பு மாவட்டத்தில் 71 பேரும், கம்பகாவில் 28 பேரும் கைதாகியுள்ளதாகத் தெரியவந்துள்ளது. இவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (5)



# தலைவர் அஷ்ரப்பின் தேவை இப்போதும் உணரப்படுகின்றது

## ஹரீஸ் தெரிவிப்பு



கொழும்பு, செப். 18

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கான தீர்வின் போது, தமிழ்த் தலைவர்களால் கூட முஸ்லிம் காங்கிரஸின் மறைந்த தலைவர் அஷ்ரப்பின் தேவை தற்போது உணரப்படுகின்றது. இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் விளையாட்டுத்துறை பிரதி அமைச்சருமான எச்.எம்.எம்.ஹரீஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அஷ்ரப், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸை நிறுவியபோது அவரைப் பலரும் பல்வேறு கோணங்களில் நோக்கினர். சிங்கள பெரும்பான்மை, அஷ்ரப்பை தீவிர போக்குடையவராகப் பார்த்தது. இதனால் ஜே.ஆர். ஜெயவர்த்தன தலைமையில் இருந்த அரசு அவருடைய கட்சியைப் பதிவு செய்யாமல் பலவருடங்கள் இழுத்தடித்தது. கொழும்பில் ஒரு பத்திரிகையாளர் மாநாட்டைக்கூட நடாத்தமுடியாத சூழல் அப்போது நிலவியது. விடுதலை இயக்கங்கள்கூட அவரது இயக்கம் தங்களது போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் என்பதை கணிக்கத் தவறினார்கள். அவர்களும் தவறான அபிப்பிராயத்துடன் அஷ்ரப்பை நோக்கினார்கள்.

இவ்வாறான சூழலில் மறைந்த தலைவர், எமது பார்வை என்ற கொள்கைப் பிரகடனத்தினூடாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இந்த நாட்டில் என்ன செய்யப்போகின்றது என்பதை விளக்கினார்கள். அவர்களுடைய பிரகடனமாது நாட்டின் தேசிய ஒருமைப்பாடு சம்மந்தமானதாக இருந்தது. வட கிழக்கு தமிழ் மக்களுடைய போராட்டத்தையும் இழிவுபடுத்தாமல் அவர்களது நியாயங்களையும் வலியுறுத்திய அதேவேளை முஸ்லிம் மக்களுடைய அபிலாசைகளை வென்றெடுக்கின்ற போராட்டமாகவே அவர்களது பயணம் அன்று அமைந்திருந்தது.

இன்றைய சூழலில், சிறுபான்மை மக்களுக்கு அஷ்ரப்பின் வழிகாட்டல் மிக முக்கியமானது என்று இப்போது நாட்டில் உணரப்படுகின்றது. இன்று வட கிழக்குப் பிரச்சினை தொடர்பான தீர்வின்போது அஷ்ரப்பின் பிரசன்னம் தமிழ்த் தலைவர்களாலும் உணரப்படுகின்றது. தேசிய அரசியலில் தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாசைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் அஷ்ரப்புடைய ராஜதந்திரம் தேவை என்று இன்று உணரப்பட்டுகின்றது.

அஷ்ரப் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸை நிறுவிய காலப்பகுதியில் ஆயுதப் போராட்டத்தில் இணையவிருந்த முஸ்லிம் இளைஞர்களைச் சனநாயக வழிக்கு கொண்டுவந்த பெருமை அவரையே சாரும் - என்றார். (5,46)

# அமைச்சரின் மகனுக்கு 2 மில்லியன் டொலர் கையூட்டு

கொழும்பு, செப். 18

அமைச்சரின் மகன், சீன நிறுவனத்திடமிருந்து 2 மில்லியன் டொலர் கையூட்டல் பெற்றுக் கொண்டுள்ளதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சீன நிறுவத்துடன் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கைக்குப் பிரதி உபகாரமாக இரண்டு மில்லியன் அமெரிக்க டொலர்களை, அமைச்சரின் மகனுக்கு உண்டியல் முறையில் அனுப்பி வைத்துள்ளது.

புறக்கோட்டை உண்டியல் வர்த்தகர் ஒருவரின் ஊடாக அமைச்சரின் மகன் பெற்றுக்கொண்டுள்ளார். இந்தக் கையூட்டல் தொகை மிகவும் இரகசியமான முறையில் கொழும்பிற்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளது என்று நம்பந் தகுந்த வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (5)

# மகிந்த ராஜபக்சவுக்குப் பதவியை விட்டுக் கொடுத்தவர் மைத்திரி

## சதுரிக்கா சிறிசேன தெரிவிப்பு

கொழும்பு, செப். 18

2004ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி வெற்றி பெற்றது. தலைமை அமைச்சராக எனது அப்பாவின் பெயரை, அப்போதைய அரச தலைவர் சந்திரிக்கா முன்மொழிந்தார். அப்பா அதனை நிராகரித்து, மகிந்த ராஜபக்சவை தலைமை அமைச்சராக நியமித்தார். இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் புதல்வி சதுரிக்கா சிறிசேன குறிப்பிட்டுள்ளார்.

'அரச தலைவர் தந்தை' என்ற தலைப்பில் எழுதியுள்ள நூலிலேயே அவர் இது தொடர்பான தகவல்களை வெளியிட்டுள்ளார்.



அந்த நூலில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

போர் நடந்து கொண்டிருந்த போது சர்வாதிகாரத்தை நோக்கிய அரசியல் குறித்து அப்பா அதிருப்தி அடைந்திருந்தார். அவர் சுகாதார அமைச்சராக இருந்தபோது அவருக்கு எதிரான அநீதிகள் கூடியதே தவிர குறையவில்லை. அவர் அரசிலிருந்து விலகும் மனப்பான்மை வரும் வரை அது உக்கிரமடைந்தது.

மூன்றாவது முறையும் அரச தலைவர் வேட்பாளராக மகிந்த ராஜபக்ச போட்டியிடுவதற்கு முனைந்தபோது, அவரைப் போட்டியிட வேண்டாம் என்று நேரடியாகவே பல தடவைகள் அப்பா கூறியிருந்தார். அவ்வாறு கூறுவதற்கு அவர் அஞ்சவில்லை. இந்தச் சந்தர்ப்பத்தை வேறு ஒருவருக்கு வழங்குமாறு கடிதமும் எழுதியிருந்தார். எனினும் இறுதியில் வைராக்கியம் இன்னும் இன்னும் அதிகரித்ததே ஒழிய, குறையவில்லை.

மகிந்த ராஜபக்சவுக்கும் அப்பாவுக்கும் இடையில் நீண்டகால நட்புறவு காணப்பட்டது.

### மகிந்தவை முன்மொழிந்த மைத்திரி

2003ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஐக்கிய தேசியக் கட்சி அரசு கவிழ்க்கப்பட்டதை அடுத்து, 2004ஆம் ஆண்டு தேர்தலில் மக்கள் விடுதலை முன்னணியுடன் சிறிலங்கா சுதந்திரக் கட்சி இணைந்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியாகப் போட்டியிட்டு வெற்றிபெற்றது. இதன்போது தலைமை அமைச்சர் பதவிக்கு யாரை நியமிக்க வேண்டும் என்ற பேச்சுக்களில் அநுர பண்டாரநாயக்கவின் பெயரை அப்போதைய அரச தலைவர் சந்திரிகா குமாரதுங்க முன்மொழிந்தார். எனினும் இதற்கு மக்கள் விடுதலை முன்னணி கடும் எதிர்ப்பு வெளியிட்டது.

இதையடுத்து சந்திரிகா அம்மையார் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலரான அப்பாவின் பெயரை முன்வைத்தபோது அதற்கு அப்பா இணங்கவில்லை. அதற்குப் பதிலாக அவர் மகிந்த ராஜபக்சவின் பெயரையே முன்வைத்தார். இதையடுத்து, அனைவரின் இணக்கத்தின் பிரகாரம் மகிந்த ராஜபக்ச தலைமை அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

### மகிந்தவால் அதிருப்தி அடைந்த சந்திரிகா

2005ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தலில் வேட்பாளராக நிறுத்துவதற்கு அநுர பண்டாரநாயக்கவின் பெயரைச் சந்திரிகா குமாரதுங்க முன்மொழிந்தபோது, தற்போதைய நிலையில் வேட்பாளராக நிறுத்துவதற்கு மகிந்த ராஜபக்சவே தகுதியானவர் என்று அப்பா முன்மொழிந்தார். அதனை அலவி மௌலானா ஆமோதித்தார்.

அப்போது வேறு யார் தான் உள்ளார் என்று கூறி சந்திரிகா அம்மையார் அதிருப்தியுடனே சென்றார். தனக்குக் கிடைத்த வாய்ப்பை அப்பா தியாகம் செய்தார்.

அதிகார மோகம் கொண்டு அரசியல் ரீதியாக ராஜபக்ச தோல்வி அடைவதனைப் பார்க்க அவர் விரும்பவில்லை.

மகிந்த ராஜபக்சவின் வெற்றிக்காகப் பாடுபட்டார். ராஜபக்சவை நண்பராகவே எனது அப்பா காண்பிக்க முயன்றார். ஆனால் அந்த நட்பைப் பயன்படுத்தி அவருக்கு எதிராகச் சதியும் பொறாமையும் மேலோங்கியது.

### நட்பைக் குழப்பிய பசில்

மகிந்த ராஜபக்சவுக்கும் அப்பாவுக்கு இடையிலான நட்புறவுக்கு முட்டுக்கட்டை போடும் வகையில் பசில் ராஜபக்ச செயற்பட்டமை நட்புறவு பாதிப்படைவதற்கு முக்கிய காரணமாக இருந்தது. அவர் மைத்திரிபால சிறிசேன எதிர்ப்புக் கொள்கையைக் கடைபிடித்து, அதிஷ்டம் இல்லா அரசியல்வாதியாகக் காண்பிக்க முனைந்தார். பசில் ராஜபக்ச தேசிய அமைப்பாளராகப் பதவி ஏற்ற பின்னர் இது மேலும் உக்கிரமடைந்தது.

அப்பா வீட்டிற்கு வரும் போது கவலையுடன் இருப்பதை அவரது முகத்தைப் பார்க்கும் எம்மால் உணர முடிந்தது. அப்போது எமது அம்மா, நாம் இதிலிருந்து விடுதலையாக வேண்டும் எனக் கூறினார். அப்பாவின் கவலை மேலும் மோலோங்கியதை அடுத்து இதனை எந்நேரமும் பொறுத்துக் கொள்ள முடியாது.

இது மாற வேண்டும் என அம்மா அழுத்திக் கூறினார். வீட்டில் இருந்தாலும் அம்மாவுக்குச் சிறந்த அரசியல் அறிவு இருந்தது.

### அரசியலிலிருந்து ஓய்வு

போர்க்காலத்தின் போது காணப்பட்ட அரசியல் போக்கில் அதிருப்தி அடைந்திருந்த அப்பா, அரசியலில் இருந்து ஓய்வு பெற நினைத்தாரே தவிர, சதித்திட்டங்களில் ஈடுபட ஒருபோதும் நினைக்கவில்லை.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலராகவும் சுகாதார அமைச்சராகவும் இருந்த தனக்கே இத்தகைய அழுத்தம் எனில் சாதாரண மக்களின் நிலைமையைக் கருதி அப்பா கவலையடைந்தார். இதன்பின்பே சிவில் அமைப்புகள் வந்து பேசின. அதன்பின்னர் பொதுவேட்பாளர் தெரிவு செய்வதில் பலரின் பெயர்கள் முன்வைத்த போதிலும் பின்னர் அப்பாவின் பெயரைச் சந்திரிகா அம்மையார் முன்வைத்தார் - என்றார். (5)

# வடகொரியாவிடமிருந்து பொருள்கள் இறக்குமதி எப்படி நடந்தது?

## விழிபிதுங்கி முழிக்கிறது கொழும்பு விசாரணைக்கும் உத்தரவிட்டுள்ளது

கொழும்பு, செப். 18

ஐ.நாவின் தடைகளை மீறி வடகொரியாவிடம் இருந்து பொருள்கள் இறக்குமதி செய்யப்பட்டமை தொடர்பாக, அமைச்சு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

ஐ.நாவின் தடைகளை மீறி, வடகொரியாவிடம் இருந்து கடந்த ஆறு மாதங்களில் இலங்கை உள்ளிட்ட 11 நாடுகள் இரும்பு, செம்பு, நிலக்கரி உள்ளிட்ட பொருள்களை இறக்குமதி செய்திருப்பதாக, ஐ.நாவின் ஏற்றுமதி கண்காணிப்புக் குழு அறிக்கை சமர்ப்பித்திருந்தது.

ஐ.நாவின் தடைகளை மீறியதாக இலங்கை மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ள நிலையில், கொழும்பு நெருக்கடியில் சிக்கியுள்ளது.

வடகொரியாவிடம் இருந்து, இரும்பு, செம்பு போன்ற பொருள்கள் இறக்குமதி செய்யப்பட்டமை தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று அயலுறவுத்துறை இராஜாங்க அமைச்சர் வசந்த சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

வடகொரியா மீது ஐ.நாவினால் தடைகள் விதிக்கப்பட்டுள்ளன என்பது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பையும் அயலுறவுத்துறை அமைச்சு வெளியிடவுள்ளது.

தடைகள் தொடர்பாக உள்ளூர் வர்த்தகர்கள் அறிந்து கொள்வதற்கு இந்த வர்த்தமானி அறிவிப்பு உதவியாக இருக்கும் என்று அயலுறவுத்துறை அமைச்சின் சட்டப் பிரிவு அதிகாரி தெரிவித்துள்ளார். (5)

## டெங்கு ஒழிப்பு

# கிணற்றுக்குள் தவறி வீழ்ந்த அரசியல்வாதியின் மகள்

கொழும்பு, செப். 18

கொழும்பு மாவட்டத்தில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தில் கலந்து கொண்ட அரசியல்வாதியின் மகள் ஒருவர் மூடி வைக்கப்பட்ட கிணற்குள் தவறி விழுந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. உடனடியாக அரசியல்வாதியின் பாதுகாப்புப் பிரிவினரால் அவர் கிணற்றில் இருந்து மீட்கப்பட்டார்.

டெங்கு நோய் ஒழிப்பு நடவடிக்கையின்னை ஒளிப்பதிவு செய்வதற்கு ஊடகவியலாளர்கள் சிலர் சென்றுள்ளனர். இதன்போது அவர் கிணற்றுக்குள் விழுந்த காட்சியும் பதிவாகியுள்ள நிலையில் அதனை உடனடியாக அழிப்பதற்குப் பாதுகாப்புப் பிரிவினரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அரச அதிகாரிகளுடன் மேற்கொள்ளப்பட்ட வேலையின்போது கிணற்றுக்கு மேல் மூடப்பட்டிருந்த பாதுகாப்பு மூடியின் மீது கால் வைத்தமையினால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது. (5)



# அம்பாறை வானிலிருந்து பொதிகளைப் போட்ட அமெரிக்க வானூர்தி

கொழும்பு, செப். 18

13 பசுபிக் நாடுகளின் வான் படைகள் பங்கேற்ற ஒன்றுகூடல் மற்றும் ஒத்திகைப் பயிற்சி நேற்றுமுன்தினம் சனிக் கிழமையுடன் நிறைவு பெற்றது.

அமெரிக்காவின் பசுபிக் கட்டளைப் பீடத்தின், பசுபிக் வான் படையினால், இலங்கைக் கடற்படையுடன் இணைந்து ஒழுங்கு செய்யப்பட்ட இந்த ஒன்றுகூடல் மற்றும் ஒத்திகைப் பயிற்சி நீர்கொழும்பு விடுதி, கட்டுநாயக்க வான்ப்படைத் தளம் ஆகியவற்றில் இடம்பெற்றது.

இதன் இறுதி நாள் நிகழ்வாக, அம்பாறை வான் படைத் தளம் அருகே வானில் இருந்து பொதிகளைத் தரையிறக்கும் ஒத்திகை நிகழ்த்தப்பட்டது.

அமெரிக்க வான் படையின் வானூர்தியில் இருந்து பொதிகள் தரையிறக்கப்பட்டதையடுத்து, கட்டுநாயக்க விமானப்படைத் தளத்தில் பயிற்சி பெற்ற படையினருக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. (5)

# வடக்கு அதிவேக நெடுஞ்சாலைக்கு இந்தியா உதவுமாம்

கொழும்பு, செப். 18

வடக்கு அதிவேக நெடுஞ்சாலையை அமைப்பதற்கு உதவிகளை வழங்க இந்தியா இணங்கியுள்ளதாகக் கொழும்பு ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்த, இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் சுஸ்மா சுவராஜ், அரச தலைவர் மைத்திரிபால மற்றும் தலைமை அமைச்சருடன் நடத்திய பேச்சுக்களின் போதும், இலங்கை அயலுறவுத்துறை அமைச்சர் திலக் மாரப்பன கடந்தவாரம் புதுடில்லிக்கு மேற்கொண்ட பயணத்தின் போதும் நடத்தப்பட்ட பேச்சுக்களின் போதும், இதற்கான இணக்கப்பாடுகள் காணப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் சுஸ்மா சுவராஜ், இந்தியப் பெருங்கடல் மாநாட்டுக்காகக் கொழும்பு வந்திருந்த போது, அயலுறவுத்துறை அமைச்சு இது தொடர்பான கோரிக்கைக் கடிதத்தைச் சமர்ப்பித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (5)

# இலங்கைக்குக் கடன் வழங்க முயற்சியா?

## எக்சிம் வங்கிக் குழு வருகை

கொழும்பு, செப். 18

இலங்கைக்குப் பெருமளவு கடன்களை வழங்கியுள்ள சீனாவின் ஏற்றுமதி இறக்குமதி வங்கியின் (எக்சிம் வங்கி) உயர்மட்டக் குழு அடுத்தவாரம் வரவுள்ளது.

சீன எக்சிம் வங்கியின் சலுகைக்கடன் திணைக்களத்தின் பிரதிப் பொது முகாமையாளர் லிடான் உள்ளிட்ட அதிகாரிகள் இந்தக் குழுவில் இடம்பெறவுள்ளனர்.

அடுத்த ஆண்டுக்காக ஒதுக்கப்பட்ட நிதி தொடர்பான மதிப்பீடுகளைச் செய்யவே இந்தக் குழு இலங்கைக்கு வரவுள்ளது.

சீனாவின் எக்சிம் வங்கி ஏற்கனவே இலங்கையில் பல்வேறு திட்டங்களுக்குக் கடன்களை வழங்கியுள்ளது. அம்பாந்தோட்டைத் துறைமுகம், நுரைச்சோலை அனல்மின் நிலையம், மத்தல விமான நிலையம் ஆகிய திட்டங்களுக்கும் சீன எக்சிம் வங்கியே கடன்களை வழங்கியது.

நெடுஞ்சாலைகள், நீர்ப்பாசனம், வடிகாலமைப்பு உள்ளிட்ட உட்கட்டமைப்புத் திட்டங்களுக்கு மேலும் நிதி உதவிகளைப் பெற்றுக் கொள்வது தொடர்பாக, இலங்கை வரவுள்ள சீன எக்சிம் வங்கிக் குழுவுடன், இலங்கை அரசு பேச்சு நடத்தவுள்ளது. (5)



# ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை

நியூயோர்க், செப். 18
ஜப்பானுக்கு மேலாக ஏவுகணைச் சோதனைகள் நடத்துவதற்காகவும், அணுவாயுதங்களின் கையிருப்பை அதிகப்படுத்துவதற்காகவும் வடகொரியாவுக்கு தனது கண்டனத்தைத் தெரிவித்தது ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை.
ஜப்பானுக்கு மேலாக கடந்த வெள்ளிக்கிழமை வடகொரியா மற்றொரு ஏவுகணைச் சோதனையை நடத்தியது. மட்டுமல்லா


மல் தனது சோதனை
ளாதாரத் தடையும் க
ரிக்காவுக்கு நிகராக
'வரும்வரை ஏவுக
தொடரும் என்றும் வ

# அணுஆயுதக் கையிருப்பி
# சமநிலை பெறும் வரையி
# உற்பத்திகள் கைவிடப்பட

## வடகொரியா அறிவிப்பு

பியாங்யாங், செப். 18
"அணு ஆயுதக் கையிருப்பில் அமெரிக்காவுக்கு இணையாக சமநிலை பெறும் வரையில் உற்பத்தியைத் தொடருவோம்" என வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் தெரிவித்துள்ளார்.
பன்னாட்டுச் சட்டதிட்டங்களை மீறி வடகொரியா தொடர்ந்து ஆயுத மற்றும் அணுவாயுதச் சோதனைகளை நடத்தி வருகிறது. இதற்கு உலக நாடுகள் பலவும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. வடகொரியாவைக் கட்டுப்படுத்துவதில் அமெரிக்கா கூடுதல் முனைப்புடன் செயற்படுகிறது. வடகொரியாவின் அயல் நாடுகளான ஜப்பான் மற்றும் தென்கொரியா என்பன அமெரிக்காவுடன் கைகோர்த்துள்ளன. இது வடகொரியாவுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளது.
வடகொரியா இந்த மாததத்தில் மட்டும் மூன்று முக்கிய சோதனைகளை நடத்தியுள்ளது. இரண்டு ஏவுகணைகள் ஜப்பான் கடல் பரப்புக்கு மேலாகப் பறந்தன. ஒரு சோதனை ஐதரசன் குண்டுச் சோதனையாக அமைந்தது. ஐதரசன் குண்டுச் சோதனை அணுகுண்டுச் சோதனையை விடவும் சக்தி வாய்ந்தது. இந்தச் சோதனையின் போது 6.3 ரிச்டர் அளவில் நில அதிர்வு இருந்தது என்றும் சொல்லப்படுகிறது. இந்தச் சோதனைகளால் வடகொரியா மீது விதிக்கப்பட்டிருந்த பொருளாதாரத் தடைகள் மேலும் இறுக்கப்பட்டுள்ளன. வடகொரியா அணுவாயுதச் சோதனையைக் கைவிட வேண்டும் என்று உலக நாடுகள் அழுத்தம் கொடுத்து வரும் நிலையில் இந்த விடயத்தில் மௌனம் கலைத்துள்ளது வடகொரியா.
"எம்மீது ஏகப்பட்ட தடைகளை விதித்துள்ள பெரிய வல்லரசு நாடுகளுக்கு எமது அணு ஆயுத வல்லமையை நாம் நிலைநாட்டிக் காட்ட வேண்டும். இதன்மூலம், வடகொரியா மீது ராணுவ ரீதியிலான நடவடிக்கை எடுக்கும் துணிச்சல் அமெரிக்காவுக்கு ஏற்படாத வகையில் அந்த

நாட்டுக்கு இணையா
ஆயுதங்கள் கையி
வேண்டும். அமெ
ராக ஆயுதக் கைய
வரை சோதனைக
ளும் தொடரும்" எ
அதிபர் கிம் ஜோங் உ
என அந்த நாட்டு
நேற்றுச் செய்தி வெ



# 82 கோடி மக்கள் பசியால் வாட்டம்

வொஷிங்டன், செப். 18
'உலகம் முழுவதும் சுமார் 82 கோடி பேர் பசியால் வாடுகின்றனர். இது உலக மக்கள் தொகையில் 11 சதவீதமாகும். ஆசியாவில் மட்டும் 52 கோடி பேரும் ஆபிரிக்காவில் 24 கோடி பேரும் பசியால் வாடுகின்றனர்' என்று உலக சுகாதார நிறுவனம் தனது அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளது.
உள்நாட்டுப் போர், பருவநிலை மாற்றத்தால் ஆண்டுதோறும் பசியால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. கடந்த 10 ஆண்டுகளில் பல்வேறு நாடுகளில் உள்நாட்டுப் போர்கள் தீவிர மடைந்துள்ளன. இதுவே பசியால் வாடுவோரின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு காரணம். இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)




# காங்கிரஸ் கட்சியின் தலைவராக ராகுல்?

இந்திய அளவிலான காங்கிரஸ் நிர்வாகிகள் தேர்தல் அடுத்த மாதம் நடைபெற உள்ள நிலையில், ராகுல்காந்தி காங்கிரஸ் கட்சியின் புதிய தலைவராக தேர்வு செய்யப்படுவார் என்று தகவல் வெளியாகியுள்ளது.
காங்கிரஸ் கட்சிக்கு தற்போது சோனியாகாந்தி தலைவராக இருந்து வருகிறார். கடந்த சில ஆண்டுகளாக அவர் உடல் நலக்குறைவால் தொடர்ந்து ஓய்வு பெற்று வருகிறார்.
மிக முக்கிய அரசியல் பிரச்சினைகளில் மட்டுமே அவர் தலையிடுகிறார். இதனாலேயே தலைமைத்துவம் மாற்றப்படவுள்ளது என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)

# மீட்கப்படவில்லை மாராவி தீவு



மணிலா, செப். 18
பிலிப்பைன்ஸின் மாராவி தீவு ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுததாரிகளின் பிடிக்குள் கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் விழுந்தது. இன்றுவரை இந்தத் தீவு மீடகப்படவில்லை.
பிலிப்பைன்ஸின் மாராவி தீவு கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பிடிக்குள் சென்றது.
மாராவில் தீவில் வசித்துவந்த பாதிரியார்கள், கிறிஸ்தவ மக்கள் பலரையும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு பிணையக் கைதி களாக பிடித்து வைத்திருந்தது. நகரை மீட்கும் போர் தொடர்ந்து வந்தது. எனினும் மாராவியை முழுமையாகக் கைப்பற்றிவிட முடியவில்லை.
மராவி மீட்கப்படுகிறது என்று பலமுறை தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும் இன்னும் மீட்புப் பணிகள் முழுமை பெறவில்லை. (ம)




# கோப்
# செல்
# பிரான

தைவானில் உ
னம் ஒன்றில்
உருவங்களை
நுரையில் உரு
கின்றார்கள்.
"செல்லப் பிரா
ளைக் கொடுத்தா
உருவத்தை கோ
வந்துவிடுவோம்
யங்களை என்
வார்கள். நு
வத்தைநான்கொ
இந்த கோபிகளு
அதிகம் இருக்கி
நிறுவனத்தின்
குயீ பாங்.

# சபை வடகொரியாவுக்குக் கண்டனம்

து சோதனைகளை எந்தப் பொரு தடையும் கட்டுப்படுத்தாது. அமெ க்கு நிகராக ஆயுதக் கையிருப்பு ரை ஏவுகணைச் சோதனைகள் ம் என்றும் வடகொரியா அறிவித்துள்ளது. இதையடுத்து ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபை நேற்றுமுன்தினம் ஒன்றுகூடியது. இந்தக் கூட்டத்தில் வைத்து வடகொரியாவுக்கு தனது கண்டனத்தைத் தெரிவித்தது ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபை. 'வடகொரியா விடுத்துள்ள எச்சரிக்கை ஒட்டுமொத்த உலகத்துக்குமான எச்சரிக்கை' என்று ஐக்கிய நாடுகள் சபை தனது செய்திக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளது. (ம)

பில்
யில்
படா






## மியன்மார் மீது வேண்டும் போர் பங்களாதேஷ் மக்கள் முழக்கம்

டாக்கா, செப். 18

ரொஹிங்ய முஸ்லிம்களின் பிரச்சினைக்கு முடிவு காணப்பட வேண்டுமாயின், மியன்மார் மீது போர் தொடுக்க வேண்டும் என்று வலியுறுத்திப ல்லாயிரக் கணக்கான மக்களின் பங்குபற்றலுடன்பங்களாதேஷில் பெரும் பேரணி ஒன்றுநேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது.

மியன்மார், பௌத்தர்களை பெரும்பான்மை இனமாகக் கொண்ட நாடு.

இங்கு சிறுபான்மை மக்களாக ரொஹிங்ய முஸ்லிம்கள் வாழுகின்றனர்.

கடந்த 25ஆம் திகதி ரொஹிங்ய முஸ்லிம்களின் உரிமைக்காகப் போராடிவரும் ஆயுதக் குழு மியன்மார் சிப்பாய்கள் மீது தாக்குதல் நடத்தியதில் 10 சிப்பாய்கள் உயிரிழந்துள்ளனர்.

இதையடுத்து ரொஹிங்யர்கள் மீதான அடக்குமுறைகள் அதிகரித்துள்ளன. இதுவரை சுமார் 5 லட்சம் ரொஹிங்யர்கள் அகதிகளாக் பங்களாதேஷுக்கு சென்றுள்ளனர்.

மியன்மார் அரசுக்கு எதிராக உலகெங்கிலும் ஆர்ப்பாட்டம் நடைபெற்று வரும் நிலையில், பங்களாதேஷின் தலைநகர் டாக்காவில் நேற்றுமுன்தினம் மிகப் பெரும் பேரணி ஒன்று நடைபெற்றுள்ளது.

மியன்மார் அரசின் தலைமை ஆலோசகர் ஆங் சாங் சூகிக்கு எதிராக கடும் முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

மியன்மார் மீது பங்களாதேஷ் போர் தொடுக்க வேண்டும் என்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)

## மோர்சியின் தண்டனை உறுதி செய்யப்பட்டது

கெய்ரோ, செப். 18

எகிப்து நாட்டின் ரகசியத் தகவல்களை கட்டார் நாட்டிற்கு விற்ற குற்றச் சாட்டில் எகிப்து நாட்டின் முன்னாள் அதிபர் மொகமட் மோர்சிக்கு விதிக்கப்பட்ட ஆயுள் தண்டனையை நீதிமன்றம் உறுதி செய்துள்ளது.

எகிப்து நாட்டில் கடந்த 2012ஆம் ஆண்டு நடைபெற்ற அதிபர் தேர்தலில் வெற்றிபெற்ற மொகமட் மோர்சி அந்த நாட்டின் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவரது ஆட்சிக்கு எதிராக மக்கள் புரட்சி வெடித்தது. இதையடுத்து அவரது ஆட்சி கலைக்கப்பட்டு இராணுவ ஆட்சி கொண்டுவரப்பட்டது.

இவர், பதவியில் இருந்தபொழுது நாட்டின் முக்கிய ஆவணங்களை கட்டார் நாட்டிற்கு திருட்டுத்தனமாக விற்பனை செய்தார் என்றும் தேர்தலின் போது மோசடி செய்தார் என்றும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

கடந்தாண்டு ஜூன் மாதம், ஆவணங்கள் விற்பனை செய்த வழக்கில் அவருக்கு நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்தது. பின்னர் நவம்பர் மாதம், தேர்தல் மோசடி வழக்கிலும் அவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

எகிப்து நாட்டில் ஒரு ஆயுள் தண்டனை என்றால் 25 ஆண்டுகள் சிறைத் தண்டனையாகும்.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து அவர் தொடுத்த மேல்முறையீட்டு மனுவை எகிப்து நீதிமன்றம் நேற்றுமுன்தினம் விசா ரித்தது.

விசாரணை முடிவடைந்த நிலையில் அவருக்கு அளித்த ஆயுள்தண்டனையை நீதிமன்றம் உறுதிசெய்துள்ளது.

இந்தத் தீர்ப்பு இறுதியானது, இதற்கு பின்னர் மேல்முறையீடு செய்ய முடியாது எனவும் நீதிமன்றம் உத்தரவில் குறிப்பிட்டுள்ளது. (ம)

## படகு மூழ்கியதில் 33 பேர் உயிரிழப்பு

*நைஜீரியாவில் துயரம்*

நைஜீரியாவின் நைஜர் ஆற்றில் பயணம் செய்த படகு ஒன்று நேற்றுமுன்தினம் மூழ்கியதில் 33 பேர் உயிரிழந்தனர்.

இந்தப் படகில் சுமார் 150 பயணிகள் பயணம் செய்தனர். வர்த்தகப் பொருள்களும் ஏற்றப்பட்டிருந்தன. அளவுக்கதிகமான சுமையே படகு விபத்துக்கு உள்ளாகக் காரணம் என்று சொல்லப்படுகிறது.

84 பேர் மட்டுமே மீட்கப்பட்டுள்ளனர். எனவே உயிரிழப்பு இன்னும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது. (ம)



து இணையாகஎம்மிடம்அணு ங்கள் கையிருப்பில் இருக்க டும். அமெரிக்காவுக்கு நிக ஆயுதக் கையிருப்பு ஏற்படும் சோதனைகளும் தயாரிப்புக்க தொடரும்" என்று வடகொரிய கிம் ஜோங் உன் தெரிவித்தார் அந்த நாட்டு ஊடகங்கள் சில ச் செய்தி வெளியிட்டன. (ம)

## கோப்பியில் செல்லப் பிராணிகள்

வானில் உள்ள கோப்பி நிறுவ ஒன்றில் விலங்குகளின் உருவங்களை, கோப்பியின் நுரையில் உருவாக்கி வழங்கு றார்கள்.

செல்லப் பிராணிகளின் படங்க க் கொடுத்தால், அதே போன்ற உருவத்தை கோப்பியில் கொண்டு துவிடுவோம். அடிப்படை விட களை என் ஊழியர்கள் செய் ர்கள். நுரை மூலம் உரு தை நான் கொண்டுவருவேன். த கோபிகளுக்கு வரவேற்பு கம் இருக்கிறது" என்கிறார் வனத்தின் இயக்குநர் சாங் பாங். (ம)



அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தை 'இர்மா' என்ற புயல் அண்மையில் தாக்கியது. புயலால் பல மில்லியன் டொலர்கள் அளவில் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மீட்புப் பணிகள் தற்போதும் நடைபெற்று வருகின்றன. (ம)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# நாட்டைப் பாதுகாப்பது பிக்குகளின் கடமையா?

இது பௌத்த நாடு. பிக்குகள் நாட்டின் காவல் தெய்வங்கள். அமைச்சர்கள் பௌத்தத்தை மதிக்கத் தவறுகின்றார்கள். நாடாளுமன்றம் தற்போது கெட்டவர்களின் கூடாரமாக மாறியுள்ளது.

இவ்வாறெல்லாம் பேசியிருப்பவர் வேறு யாருமல்லர் இலங்கையின் பெரும் மாகாநாயக்கபீடமான அஸ்கிரிய பீடத்தின் நாயக்கர் வரகாகொட ஞானரத்ன தேரர். நாட்டின் மரியாதைக்குரிய இடமாக இருக்க வேண்டிய நாடாளுமன்றம் வளரும்பிள்ளைகளை அழைத்துச்செல்லக்கூடாத இடம் என்று கூறுமளவுக்குத் தரம் தாழ்ந்துவிட்டது என்றும் கவலைப்பட்டிருக்கிறார் அவர்.

அண்மையில் இதே மடாதிபதியைச் சந்தித்த பின்னர் அவரைப் பற்றியும் அவரது நடத்தையைப் பற்றியும் கவலை வெளியிட்டிருந்தார் வடக்கு மாகாண முதலமைச்சர் சி .வி. விக்னேஸ்வரன். அதிலும் மற்றொரு மடாதிபதியுடன் ஒப்பிட்டும் அவர் கருத்துரைத்திருந்தார்.

மல்வத்த பீடம் தம்மை நல்ல மனதுடன் வரவேற்று உபசரித்துப் பேசியபோதும் அஸ்கிரிய மடாதிபதி தனது பௌத்த மேலாதிக்கத்தை நிலைநிறுத்தும் நுணுக்கமான நகர்வுகள் ஊடாகவே தம்மை வரவேற்றிருந்தார் என்பதை அவர் தெளிவாகவே பதிவு செய்திருந்தார். மடாதிபதியும் பீடத்தைச் சேர்ந்த உறுப்பினர்களும் மேலே, உயரத்தில் அமர்ந்திருக்க முதலமைச்சரும் அவருடன் சென்றவர்களும் கீழே அமர வைக்கப்பட்டார்கள். வந்திருந்தவர்களின் சமய, பாரம்பரியங்களுக்கு மதிப்பளிக்காமல் பௌத்த பாரம்பரியத்தின்படி தாமே உயர்ந்தவர்கள் என்பதை நிலைநிறுத்தும்படியாகவே அந்த நடத்தைகள் இருந்தன என்பதை முதலமைச்சர் சுட்டிக் காட்டியிருந்தார்.

ஒரு ஆன்மிக மடாதிபதி அதிலும் அன்பை மட்டுமே போதிக்கும் சமய அமைப்பொன்றின் அதிபதியே இவ்வாறு அடுத்தவர் மனம்நோக ஆதிக்கப் போக்கோடு நடக்கும்போது அவரால் வழிநடத்தப்படும் அரசியல்வாதிகளும் மக்கள் கூட்டத்தினரும் எப்படி அவர் எதிர்பார்ப்பதைப் போன்று நல்லவர்களாக மட்டுமே இருப்பார்கள்? அன்பையும் ஆன்மிகத்தையும் மட்டுமே போதித்து மக்களை நல்வழிப்படுத்தியிருக்க வேண்டிய பிக்குகள் அரசியலில் தலையிட்டதன் விளைவாகவே இலங்கைநாடு இன்றுவரையில் சிக்கல்களில் சிக்கிச் சீரழிந்துகொண்டிருக்கிறது.

இன்றும் பிரச்சினைகளில் இருந்து நாடு மீள முடியாமைக்கு பிக்குகளின் அரசியலே முக்கிய காரணம் என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்வார்கள். இறைவன் மீதான அன்புக்கு வழிகாட்டி அதன் மூலம் முக்திப் பேறை அடைய வைக்க வேண்டிய பிக்குகள், துறவிகள் நாட்டின் மீது அரசின் மீது அதிகாரத்தின் மீது ஏன்பற்று வைக்கிறார்கள்? அவற்றை ஏன் பாதுகாக்கிறார்கள் என்பதை அஸ்கிரிய மடாதிபதிதான் தெளிவுபடுத்த வேண்டும்.

வரலாற்றுக் காலங்கள் தொட்டு இந்த நாட்டின் காவல் தெய்வங்களாகப் பிக்குகள் இருக்கிறார்கள் என்றுவேறு அஸ்கிரிய மடாதிபதி கூறியிருக்கிறார். வரலாற்று நூல்களோ பல போர்களுக்கு பிக்குகளே காரணமாகவும் உறுதுணையாகவும் இருந்தார்கள் என்று கூறுகின்றன. நவீன இலங்கை வரலாற்றில்கூட இனப்பிரச்சினை தீர்க்கப்படாமல் குருதிச் சகதியில் நனைந்த போர்கள் நடத்தப்பட்டதற்கு முழுமுதற்காரணங்களாகப் பிக்குகள் இருந்திருக்கிறார்கள். முன்னாள் தலைமை அமைச்சர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவைச் சுட்டுக் கொன்றவரும் ஒரு பிக்குதான் என்பதை மறந்துவிட முடியாது.

இப்படி பௌத்த சிங்களத்தைப் பாதுகாக்க பிக்குகள் எடுத்த பல நடவடிக்கைகளே இன்று வரையும் நாடு அமைதியை எட்ட முடியாமல் அவதிப்படுவதற்குக் காரணமாக இருக்கின்றன. அப்படிப்பட்ட பிக்குகளால் வழிநடத்தப்பட்டு வந்த அரசியல்வாதிகளிடம் இருந்து அஸ்கிரிய மடாதிபதி நலவற்றை எதிர்பார்ப்பது அதிசயம்தான்.

என்றைக்கு நாட்டைப் பாதுகாப்பதைவிட்டு பௌத்தைத்தைப் பாதுகாப்பதற்கும் அன்பைப் பாதுகாப்பதற்கும் பிக்குகள் முன்வருகின்றார்களோ அன்றுதான் இந்த நாட்டில் நிரந்தர அமைதி ஏற்படும்.



# தியாக வரலாற்றின் உன்னத ஒளிர்வு தியாக தீபம்

செ. பகலவன்

என் மனம் மகிழ்ச்சியில் மிதக்கின்றது. நீங்கள் பல்லாயிரக்கணக்கில் இந்தப் புரட்சிக்குத் தயார்பட்டு விட்டதை என் கண்கள் பார்க்கின்றன. நான் திருப்தி அடைகிறேன். நான் நேசித்த தமிழீழ மண்ணில் வாழ்கின்ற ஒவ்வோர் மக்களும் இந்தப் பெரும் புரட்சிக்குத் தயாராக வேண்டும் எனது இறுதி ஆசை இதுதான். பெரும்பணியை உங்களிடம் விட்டுச் செல்கிறேன். நான் மிகவும் நேசித்த என் தோழர்கள், என் சகோதரிகள், எல்லாவற்றிலும் மேலாக என் அண்ணன் தேசியத் தலைவன் பிரபாகரன் உங்களுடன் இருக்கிறார். நீங்கள் பரிபூரணமாகக் கிளர்ந்தெழ வேண்டும். மாபெரும் மக்கள் புரட்சி வெடிக்கட்டும். இப் புரட்சி நாள் என்னுயிருக்கு மேலாக நேசிக்கும் என் மக்களுக்குக் கிடைக்கட்டும். எமது எதிர்கால சந்ததி வாழ ஒரு நாடு தேவை. அல்லாவிட்டால் நாளை எங்களைப் போலவே எமது எதிர்கால சந்ததியும் துன்பப்படும். வருத்தப்படும். மக்கள் புரட்சி வெடிக்கட்டும்...! சுதந்திரத் தமிழீழம் மலரட்டும்...!" என்று தமிழின விழிப்பின் அறைகூவல் மொழிந்து தன் மக்களுக்காகத் தன்னையே அர்ப்பணித்த தியாகத்தின் செம்மல் மாவீரன் திலீபனின் ஆத்மா உரிமையின் தாகம் கொண்டு இன்னமும் அசைவுறுகிறது. மூ பத்து ஆண்டுகள் கடந்து அவனுடைய நினைவுகளின் சஞ்சாரத்தில் வீரத்தின் திலகமாக தாயகமெங்கும் வண்ணம் சூடுகிறது. இக்காலமதில் சிரம்தாழ்த்தி அவன் பாதங்களை வணங்கி நெக்குருகி நினைவஞ்சலி செலுத்தி அவனது வரலாற்றை எண்ணிப் பார்க்க வேண்டும். இன்னமும் உன்னிப்பாக நாம் வீறுநடைபயில வேண்டும்.

## மாவீரம்

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வீதியில் தன்னைத் தானே சிலுவையில் அறைந்து கொண்டது ஓர் மாவீரம். கொண்டு தியாகத்தின் வழி தமிழினத்திற்கு ஊட்டிய விழிப்புணர்வு மகத்தானது. அந்த விழிப்புணர்வின் தேவையை நாம் இந்த வேளையிலும் இந்தக் காலகட்டத்திலும் கருத்தில் கொள்வது அவசியமானது. பொருத்தமானது.

## நம்பிக்கை

மூன்று தசாப்த காலங்களின் முன்பு இந்தியா தமிழீழத்தவரின் தேசியப் பிரச்சனையில் வெளிப்படைத் தன்மையோடு நேரடியாகத் தலையிட்ட போது மக்கள் நெஞ்சங்களில் ஒரு நம்பிக்கைக்குரிய இரட்சகனாகவே இந்தியா தோற்றம் தந்தது. 'அகிம்சை என்னும் கோட்பாட்டின் அடிப்படையில் அல்லது அகிம்சை என்னும் தத்துவத்தின் அடிப்படையில் இந்தியா தனது அரசியல் கட்டமைப்பை உருவாக்கியுள்ளது" என்ற பிரமையை இந்திய ஆட்சி பீடங்கள் தோற்றுவித்திருந்தன.

அகிம்சை என்ற தத்துவத்தின் உயர்வான கொள்கைகளும், நீதிகளும் உண்மையாகவே பேணப்படுகின்றன என்று இந்தியக் குடிமக்கள் மட்டுமல்ல தமிழீழத்தவர்களும் மனமார நம்பினார்கள். அகிம்சைக் கோட்பாட்டின் மூலம் நீதியை வென்றெடுக்கலாம், நியாயத்தை நிலைநாட்டலாம் என்று எம்மவர்களும் நம்பியிருந்த காலமாக அது காணப்பட்டது.

## இலட்சியம் கொண்டு உதித்த பிள்ளை

மகாத்மா காந்தியின் அகிம்சை வாதத் தத்துவத்தைத் தனது அடிப்படை அரசியல் கொள்கையாக வரித்திருப்பதாக இந்தியா மேலோட்டமாக முழங்கி வந்தாலும் அதில் எந்தவித பயனறுதியும் இல்லை. உண்மையில், அகிம்சைத் தத்துவத்திற்கு எதிராகத்தான் இந்திய அரசு செயற்பட்டது. இப்போதும் செயலாற்றிக் கொண்டுள்ளது. இந்த விடயங்களை தனது உடலாலும் உயிராலும் வலியுறுத்திக் காட்டி நிரூபித்தவன்தான் தியாகத்தின் பிள்ளை திலீபன்.

ஆனால் அகிம்சைப் போராட்ட விடயத்தில் இந்தியா மீது எமது மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையோ வித்தியாசமானது. 'அகிம்சைப் போராட்டங்களை, சாத்வீகப் போராட்டங்களை, உணவுஒறுப்புப்போராட்டங்களை இந்தியா மதிக்கும். ஆகவே, சிங்கள இனவெறி அரசுகள் எமது அகிம்சைப் போராட்டங்களை அலட்சியம் செய்து, வன்முறையால் அடக்கியதுபோல் இந்தியா செய்யாது. அது எமது அகிம்சைப் போராட்டங்களைச் செவிமடுக்கும். போராட்ட நியாயங்களுக்குத் தலை வணங்கும்" என்றுதமிழினம் பெருநம்பிக்கை கொண்டிருந்தது. அந்த நம்பிக்கையின் பொருளாய் எமது இனத்தின் விடுதலைக்கான பாதை எந்தத் திசை நோக்கி எவ்வாறு இருக்க வேண்டும் என்பதைக் காட்டுவதற்காக தனியொருவனாக ஒரு புலி வீரனாகப் புறப்பட்டான் திலீபன். தனது எதிர்காலத்தையே பசித் தீ கொண்டு ஈகம் செய்தான்.

## அவன் சொன்ன செய்தி

'தமிழினம் அடங்காது போராடும். ஆயுதம் இல்லாவிட்டாலும் அது போராடும். புல்லையும் எடுத்து அது போராடும். அடக்குமுறைக்கு அது வளைந்து கொடுக்காது. பேரம் பேசாது. விட்டுக் கொடுக்காது. ஆயுதம் இல்லாவிட்டாலும், உணவு இல்லாவிட்டாலும் இந்த இனம் தலை வணங்காது. அது தொடர்ந்தும் போராடும். தன்னுடைய விடுதலைக்காக, நியாயத்திற்காக, நீதிக்காக அது எந்தச் சக்தியையும் எதிர்த்துப் போராடும்.

ஆம், திலீபன் ஆன்ம உறுதி கொண்டு போராடினான். சாவைச் சந்தித்தான். விழிப்புணர்வை எமக்கு ஊட்டினான். எடுத்த காரியத்திற்காக இறுதி மூச்சு உள்ள வரை உறுதியோடு போராடுகின்ற உளவலிமையுள்ள இலட்சிய உறுதியை உரிமை மீட்பின் பயிராக விதைத்தான்.

இரங்கற் பா
'விண்ணிருந்து பார்ப்பேன்
விடுதலையை என்ற மகன்
கண்ணெதிரே இந்தக் கட்டிலிலே
முடிகின்றான்
பத்தோடு ஒன்றா இவன் பாடையிலே போவதற்கு
சொத்தல்லோ
எங்கள் சுகமல்லோ
தாலாட்டுப் பாட்டில் தமிழ் தந்த
தாய்க்குலமே
போராட்ட வீரன் போய்முடியப்
போகின்றான்.! என்று புதுவை சிந்திய வார்த்தைச் சின்னங்கள் கால வெள்ளம் தனில் அணைந்திடாது ஒளிர்வு தரும்.

இந்துமதி

# தமிழர்கள் மீண்டும் போராடுவதற்கான தருணம் இதுவல்ல

“எம்மை நாமே ஆளும் தீர்வைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அதைவிடுத்து அரை குறைத் தீர்வை எந்தக் காலத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது. சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலான கூட்டாட்சித் தீர்வு கிடைக்கும் வரை தமிழர்கள் சளைக்காது போராட முன்வர வேண்டும்.” தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் உத்தேச அரசமைப்ப முயற்சி குறித்த கருத்துப் பகிர்வு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றபோது வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டிருந்தார்.

மேற்படி நிகழ்வில் ஏராளமானவர்கள் கலந்துகொள்வார்களான சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்த போதிலும், சில நூற்றுக்கணக்கானவர்களே கலந்து கொண்டனர். தமிழ் மக்கள் பேரவையின் முக்கியஸ்தர்களில் ஒருவரான, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இந்த நிகழ்வில் கலந்து கொள்ளாதது அங்கு கலந்து கொண்டவர்களுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியதாகக் கூறப்படுகின்றது.

மேலும் முக்கிய அறிவிப்புக்கள் வெளியிடப்பட்டபோது, சிறுதொகை யினரே மண்டபத்தில் இருந்தனர் எனவும், முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனும் மண்டபத்தை விட்டு வெளியே சென்றுவிட்டார் எனவும் தெரிய வருகின்றது.


### அரைத்த மாவையே திரும்பவும் அரைத்த வடக்கு முதலமைச்சர்

சி.வி. விக்னேஸ்வரன் புதிதாக எதையாவது கூறுவாரென எதிர்பார்த்தவர்களுக்குப் பெரும் ஏமாற்றமே கிடைத்தது. அவர் வழக்கம்போல அரைத்த மாவையே திரும்பவும் அரைத்திருக்கிறார். ஆனால் அவருக்கு வழக்கமாகவே ஒத்து ஊதிக் கொண்டிருப்பவர்கள் முதலமைச்சரின் அறைகூவல் உடம்பைப் புல்லரிக்க வைத்துவிட்டது எனக்கூறி புளகாங்கி தம் அடைகின்றனர்.

தமிழ்மக்களுக்குகூட்டாட்சிமுறையிலான தீர்வு வழங்கப்பட வேண்டுமென முதன்முத லில் குரல்கொடுத்தவர் தந்தை செல்வாவே என்பதை எவருமே மறந்துவிட முடியாது. தமது இறுதித்மூச்சுவரை இதற்காகவே அவர் போராடினார். ஆனால் அவரால் தமது அந்த முயற்சியில் வெற்றி பெற முடியவில்லை. பின்னர் தனிநாடு கோரிப் போராடிய இளைஞர்களின் முயற்சியும் தோற்கடிக்கப்பட்டுத் தமிழர்கள்வெறுங்கையுடன்நிர்க்கதியானநிலையில்காணப்படுகின்றனர்.

உரிமைக்கான போராட்டம் இருந்த உரிமைகளையும் இழக்கச் செய்து விட்டது. தற்போது கையறு நிலையில்தமிழர்கள்காணப்படுகின்றனர். இன்னுமொரு போராட்டத்துக்கு முகம்கொடுக்கவேண்டியசக்திஅவர்களிடமில்ல.

இறுதிப் போரின் அவலங்கள் இன்னமும் அவர்களின் மனங்களிலிருந்து அகலவில்லை. அவற்றை மீண்டுமொருதடவை அனுபவிக்கவும் அவர்கள் தயாராக இல்லை. இந்த நிலையில் கூட்டாட்சித் தீர்வு கிடைக்கும்வரை சளைக்காது போராடுமாறு வடக்கு முதலமைச்சர் அழைப்பு விடுத்துள்ளமை நகைப்புக்கிடமானது.



> “புதிய அரசமைப்பிலும் கூட்டாட்சி நடைமுறை இடம்பெற வேண்டும் என கூட்டமைப்பின் தலைவர் வற்புறுத்தி வருகின்றார் ஆனால் இதற்காக மக்களைப் போராட்டத்தில் ஈடுபட வேண்டுமென அவர் ஒருபோதுமே வேண்டுகோள் விடுத்த தில்லை.

### தனது பலம் அறிந்தே மாற்றானுடன் மோத முயல்வது புத்திசாலித்தனம்

ஒருவன் மற்றவர்களுடன் போராடுவதற்குச் செல்லும்போது, தனது வலிமை, மாற்றான் வலிமை துணைக்கு வருபவர்களின் வலிமை ஆகியவற்றைச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டுமெனக் கூறுவார்கள். ஆனால் வலிமையிழந்த நிலையில் இருக்கின்ற நாம் போராட்டத்தைப்பற்றிச் சிந்திப்பது எந்த வகையிலும் நியாயமானதாகத் தெரியவில்லை.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தனது அடிப்படைக் கொள்கையாக கூட்டாட்சியைக் கொண்டுள்ளது. இதையே தொடர்ந்து வலியுறுத்தியும் வருகின்றது. புதிய அரசமைப்பிலும் கூட்டாட்சி நடைமுறை இடம்பெறவேண்டும் என கூட்டமைப்பின் தலைவர் வற்புறுத்தி வருகின்றார் ஆனால் இதற்காக மக்களைப் போராட்டத்தில் ஈடுபட வேண்டுமென அவர் ஒருபோதுமே வேண்டுகோள் விடுத்த தில்லை.

தமிழர்களின் யதார்த்தபூர்வமான தற்போதைய நிலையை சம்பந்தன் அறிந்து கொண்டதால் அவர் போராட்டத்தில் ஈடுபடுமாறு மக்களிடம் வேண்டுகோள் விடுக்கவில்லை.

### போராட வருமாறு அழைப்பு விடுக்க முதலமைச்சருக்கு அருகதை கிடையாது

வடக்குக் கிழக்கில் உக்கிரமான போர் இடம்பெற்றபோது அதைப்பற்றி அலட்டிக் கொள்ளாது கொழும்பில் பாதுகாப்பாக வாழ்ந்தவர், இன்றைய வடக்கு முதலமைச்சர். போரில் தமிழர்கள் அனுபவித்த அவலங்கள், கொடுமைகள் தொடர்பாக வாயே திறக்காமல் அமைதியாக இருந்தவர் தான் அவர். தமிழர்களின் துயரங்களை அறிந்து கொள்வதில் அவர் அக்கறை காட்டினாரா என்றும் தெரியவில்லை. மரத்தில் கனிந்த பழம் தானாக மடியில் வீழ்வது போன்று முதலமைச்சர் பதவி அவரைச் சென்றடைந்துள்ளது. இதற்காக அவர் எந்தத் தியாகத்தையும் புரியவில்ல போராட்டங்களில் ஈடுபட்டுச் சிறைவாசம் அனுபவிக்கவில்லை. எந்தவிதமான நோவையும் எதிர்கொள்ளாது முதலமைச்சர் என்கிற பதவிச் சுகத்தை அனுபவிக்கிறார். இவர் மக்களைச் சளைக்காது போராடுவதற்கு முன்வருமாறு கோரிக்கை விடுவதற்கு எந்தவித அருகதையும் உள்ளவராகத் தெரியவில்லை. மக்களும் இதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். மேலும் முதலமைச்சர் உரத்த குரலில் தமது கருத்துக்களைக் கூறியிருந்தாலும் அதில் ஆழமான, காலத்துக்கு உகந்த கருத்தையும் காண முடிய வில்லை. சுமார் 50 ஆண்டுகளுக்க முன்னர் தேர்தல் மேடை யொன்றில் உள்ளூர் அரசியல்வாதியொருவர் மக்களை உசுப்பேற்றும் வகையில் ஆற்றிய உரையை ஒத்ததாகவே முதலமைச்சரின் உரையும் அமைந்திருந்தமை ஏமாற்றத்தைத் தருகின்றது.

அரசு இரக்கப்பட்டுத் தருவதை ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலை யில் தான் நாம் தற்போது இருக்கின்றோம். போரில் பல்லாயிரக்கணக்கான உயிர்களை மட்டுமல்ல எமது தன்மானத்தையும் பறிகொடுத்து ஏதிலிகளாக நிற்கின்றோம். முதலில் தமிழர்கள் ஒரே அணி யில் நின்று ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும். தமக்குள் காணப்படுகின்ற வேற்றுமைகளைக் களைந்தெறிய வேண்டும். ஆளுக்கொரு திசையில் நின்று கொண்டு மக்களைக் குழப்பு கின்ற செயற்பாடுகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

முதலில் இதைச் செய்யுங்கள். பின்னர் உரிமைப் போராட்டம் தொடர்பாக ஆறுதலாகச் சிந்திக்கலாம்.

மேலும் புனர்வாழ்வுபெற்று சமூகத்துடன் இணைந்திருக்கும் முன்னாள் போராளிகளையும் ஒருகணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அவர்களைப்பலிக்கடாக்களாக மாற்றுகின்ற எதையும் செய்வதற்கு நாம் முன்வரக் கூடாது. மாண்புமிகு முதல மைச்சர் மேற்கூறியவற்றைக் கவனத்தில் கொண்டால் நல்லது.

## ஆசிரியருக்கான கடிதம்

### தடகளத்தில் வடமாகாணம் பின்னடைவு

வடக்கு மாகாண பாடசாலைகள், கால்பந்தாட்டத்திலும் துடுப்பாட்டத் திலும் (துடுப்பாட்டத்தை விட கால்பந்தாட்டத்தில் அதிகம்) சாதிக்கும் அளவுக்கு தடகளத் தொடரில் சாதிக்கின்றனவா என்று கேட்டால் நிச்சயம் இல்லை என்பதே பதில்.

தடகளத் தொடரில் வடக்கு பெரும் ஆதிக்கம் செலுத்துவதென்பது தொடர்ந்தும் மெய்ப்படாமலேயே சென்று கொண்டுள்ளது. மகாஜனக் கல்லூரி, ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆகியன கோலூன்றிப் பாய்தலில் ஓரளவு பதக்கங்களை பெற்றுக் கொண்டுள்ள போதிலும், ஏனைய விளையாட்டுக்களில் வடக்கு மாகாணத்துக்கு பதக்கங்கள் என்பன நீண்ட கனவாகவே இருந்து வருகின்றன.

அதிலும் குறிப்பாக குறுந்தூர ஓட்டங்களில் வடக்கு மாகாண வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் சாதிப்பது என்பது கனவிலும் சாத்தியப்படாதவிடயமாகமாறிவருகிறது. எமது வீரர்கள் மற்றும் வீராங்கனைகளிடத்தில் திறமை இல்லை என்று சொல்வதற்கில்லை. ஏனெனில் கால்பந்தாட்டத் தொடரில் வடக்கு மாகாண அணிகள் குறிப்பாக யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ், இளவாலை சென். ஹென்றிஸ், மன்னார் சென். சேவியர் ஆகிய வருடாவருடம் தொடர்ந்து பதக்க வேட்டை நடத்தி வந்கின்றன.

கோலூன்றிப் பாய்தலில் முடிகிறது, கால்பந்தாட்டத்தில் ஜாம்பவான்களாகத் திகழ்கிறோம், பளுதூக்கல் தொடர்களில் பதக்கங்கள் கிடைக்கின்றன எனின் தடகளத் தொடர்களில் போதிய பிரதிநிதித்துவம் கிடைக்காதமைக்கு என்ன காரணம். காத்திரமான திட்டங்கள் இனியாவது வகுக்கப்படுமா?

லயனல்




# முதலீட்டாளர்கள் கருத்து மன்றம் - 2017 நிகழ்வு

முதலீட்டாளர்கள் கருத்து மன்றம் -2017 நிகழ்வு கடந்த ஓகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி கொழும்பில் இடம்பெற்றது.

தற்போது காணப்படுகின்ற சிறந்த முதலீட்டு வாய்ப்புகளை முதலீட்டாளர்களுக்கு வழங்கும் நோக்கத்துடன் இந்தக் கருத்துக் கள நிகழ்வை ஆர்பீரியல்டர்ஸ் அன்ட் கன்ஸல்டன்ஸ் நிறுவனம் மற்றும் சொத்து அபிவிருத்தி இணையத்தளமான லங்கா புறொப்பற்றி டொட் கொம் என்பன இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

நிகழ்வில் வெளிநாட்டு முதலீட்டாளர்களை உருவாக்கத் தக்க மேலதிக முதலீட்டாளர்களின் நட்புறவு இலங்கைக்கு தேவை என்பது இத்துறை சார்ந்த நிபுணர் களால் முன்வைக்கப்பட்ட ஒருமித்த கருத்தாக அமைந்திருந் தது.

இந்த நிகழ்வில் முதலீட்டாளர்கள், தனிநபர் கள், பெருநிறுவனத் துறை சார்ந்த சிறந்த நிர்வாகிகள், பொது மற்றும் தனியார் நிறுவன உறுப்பினர்கள் எனப் பலர் கலந்துகொண்டிருந்தனர்.

முதலீட்டாளர் கருத்துக்கள நிகழ்வில் கருத்துரைத்து கொழும்பு பங்கு சந்தை நிர்வாக இயக்குனர் ரஜீவ பண்டாரநாயக்க, "நிதியானது மிகவும் கவனமாக முதலீடு செய்யப்பட வேண்டிய பங்குச் சந்தையை ஒரு முதலீட்டுத் தேர்வாக முதலீட்டாளர்கள் காண வேண்டும்" எனக் குறிப்பிட்டார்.

குழுக்கலந்துரையாடல்கள் நிகழ்வும் இடம்பெற்றது. இதன் போது கருத்துக்கூறிய கன்டர்ஸ் ரவி அபேயசூரிய, "தற்போதைய சந்தையில் மத்திய வங்கி நிதிக்கொடுக்கல் வாங்கல் களில் சிறந்த செயற்பாடுகளைக் கொண்டுள்ளது. கொழும்பு நகர்ப்பகுதியில் காணிகளை கொள் வனவு செய்தலே மிகவும் சிறந்த மீளப்பெறுதலைத் தரக்கூடிய முதலீடாகக் காணப்படுகிறது. அத்து டன் இலங்கையில் ரியல் எஸ்டேட் முதலீட்டு அறக்கட்டளை (REITS) நடைமுறைப்படுத்தப்படுதல் அவசியம். அதற்கான கட்டமைப் புக்கள் குறித்து தற்போது கலந்து ரையாடப்பட்டு வருகின்றது" - என் றார்.

மேலும் முதலீட்டாளர்கள் மற்றும் பல்வேறுபட்ட வகையான சுற்றுலாப்பயணிகளை கவரும் விதமாக சில்லறை மையங் கள், பொழுதுபோக்கு மையங் கள், உலக தரத்திலான மருத்துவ மனைகள் மற்றும் மாநாட்டு மண்டபங்களை உருவாக்குவது தொடர்பான விடயங்களும் கருத்துக்கள நிகழ்வில் முக்கியத்துவம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ)

## மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி வீதம் 4 சதவீதமாக மதிப்பீடு தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் தகவல்

தொகைமதிப்புமற்றும்புள்ளிவிவரத்திணைக்களம் வெளிப்படுத்தியுள்ள தகவல்களின் அடிப்படையில் தேசிய கணக்குகள் மதிப்பீடுகளில் நடப்பாண்டின் இரண்டாம்காலாண்டுகாலப்பகுதியில்மொத்தஉள் நாட்டுஉற்பத்திவளர்ச்சிவீதம்4சதவீதமாகமதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி நிலை யான (2010) விலையில்கடந்தஆண்டின்இரண் டாவது காலாண்டில் 2,125,848 மில்லி யன் ரூபாவாகவும், நடப்பாண்டின் இரண்டாவது காலாண்டில் 2, 211,612 மில்லியன் ரூபாவாக வும் பதிவாகியுள்ளது.

பொருளாதாரத்தின் முதன்மைக் கூறுகளான விவ சாயம், கைத் தொழில், சேவைகள் மற்றும் உற்பத்திப்பொருள்கள்மானியங் கள் கழிக்கப்பட்ட வரி நடப்பு விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான பங்களிப்புகளை 8.2 வீதம், 25.9 வீதம், 56.6 வீதம் மற்றும் 9.4 வீதம் என்ற ரீதியில் வழங்கியுள்ளன.

நடப்பாண்டின் இரண்டாம் காலாண்டு காலப்பகுதி யில் கைத்தொழில் மற்றும் சேவைகள் துறைகள் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளன. அவை முறையே 5.2 வீதம், 4.4 வீதமாகக் காணப் படுகின்றன. மொத்த விவசாய நடவடிக்கைகளை நோக்குமிடத்து மறை வளர்ச்சி வீதத்தை வெளிப் படுத்தியுள்ளன. அவை 2.9 வீதமாகப் பதிவிடப்பட் டுள்ளன.

"கடந்த 18 மாத காலப்பகுதியில் நாட்டில் ஏற்பட்ட வறட்சி மற்றும் பெரு மழை காரணமாக விவசாய உற்பத்தித் துறை மறை வளர்ச்சி வீதத்தைப் பதிவிட்டுள்ளது.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது இதே காலப்பகுதி யில்விவசாயத்துறையின்உபபிரிவுகளுக்கிடையில் சேர்க்கப்பட்ட பெறுமதியானது குறிப்பாக, 'நெல் வளர்ச்சி', 'எண்ணெய் சார்ந்த பழங்களின் வளர்ச்சி (தேங்காய் உள் ளடங்கலாக)', 'தானியங்களின் வளர்ச்சி (நெல் நீங்கலாக)', 'காய் கறிகளின் வளர்ச்சி', 'வாசனைத் திரவியங்களின்வளர்ச்சி'என்பன முறையே 32.9 வீதம், 20.2 வீதம், 15.3வீதம், 5.9வீதம், 3.8 வீதமாக குறைந்துள்ளன.

அதேவேளை 'தேயிலை வளர்ச்சி' மற்றும் 'இறப்பர் வளர்ச்சி' என்பன கடந்த மூன்றாண்டு காலப்பகுதியில் தொடர்ச்சியான மறைவளர்ச்சிவீதங்களை ஒவ்வோர் காலாண்டுப் பகுதியிலும் கொண்டிருந் தன. ஆனாலும் நடப்பாண்டின் இரண்டாவது காலண்டுகாலப்பகுதியில்நேர்வளர்ச்சிவீதங்களைப் பதிவு செய்துள்ளன. அவை முறையே 6.9, 10.2 வீத மாக அமைந்துள்ளன. 'விலங்கு உற்பத்தி' மற்றும் 'நன்னீர் மீன்பிடி' என்பனவும் நேர் வளர்ச்சி வீதங்க ளைப் பதிவிட்டுள்ளன. அவை முறையே 10.9 மற்றும் 9.0வீதம் என்றவகையில் கணிசமான அதிகரிப்பை வெளிக்காட்டியுள்ளன.

# மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சேவைத்துறை அதிக பங்களிப்பு

## 4.4 வீத நேர் வளர்ச்சி நிலை பதிவு




பொருளாதாரக் குறிகாட்டிகளில் பிரதானமாகச் சொல்லப்படும் மூன்று முதன்மைச் செயலாற்று கைகளிலும்சேவைத்துறைநடப்பு வருடத்தின் இரண்டாவது காலாண்டுகாலத்தில்மொத்தஉள் நாட்டு உற்பத்திச் செயல்நிலை சார்ந்துஉயர்பங்களிப்பைவழங் கியுள்ள தகவலை தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக ளம் தெரியப்படுத்தியுள்ளது.

சேவைத்துறை நடவடிக்கைகள் அனைத்தும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 56.6 வீத பங்க ளிப்பைவழங்கியுள்ளன. 4.4வீத நேர் வளர்ச்சி நிலையைப் பதிவிட் டுள்ளன.

சேவைத் துறையின் உப பிரிவு களில் 'நிதிச் சேவை நடவடிக்கை', 'மனிதநல நடவடிக்கை', 'தொலைத் தொடர்பு சேவை' என் பன முறையே 16.4 வீதம், 13.2 வீதம், 12.4 வீத வளர்ச்சியை வெளிக்காட்டியுள்ளன. அத்துடன் 'மொத்த மற்றும் சில்லறை வர்த்த கம்', 'பொருள்கள் மற்றும் பயணி கள் போக்குவரத்து' துறைகள் உயர் பங்களிப்பினையும் முறையே 4.0 மற்றும் 1.6 சதவீத வளர்ச்சியையும் தந்துள்ளன. (ஓ)

## வறுமைக்கோட்டுப் பெறுமான அசைவு அடிப்படை வருடம் மீதான மாற்றமாக பதிவு

நடப்பாண்டின் ஓகஸ்ட் மாத காலப்பகுதிக்கான தேசிய ரீதியான உத்தியோகபூர்வ வறுமைக் கோட்டு பெறுமானங்கள் 4 ஆயிரத்து 305 ரூபாவாக அமைந் துள்ளது.


மாவட்ட அடிப்படை யில் மாதக் கணிப் பீடாக அமையப்பெற் றுள்ள இந்த மொத்த மாதாந்த செலவினங் களை ஒப்பிட்டு நோக்குவதன் மூலம் ஒரு நபரின் வறுமை நிலையை அடையா ளம் கண்டுகொள்ள லாம். (ஓ)

| ஆண்டு | யாழ்ப்பாணம் | மன்னார் | வவுனியா | முல்லைத்தீவு | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| அடிப்படை வருடம் 2002 Rs. | - | - | - | - | - |
| அடிப்படை வருடம் 2006/07 Rs. | 2303 | - | 2211 | - | - |
| அடிப்படை வருடம் 2013 Rs. | 3573 | 3743 | 3703 | 3584 | 3674 |
| 2016 செப். RS. | 3981 | 4170 | 4126 | 3993 | 4094 |
| 2016 ஒக். RS. | 4007 | 4197 | 4153 | 4020 | 4121 |
| 2016 நவ. RS. | 4031 | 4223 | 4179 | 4044 | 4146 |
| 2016 டிசெ. RS. | 4071 | 4265 | 4220 | 4085 | 4187 |
| 2017 ஜன. RS. | 4148 | 4346 | 4300 | 4161 | 4266 |
| 2017 பெப். RS. | 4169 | 4368 | 4322 | 4183 | 4288 |
| 2017 மார்ச். RS. | 4162 | 4361 | 4315 | 4176 | 4281 |
| 2017 ஏப். RS. | 4184 | 4383 | 4337 | 4197 | 4303 |
| 2017 மே RS. | 4223 | 4424 | 4378 | 4237 | 4343 |
| 2017 ஜூன் RS. | 4291 | 4495 | 4448 | 4305 | 4413 |
| 2017 ஜூலை RS. | 4266 | 4469 | 4422 | 4280 | 4387 |
| 2017 ஒக. RS. | 4245 | 4447 | 4400 | 4258 | 4365 |

# 'தாய்மை' எனும் வீரம் கொண்டு விடுதலை காண்போம்

## அடக்குமுறையில் இருந்து மீள முயற்சிக்கும் ஒத்திசைவு

“ஆணாதிக்கப் போர்வையுள்
ஆழ்ந்துறங்கும் பெண்களே
அடி உதை ஆய்க்கினை பொறுத்து
அடிமையாய் வாழ்தல் கொடுமையம்மா
விழிநீரொடு மௌனம் காத்திடாது
விடியலாய்ப் புலர்ந்து நீயும் திடம்பெறு
பால்நிலை சமத்துவம் வேண்டிப் புறப்படு
புதிதாய்ப் பிறப்பெடு
பாரினிலே வைராக்கியம் கொண்டு மனிதம் கண்டு போராடு....!”



“

தாய் வழி மரபானது மாற்றம் காணாது இருந்திருப்பின் பெண்ணடிமைத்தனம் என்ற அச்சறுக்கைகள் சமூக வெளியில் தோற்றம் கண்டிருக்காது. தற்காலத்தின் பலவீனங்கள் பலதைத் தந்திருக்காது. பெண்கள் இதனை உணர்ந்து கொள்ளத் தலைப்பட வேண்டும். தமது விடுதலைக் காகப் போராட முன் வர வேண்டும்.

உடுவிலூர் கலா

அடிமைத்தனம் அதிக வன்முறைகளை பரிபாலனம் செய்கிறது. தற்காலத்தின் வழி பெண்ணடிமைத்தனமாக வலுப்பெற்று வடிவம் கொண்டுள்ளது. சமூகம், குடும்பம் என தனிமங்களின் அடிப்படைக் கட்டமைவுகளில் அதிக பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றன. குறிப்பாக சமூக இணைவிலும் குடும்பங்களின் நிலைத்திருப்பிலும் முதன்மைப் பங்காற்றும் 'பெண்' என்ற தாய்மையின் குணம் கொண்ட பெருமிதங்களை அதிகம் துன்பம் கொள்ளச் செய்கின்றன. அவள் பயணிக்கும் பாதைஎங்கும் 'ஆணாதிக்கம்' என்ற வியாபகமாக தோற்றம் கொண்டுள்ளன. கொடிய ஆயுதமாகத் தன் கிளைகளைப் பரப்பி ஆபத்துக்களை விளைவிக்கின்றன.

### பெண்ணாளுமை

உண்மையில் கல்வியறிவை தாராளமாகப் பெற்று அனைத்து விடயதானங்களிலும் பதவிநிலைகளிலும் ஆண்களுக்கு சரிநிகர் சமானமாக பெண்கள் தமது ஆளுமைப் பண்பை வெளிப்படுத்தி வருகின்றனர். இந்தக் காலகட்டத்தில் ஆணாதிக்கம் பெண்களை வன்முறையின் மேலாதிக்கமாக ஆட்சிசெய்ய முனைவது வரவேற்கத்தக்க விடயமல்ல. மென்மையின் வசந்தங்கள் உடையவள் பெண். அன்னையின் திருவுருவமாய் அன்பின் கைங்கரியம் பொதிந்தவள். மௌனம் சிந்தி அமைதி கொண்டு ஆறுதலின் ஆத்மார்த்தம் தனை உவந்தளிப்பவள். தெய்வ காருண்யமாய் அறிவூட்டும் பணி செய்பவள். இத்தகு சிறப்பின் திருநிலையில் மகத்துவம் காணும் நாம் பெண்ணை ஆதிக்கம் செய்தல் முறையற்றது. இரண்டாம் பட்சமாக நோக்குதல் பாவ காரியம். ஆணைவிட பெண் எந்தவகையிலும் குறைத்து மதிப்பிடப்படக்கூடியவள் அல்ல என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். யதார்த்த பூர்வமாகச் சிந்திக்க வேண்டும்.

### சமத்துவம்

சமூகத்தின் பால் உள்ள உறுதி நிலை ஆணிலிருந்தும் பெண்ணிலிருந்தும் கிடைக்கப்பெறும் சமத்துவ வகிபங்கு நிலை சார்ந்தே பலம் பெறுகிறது. குடும்ப மற்றும் சமூக பொருளாதார பண்பாட்டுத் தளங்களில் அபிவிருத்தி சார்ந்தும் பெண்களின் பங்கு அளப்பரியது. சமூக நிலைத் திருப்பில் அவை ஏற்படுத்திக் கொள்ளும் தாக்கம் குறித்துக் கரிசனை கொள்ள வேண்டும். பெண்களைப் புறந்தள்ளிய எந்த ஒரு சமூகமும் ஒருங்கிணைவு கொண்டதாக வரலாறுகள் இல்லை. அவை குறித்த உணர்தல் எம்மிடையே பலம் பெற வேண்டும்.

### மரபு

ஆரம்ப காலங்களில் இருந்த தாய்வழி மரபானது தந்தைவழிமரபாக மாற்றம் பெற்றதன் பின்பு ஆணாதிக்கம் பல வழிகளிலும் தன் கிளைகளைப் பரப்பிக் கொண்டுள்ளது. வலிமையடைந்துள்ளது.

தாய் வழிமரபானது மாற்றம் காணாது இருந்திருப்பின் பெண்ணடிமைத்தனம் என்ற அச்சறுக்கைகள் சமூக வெளியில் தோற்றம் கண்டிருக்காது. தற்காலத்தின் பலவீனங்கள் பலதைத் தந்திருக்காது. பெண்கள் இதனை உணர்ந்துகொள்ள தலைப்பட வேண்டும். தமது விடுதலைக் காகப் போராட முன்வர வேண்டும். பெண்கள் தமது திறமைகள், பண்புகள், வளங்கள் என்பவற்றைப் பயன்படுத்திக் குடும்பத்தை யும் சமூகத்தையும் ஏன், இந்த உலகப் பொருண்மையையே மாற்றியமைக்க வேண்டும்.

### விடுதலை உணர்வு

எங்கெங்கெல்லாம் பெண்ணடிமைத் தனம் கோலோச்சியுள்ளதோ அங்கெல்லாம் பெண் உரிமைக்கான குரல்கள் ஓங்கி ஒலிக்கவேண்டும். பெண்விடுதலை குறித்த சிந்தனைகளும் கருத்துக்களும் தேவைப்படும் இடங்களில் ஊட்டம் செய்யப்பட வேண்டும். பெண்ணியப் பார்வையிலான படைப்புக்களை சகலமட்டங்களிலும் பரம்பலடையச் செய்ய வேண்டும். பால் நிலைச் சமத்துவமுடைய சமூகத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டும். இதற்குப் பெண்கள் தங்களை தயார்நிலைக்குட்படுத்திக் கொள்ள வேண்டும். தமது வளங்களை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். இலைமறை காயாக மறைந்துள்ள ஆளுமைப் பண்புகளையும் திறமைகளையும் இனங்கண்டு கொள்ள வேண்டும்.

அவற்றை வலுப்படுத்த முயற்சிக்க வேண்டும். பெண் போகப் பொருள் என்கின்ற கருத்தியல் சிந்தனையை ஆணாதிக்கச் செயல் வலுவில் இருந்து தூக்கி வீச வேண்டும்.

அழகு, அமைதி, பொறுமை அடக்கம் என்பனவே பெண்களுக்குரிய வரையறை எனக்கூறும் ஆணாதிக்கத்தை சுட்டெரித்து நீறாக்க வேண்டும்.

உண்மையில் பெண் கற்பை நிரூபிக்க வேண்டியவளாகிறாள். வசைபாடும் வாய்க்கு மெல்லும் அவல் ஆகிறாள். இவை மட்டுமா, பொன்னகையுமின்றி புன்னகைக்க மனமுமின்றி நடைப்பிணமாக வாழ்கிறாள். போராடும் பெண்ணாய் சமூக பரிகசிப்புக் கண்டு அல்லற்படுகிறாள். வாழ்வாதாரத்துக்காகப் போராடுகிறாள். இதனிடையே ஆணாதிக்கமும் இணைந்து வாழ்வைச் சூறையாடிநிற்பதென்பது கொடூரமானது.

### சிந்தனை மாற்றங்களின் ஆட்சி

ஆக, ஆணாதிக்கம் என்பது ஒரு தொற்று நோய். அதனை இல்லாதொழிக்க வேண்டும். தற்துணிவு, தன்னம்பிக்கை கொண்டு ஆணாதிக்கத்தை எதிர்கொள்ள வேண்டும். ஆணாதிக்கம் மேலோங்க இடம்தராது பெண்கள் விழிப்படைய வேண்டும். ஆணைப் போலவே பெண்ணும் அனைத்துரிமையுடையவள் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். அடுத்தவர் நலனுக்காக பாடுபடுகின்ற, போராடுகின்ற பெண்களை ஆணாதிக்கம் அராஜகம் செய்வதை உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும். உற்றதுணையாகக் கொள்கின்ற பெண்ணை அடிமைத்தனம் செய்து அவளது நிம்மதியை சூறையாடுகின்ற ஆணாதிக்க சக்தியைத் தோலுரிக்க வேண்டும்.



அனைத்துப் பெண்களும் உரிமைப் போரில் களமிறங்க வேண்டும். சேவைகள், தியாகங்கள் செய்து ஆண்களையும் சமூகத்தை வலுவூட்டி வாழவைக்கும் பெண்ணினத்தை ஆணாதிக்கம் கொடுங்கோல் ஆட்சி செய்வதை தகர்த்திட பெண்களே புறப்படுங் கள். உரிமைப் போராட்டம் மூலம் ஆணாதிக்கத்தை அழித்தொழித்து உலகில் மாற்றத்தை ஏற்படுத்த முயற்சிப் போம். பணி செய்ய ஒன்றுகூடுவோம்.

# பத்தி எழுத்து

## தியாகதீபம் திலீபனின் தியாகம் விடுதலைக்கான உந்துசக்தி

உலகத் தமிழர் வரலாற்றில் தியாகதீபம் திலீபனின் தியாக வரலாறு அழியாத இடத்தைப் பிடித்துக் கொண்டிருக்கிறது நீர் கூட அருந்தாமல் 12 நாள்கள் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு அணுவணுவாகத் தனது இன்னுயிரை மாய்த்துக் கொண்ட அந்தத் தியாகத்துக்கு ஈடாக எதைத்தான் கூற முடியும்?

நான், எனது குடும்பம் என சுயநலச் சிந்தனையுடன் வாழ்கின்ற இந்த உலகில் தனது இனத்தின் மீட்சிக்காக அசையாத செயலுறுதியுடன் அகிம்சை வழியில் போராடித் தனது விலைமதிப்பற்ற உயிரை ஈகம் செய்வதென்பது மிகச் சாதாரண விடயமல்ல. தமிழர்கள் ஆயுதம் ஏந்திப் போராடுவதில் மட்டுமல்லாது அறவழியில் உறுதியுடன் போராடுவதிலும் வல்லவர்கள் என்பதை இந்த முழு உலகமும் அறியச் செய்த அந்த தியாக தீபத்தைத் தமிழர்களால் என்றுமே மறக்க முடியாது. மறக்கவும்மாட்டார்கள்

அகிம்சைப் போராட்டத்தின் மூலமாக இந்திய நாட்டை அந்நியரிடமிருந்து மீட்டுத் தந்தவர் அண்ணல் காந்தி - இவரும் பல தடவைகள் உணவு ஒறுப்புப் போராட்டங்களில் ஈடுபட்டிருந்தார். திலீபனும் இந்திய அரசிடம் ஐந்து அம்சக் கோரிக்கையொன்றை நிறைவேற்றுமாறு கோரியே தமது போராட்டத்தை ஆரம்பித்தார்.

அப்போது இலங்கைக்கான இந்தியத் தூதுவராகக் கடமையாற்றிய ஜே.எம்.தீச்சித், திலீபன் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த இடத்துக்கு நேரடியாகச் சென்று நிலைமையை அவதானித்தார். பின்னர் எதுவுமே தெரிவிக்காது சென்று விட்டார். திலீபனின் கோரிக்கைகள் இந்திய அரசினால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இதற்கான முழுப்பொறுப்பையும் அப்போதைய இந்தியத் தூதுவரே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ஈழத் தமிழர்கள் விடயத்தில் இந்தியா புரிந்த துரோகங்கள் அளப்பெரியன. இறுதிப் போரில் பல்லாயிரக்கணக்கான தமிழர்களின் உயிர்கள் பறிக்கப்படுவதற்கும் இந்தியாவே உறுதுணையாக இருந்துள்ளது. இன்று ஈழத் தமிழர்கள் மீது போலி அனுதாபத்தைக் காட்டிக் கொண்டிருக்கும் இந்தியாவை ஈழத் தமிழர்கள் எவ்வாறு மன்னிப்பார்கள்?

திலீபனின் தியாகம் வெறும் நினை வேந்தல்களுடன் கரைந்து போகக் கூடியதல்ல. தமிழர்களின் உணர்வுகளைத் தட்டியெழுப்பி இனவிடுதலைக்கான பயணத்தைத் துரிதப்படுத்தக் கூடியது.

போலியான அரசியல் வாக்குறுதிகளைத் தூரத்தில் தூக்கிவீசிவிட்டு இனவிடுதலைக்கான போராட்டத்தில் தம்மை ஆகுதியாக்கிக் கொண்டவர்களின் தியாக நினைவுகளை மீட்டுப் பார்க்க வேண்டிய தருணம் இதுதான். தியாதீபம் திலீபனின் நினைவுகள் ஒவ்வொரு தமிழனிடத்திலும் புதுவிதியொன்றைப் படைப்பதற்கான உந்துசக்தி

# புரட்டாதி மாத ராசிபலன்

(17.09.2017 – 17.10.2017) உங்களுக்கு எப்படி?



## இடபம்

### தொட்டது துலங்கும்

நினைத்ததை சாதித்துக்காட்டும் மனஉறுதியும், விடாமுயற்சியும் கொண்ட நீங்கள், எப்பொழுதும் எளிய வாழ்க்கையை விரும்புவீர்கள். செவ்வாய் இந்த மாதம் முழுக்க சாதகமாக இருப்பதால் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். அதிகாரப்பதவியில் இருப்பவர்களின் அறிமுகம் கிடைக்கும். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனைகளை ஏற்றுக் கொள்வார்கள். சொத்துப்பிரச்சினை கட்டுப்பாட்டிற்குள் வரும். புதிதாக வீடு, மனை வாங்குவீர்கள். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். உடன்பிறந்தவர்கள் உங்களுடன் கலந்தாலோசித்து சில முக்கிய முடிவுகள் எடுப்பார்கள். குருபகவான் 5ஆம் வீட்டில் நிற்பதால் வருமானத்தை உயர்த்த புது முயற்சிகளை மேற்கொள்வீர்கள். குழந்தைப் பாக்கியம் கிட்டும். பழைய சொந்த பந்தங்களை சந்திப்பீர்கள். நீண்ட காலப் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள்.

உங்கள் பூர்வபுண்யாதிபதி சுக்கிரன் சாதகமான வீடுகளில் சென்றுக் கொண்டிருப்பதால் வாகன வசதிப் பெருகும். பிள்ளைகளால் சமூகத்தில் அந்தஸ்து ஒருபடி உயரும். அரைகுறையாக நின்ற வீடுகட்டும் பணியை முடிக்க வங்கிக்கடன் உதவி கிடைக்கும். பூர்வீக சொத்தில் சேர வேண்டிய பங்கை கேட்டு வாங்குவீர்கள். 2ஆம் திகதி முதல் உங்கள் ராசிநாதனாகி புதன் 4ஆம் வீட்டில் உச்சம்பெற்று அமர்வதால் உங்களுடைய ஆளுமைத் திறன் அதிகரிக்கும். உறவினர்கள் உங்களின் தியாக உள்ளத்தைப் புரிந்துகொள்வார்கள். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். விலை உயர்ந்த பொருள்கள் வாங்குவீர்கள். பழையகடனில் ஒருபகுதியை மீண்டும் கொடுப்பீர்கள். உங்களின் தைரிய ஸ்தானாதிபதியான சூரியன் 4இல் அமர்ந்திருப்பதால் இளையசகோதரவகையில் உதவிகள் கிடைக்கும். அரசால் ஆதாயம் உண்டு.

ராகு 2ஆம் இடத்திலும், கேது 8லும் தொடர்வதால் பார்வைக்கோளாறு, வீண் விரயங்கள், ஏமாற்றங்கள், பேச்சால் பிரச்னைகள், சிறுசிறு விபத்துகளெல்லாம் வந்து செல்லும். அரசியல்வாதிகளே! கட்சி ரகசியங்களை மூத்த தலைவர் உங்களிடம் பகிர்ந்து கொள்வார். கன்னிப் பெண்களே! உங்களின் நீண்ட நாள் கனவு நனவாகும். முகப்பரு, பசியின்மை நீங்கும். மாணவமாணவிகளே! நினைவாற்றல் அதிகரிக்கும். சக மாணவர்களின் சந்தேகங்களைத் தீர்த்து வைப்பீர்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்தை விட இலாபம் அதிகரிக்கும். விளம்பர யுக்திகளால் தேங்கிக் கிடந்த சரக்குகளை விற்றுத் தீர்ப்பீர்கள். பங்குதாரர்களுடன் இருந்துவந்த பிரச்னைகளும் கட்டுப்பாட்டிற்குள் வரும். புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். மருந்து, துணி, உணவு வகைகளால் ஆதாயமடைவீர்கள். உத்யோகத்தில் பதவி உயர்வு, சம்பள உயர்வை எதிர்பார்க்கலாம். மூத்த அதிகாரிகள் உங்களை நம்பி சில முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். கலைத்துறையினரே! உங்களின் கற்பனைத்திறன் வளரும். சம்பளவிஷயத்தில் கறாராக இருங்கள். விவசாயிகளே! தோட்டப் பயிர்கள் மூலம் இலாபம் வரும். வீட்டில் நல்லது நடக்கும். தொட்டதெல்லாம் துலங்கும் மாதமிது.

## வரலாற்றில் இன்றைய தினம் 18.09.2017



1739 - துருக்கியும் ஒஸ்திரியாவும் சமாதான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன. ஒஸ்திரியா, பெல்கிரேட்டை துருக்கியிடம் விட்டுக் கொடுத்தது.

1810 - ஸ்பெய்னிடம் இருந்து சுதந்திரம் பெற்றதாக சிலி அறிவித்தது.

1812 - ரஷ்யத்தலைநகர் மொஸ்கோவில் ஏற்பட்ட பெரும் தீயினால் 70 முதல் 90 வீதமான வீடுகளும், ஆயிரம் தேவாலயங்களும் தீக்கிரையாகின.

1851 - நியூயோர்க் டெய்லி ரைம்ஸ் எனும் பெயரில் நியூயோர்க் ரைம்ஸின் முதலாவது பதிப்பு வெளியானது.

1943 - டனிஸ்யூதர்களை நாடுகடத்துமாறு கட்டளை ஹிட்லர்.

1947 - அமெரிக்காவின் தேசியபாதுகாப்பைக் கருத்தில் கொண்டு மத்திய புலனாய்வு முகவரகம் உருவாக்கப்பட்டது.

1960 - ஐக்கிய நாடுகள் சபையில் முன்னிலையாவதற்கு கியூபா பிரதிநிதிகளின் தலைவராக நியூயோர்க் நகரைச் சென்றடைந்தார் பிடல் காஸ்ரோ.

1964 - தென் வியட்நாமுக்குள் வட வியட்நாம் படைகள் ஊடுருவத் தொடங்கின.

2014 - பிரிட்டனில் இருந்து சுதந்திரம் பெறுவதற்கு எதிராக ஸ்கொட்லாந்து வாக்களித்தது.

1974 - ஹொண்டுராஸைத் தாக்கிய புயலால் 5 ஆயிரம் பேர் உயிரிழந்தனர்.

## நாளை

**19.09.2017**

செவ்வாய்க்கிழமை

**புரட்டாதி 3**

திதி: சதுர்த்தி பி.ப. 12.12 வரை
நட்சத்திரம்: பூரம் பி.இ. 12.09 வரை
சுபநேரம்: 10.33–12.03 வரை
ராகுகாலம்: 03.03–04.33 வரை




**மேடம்:** சிரம சூழ்நிலையை பிறரிடம் சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற விடாமுயற்சி தேவைப்படும். இலாபம் சுமார். பெண்கள் செலவில் சிக்கனம் பேணுவது நல்லது.

**இடபம்:** மனதில் ஒருமுகத் தன்மையுடன் செயல்படுவீர்கள். நேர்மை மீதான நம்பிக்கை வளரும். உறவினர் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி நிலைக்கும்.

**மிதுனம்:** கடின பணிகளையும் எளிதாக நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த இடையூறு விலகும். இலாபம் படிப்படியாக உயரும். அனுகூலமான தீர்வுகள் உண்டாகும்.

**கடகம்:** செயல்களில் கவனச்சிதறல் ஏற்படலாம். உங்கள் நலன் விரும்புவரிடம் தகுந்த ஆலோசனை பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் பணவரவு சுமாராக இருக்கும்.

**சிங்கம்:** எதிர்பார்ப்புடன் இருந்த செயல் நிறைவேற தாமதம் ஆகலாம். நம்பிக்கையுடன் புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். தொழிலில் எதிர்பார்ப்பு ஓரளவே நிறைவேறும்.

**கன்னி:** முக்கிய செயல்கள் எளிதாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் புதிய சாதனை உருவாகும். வருமானம் அதிகரிக்கும். வீடு வாகனத்தில் கூடுதல் வசதி பெற தேவையான மாற்றம் செய்வீர்கள்.

**துலாம்:** பொறுமையுடன் செயல்பட்டு நன்மை காண்பீர்கள். தொல்லை கொடுத்தவர் இடம் மாறிப் போவர். தொழில் வியாபார வளர்ச்சியில் புதிய சாதனை உண்டாகும்.

**விருச்சிகம்:** மனதில் குளறுபடி ஏற்பட்டு மறையும். தொழில், வியாபாரத்தில் மறைமுகப் போட்டி அதிகரிக்கலாம். எதிர்பார்த்த பணவரவு கிடைக்க தாமதம் உண்டாகும். ஆரோக்கியம் மேம்படும்.

**தனுசு:** பேச்சில் நிதானத்தைப் பின்பற்றுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். சேமிப்பு பணம் செலவுக்கு பயன்படும்.

**மகரம்:** உறவினர் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கை நிறைவேற்றுவீர்கள். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

**கும்பம்:** பேச்சில் விரக்தியின் தன்மை வெளிப்படலாம். தொழில், வியாபாரத்தில் பொறுப்பு அதிகரிக்கும். பெண்கள் செலவில் சிக்கனம் கடைப்பிடிப்பது நல்லது.

**மீனம்:** உங்களின் வளர்ச்சி கண்டு அனைவரும் புகழ்ந்து பேசுவர். தொழில் வியாபாரத்தில் இருந்த தடையனைத்தும் மறையும். பணவரவு அதிகரிக்கும்.







## 'மெர்சல்' திரைப்படத்தின் முன்னோட்டக் காணொலி வியாழனன்று திரைக்கு

அட்லி இயக்கத்தில் விஜய் நடித்துவரும் 'மெர்சல்' படத்தின் முன்னோட்டக் காணொலி குறித்த அறிவிப்பு வெளியாகி இருக்கிறது. இதன்படி எதிர்வரும் 21ஆம் திகதி இந்த முன்னோட்டக் காணொலி வரவுள்ளது. மெர்சல் படம் தொடர்பில் ஒவ்வொரு நாளும் புதுப்புதுத் தகவல்கள் வெளிவந்துகொண்டிருக்கின்றன. இந்தப் படத்தின் முன்னோட்டக் காணொலி இன்னும் வெளியிடப்படாத நிலையில், அது எப்போது வரும் என்பது தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டிருந்தது. இந்த நிலையில் அடலியின் பிறந்த தினமான எதிர்வரும் 21ஆம் திகதி மாலை 6 மணிக்கு மெர்சல் படத்தின் முன்னோட்டக் காணொலி திரைக்கு வரவுள்ளது என்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் படத்தில் விஜய்க்கு ஜோடியாக சமந்தா, காஜல் அகர்வால், நித்யா மேனன் ஆகியோர் நடித்திருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

காலையில் பாதித் தூக்கத்தில் இருக்கும்போது....



அம்மா 'சாப்பாடு ரெடி' ன்னு கூப்பிடும்போது....



அந்தக் காலத்தில் எமது ஆசிரியர்கள் அடித்த அடியை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிட்டிருந்தால் அவர்கள் இன்றும் சிறையில் இருந்திருப்பார்கள்...

அவர்கள் அவ்வாறு அடித்திருக்கவில்லை என்றால் நாமும் இன்று சிறையில் இருந்திருப்போம்.

Sairam
சிலருக்கு கிடைத்தது.
சிலருக்கு கிடைக்கவில்லை.
சிலர் கிடைத்ததை சரியாக/தவறாக பயன்படுத்தினர்.
சிலர் பயன்படுத்தத் தவறுகின்றனர்.
#சந்தர்ப்பம்.

twitter




## சுடோக்கு என் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 5 | 8 | | 3 | | |
| | 8 | 2 | | | 4 | | 6 | |
| | | | | 9 | | 8 | | |
| | 5 | | | | | | 8 | 1 |
| | 3 | | 6 | 5 | 8 | | 9 | |
| 4 | 9 | 8 | | | | | 3 | |
| | | 4 | | 6 | | | | |
| | 7 | | 8 | | | 1 | 2 | |
| | | 9 | | 1 | 7 | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 4 | 9 | 8 | 2 | 5 | 7 | 3 | 6 |
| 2 | 8 | 7 | 1 | 3 | 6 | 5 | 4 | 9 |
| 6 | 3 | 5 | 9 | 4 | 7 | 1 | 8 | 2 |
| 3 | 5 | 1 | 7 | 9 | 2 | 8 | 6 | 4 |
| 4 | 2 | 8 | 6 | 1 | 3 | 9 | 7 | 5 |
| 9 | 7 | 6 | 5 | 8 | 4 | 3 | 2 | 1 |
| 8 | 6 | 4 | 3 | 5 | 9 | 2 | 1 | 7 |
| 5 | 1 | 2 | 4 | 7 | 8 | 6 | 9 | 3 |
| 7 | 9 | 3 | 2 | 6 | 1 | 4 | 5 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டி ருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.

# அதிர்ஷ்டத்தின் பயன்



ஒரு செல்வந்தருக்கு அதிர்ஷ்டத்தின் மேல் மிகவும் நம்பிக்கை இருந்தது. உலகத்தில் எல்லாம் அதிஷ்டத்தின் படியேதான் நடக்கின்றன என்று நினைப்பவர் அவர். ஒருநாள் அவர் புதிதான ஒரு அதிஷ்ட விடயத்தைக் கேள்விப்பட்டார். விடியற்காலையில் தூங்கி எழுந்ததும் சோடிக் காக்கைகளைப் பார்த்தால் அன்று நல்ல அதிஷ்டம் உண்டாகும் என்ற விடயம் தான் அது. உடனே அவர் தன் பணியாளை அழைத்தார். “நீ விடியற்காலையில் எந்த இடத்தில் சோடிக் காக்கைகள் அமர்ந்திருப்பதைப் பார்த்தாலும் சற்றும் தாமதியாமல் உடனே வந்து என்னை எழுப்ப வேண்டும்” என்று உத்தரவிட்டார்.
பணியாளும் சம்மதித்தான். அன்றிலிருந்து ஒவ்வொரு நாள் காலையிலும் சோடிக் காக்கைகளைத் தேடுவதே அவனின் தலையாய வேலையாகப் போய் விட்டது. தினமும் பொழுது புலரும் முன்னரே அவன் எழுந்து தோட்டத்தையும் மற்ற இடங்களையும் கவனிக்கத் தொடங்கினான்.
பொழுது விடிந்ததும் தோட்டத்து மரக்கிளைகளிலும் மின்சாரக் கம்பிகளிலும் கூட்டாக நிறைய காக்கைகள் அமர்ந்து கா... கா... என்று கத்திக் கொண்டிருக்கும் அல்லது ஒரு குஞ்சுக் காக்கை வாய் திறந்த படி இருக்க ஒரு தாய்க் காக்கை அதற்கு உணவு கொடுத்துக் கொண்டிருக்கும் அல்லது ஒரே காக்கை மட்டும் கிழக்கையும் மேற்கையும் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டிருக்கும் ஆனால் ஒரு ஆண் காக்கையும் ஒரு பெண் காக்கையும் சோடியாய் அமர்ந்திருப்பது மிகவும் அரிதாய் இருந்தது. ஒரு நாள் காலை செல்வந்தவரின் வீட்டுத் தோட்டத்தில் இருந்த ஒரு தென்னை மரத்தில் சோடிக் காக்கைகள் அமர்ந்திருப்பதைப் பார்த்து விட்ட அந்தப் பணியாள் உடனே அவள் ஓடிச் சென்று தன் எஜமானை எழுப்பினான். “எஜமான்! எஜமான்” நம் வீட்டுத் தென்னை மரம் ஒன்றில் சோடிக் காக்கைகள் அமர்ந்திருக்கின்றன. சீக்கிரம் எழுந்து வாருங்கள்” என்று அவசரப்படுத்தினான் பணியாள். எஜமான் உடனே தன் கண்களை மூடிய படி வேலையாளின் உதவியுடன் காக்கைகள் இருக்கும் இடத்தை அடைந்தார்.
விடியலில் முதன் முதலில் ஜோடிக் காக்கைகளைப் பார்த்தால் தானே அதிஷ்டம் உண்டாகும் என்ற நம்பிக்கையில் வேலையாள் தென்னை மரப் பக்கத்தில் பார்க்கும்படி எஜமானை நிறுத்தி விட்டு கண்களைத் திறக்கும் படி கூறினான்.
எஜமான் கண்களைத் திறந்தார். காக்கை ஒன்று பறந்து போய்விட ஒன்று மட்டும் அமர்ந்திருந்தது. செல்வந்தர் கோபம் தலைக்கேற ஒரே பாய்சலாக பாய்ந்து வேலையாளைப் பிடித்து அடிஅடி என்று அடித்தார். “எனக்கு நேரவிருந்த அதிஷ்டத்தை உடன் எனக்கு கூறாமல் நீ மட்டும் அவற்றைப் பார்த்து அதிஷ்டத்தைப் பெற்றுவிட்டு என்னை தாமதமாக வந்து எழும்பி விட்டாய்” என பேசிப் பேசி அடிகள் விழுந்து கொண்டி ருந்தன. அமைதியாக செல்வந்தரைப் பார்த்து “எஜமான் சோடிக் காக்கைகளை நான் பார்த்தால் நான் பெற்ற அதிஷ்டம் உங்களின் இந்த பெரும் தாக்குதல்கள்தான்” என்றான் செல்வந்தர் திகைத்தார். தன் பிழை உணர்ந்தார் அதிஷ்டத்தை நம்புவதை அன்றே கைவிட்டார்.

## எரிபொருள் தரும் தாவரங்கள்


எதையும் எரிப்பதற்கு நாம் தயாராக இருக்கிறோம். ஆனால் எரிபொருள் தான் சரியாகக் கிடைப்பதில்லை பெற்றோல் – மண்ணெண்ணெய்க்கெல்லாம் என்ன பாடுபட வேண்டியிருக்கிறது. பூமியைத் தோண்டித் தோண்டி கிடைக்க வரைக்கும் அவற்றை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். சிறிது காலத்தில் இவை தீர்ந்து போகப் போகின்றன என்ற பயமும் இருக்கிறது.
கலிபோர்னியா பல்கலைக்கழக மெல்வின் கால்வின் என்ற பேராசிரியர் அமேசன் பகுதியில் ஒரு அதிசய மரத்தை கண்டுபிடித்துள்ளார். இறப்பர் மரத்தில் பால் எடுப்பது போல நன்றாய் வளர்ந்த ஒரு பெரிய மரத்தில் ஒரு ஓட்டை போட்டதும் அதனூடாக எண்ணெய் வந்து கொண் டிருக்கும். ஒருநாளில் 25லீற்றர் வரை எண்ணெய் கிடைக்கும்.
அதன் பின் ஒரு தக்கையால் அந்த ஒட்டையை அடைத்து விட வேண்டும் ஆறுமாதம் கடந்த பின் மறுபடியும் எண்ணெய் கிடைக்கும் இந்த எண்ணெய்யின் பெயர் ‘பேருகோபையா’ எண்ணெய் இதனை அப்படியே டீசல் எஞ்சினிலே ஊற்றி ஓட்டலாம். இதனைக் காய்ச்சி வடித்தால் பலவிதமாக உபயோகப்படுத்தலாம். பிலிப்பைன்ஸ்லோ பீட்டோல் போராம் ரெசினி பெரம்” என்ற ஒரு மரத்தில் இருந்துதான் அவ்வாறு எண்ணெய் கிடைக்கிறதாம். இதன் பழத்தில் கூட லேசா எண்ணெய் கிடைக்கும் தாம் இதை நீராவியிலே வடிகட்டி காய்ச்சி வடித்து எடுத்து பெற்றோலுக்குப் பதிலாகவும் உபயோகப்படுத்தலாம். இதேபோன்று பாசிகளில் இருந்து எண்ணெய் எடுப்பதற்கு வாய்ப்பு உண்டு எனக் கண்டறியப்பட்டுள்ளது.





## வேம்பு


- ★ வேம்பு இந்தியா, இலங்கை, மியன்மார் போன்ற நாடுகளில் வளரும் மிகவும் பயனுள்ள ஒரு மரம்
- ★ இது நன்றாக வளர்ந்து நிழல் தர வல்லது.
- ★ இதன் இலைகள் கிருமிகளை அழிக்கும் அல்லது அணுக விடாத் தன்மை கொண்டவை என்று கருதப்படுகிறது.
- ★ வேப்பம் பூவில் இருந்து வேப்பம் பூ வடகம், பச்சடிரசம் என்பவை செய்யலாம். வேப்பம் எண்ணெய் மருத்துவ ரீதியாகவும் பாவிக்கப் படுகின்றது.
- ★ வேப்ப மர மேற்தோலை (பட்டையை) சீவினால் அந்தப் பகுதியில் இருந்து பிசின் வடியும்.
- ★ இந்தப் பிசின் ஒட்டு வேலைகளுக்கு உகந்தது.



## நிழலில் தவறு

இந்த டைனோசரின் நிழலில் ஐந்து தவறுகள் இருக்கின்றன. அவற்றைக் கண்டுபிடியுங்கள்

## வழிகாட்டுவோம்





## கற்றாளை

- ★ இது ஒரு வறள்வலயத் தாவரம் குறைவாக நீர் கிடைக்கும் பகுதிகளில் செழித்து வளரும்.
- ★ இது அரிதாகக் கிடைக்கும் நீரை தன் இலைகளில் தேக்கி வைத்திருப்பதால் எந்த வெப்பத்தையும் தாங்கி வளரும்.
- ★ கற்றாளைகளில் இலைகள் பெரும்பாலும் சதைப்பற்றுடையதாகவும் முட்கள் நிறைந்ததாகவும் இருக்கும்.
- ★ கற்றாளையில் சோற்றுக் கற்றாளை, பெருங்கற்றாளை, சிறு கற்றாளை கருங்கற்றாளை, செங்கற்றாளை நாகதாளி இப்படிப் பல வகைகள் உள்ளன.
- ★ பெரும்பாலும் எல்லாக் கற்றாளைச் செடிகளும் சாம்பல் பூத்ததும் செந்நிறம் பூத்ததுமாக இருக்கும் இவற்றில் சோற்றுக்கற்றாளை மட்டும் அழகிய பச்சைப் பசுமை நிறத்தில் இருக்கும்.
- ★ இந்தக் கற்றாளை பல மருத்துவக் குணங்கள் நிறைந்தது.
- ★ இந்தக் கற்றாளை பல வகைகளில் வெப்பத்தை தணிக்கிறது.
- ★ இதன் இலை மிகுந்த நீர்த் தன்மையும் சதைப் பிடிப்புமாக இருக்கும் இந்த உள்ளீட்டை சோறு என்பர்.
- ★ இந்த உள்ளீட்டிலிருந்து ம்ருந்து வகை எண்ணெய் வகைகள் உடல் சமருத்துக்கான சவர்காரம் ஷம்பூ முக பளபளப்புக்கான பூச்சுகள் என்பன தயாரிக்கப்படுகின்றன.




# மனிதன்

## நட்சத்திரத் தாய்வீட்டின் குழந்தை

செ.தமிழ்நம்பி

ஜாதி, மத, மொழி, நாடு என்ற பேதங்களின்றி இந்தப் பூமியில் உள்ள அனைத்து மனிதர்களும்ஒருதாய்மக்களே. அந்தத்தாய் யாரென்று அறிந்து கொண்டால் ஆச்சரியமும், பெருமையும்ஏற்படுகிறது. அந்தத் தாய் என்பவள் 'நட்சத்திரம்' தான்.

**நட்சத்திரத்தில் இருந்து நாம்**

உயிர்கள் உருவாக பல தனிமங்கள் தேவை. மனிதர்களாகிய எமக்கு குருதி சுத்தமாக வேண்டிய ஒட்சிசன், எலும்பின் உறுதிக்குத் தேவையான கல்சியம், குருதிக்கு வேண்டிய இரும்புச் சத்து மற்றும் காபன், நைதரசன், பொஸ்பரஸ் போன்ற தனிமங்களும் அவற்றோடுஉப்பில்உள்ள சோடியம் மற்றும் பொட்டசியம், மக்னிசியம் போன்ற பலதனிமங்களும்தேவை. அவை இல்லாது போனால் உயிர் வாழ முடியாது என்பதுஅனைவருக்கும்தெரிந்த விடயம், மேலும் தங்கம், வெள்ளி, அலுமினியம் போன்றபலதனிமங்களும் எமது வாழ்வோடுபின்னிப் பிணைந்துள்ளன.

இந்தத் தனிமங்களை ஒன்று, இரண்டு, மூன்று என்று வரிசைப்படுத்தி அறிவியலாளர்கள் ஓர் அட்டவணையை ஏற்படுத்தியுள்ளனர். இந்தத் தனிமங்களைப் பற்றி ஆராய்ந்து அதன் அமைப்பு, குணங்கள், பயன்கள் போன்றவற்றை அறிந்து கொண்டு அவைகளைப் பயன்படுத்திஎம்வாழ்வை இனிதேநடத்தஅறிவியலாளர்கள்வழிவகுத்திருக்கிறார்கள். ஒவ்வொருதனிமங்களின்குணங்களை நீண்ட நாள்களாக ஆராய்ந்து அறிந்த அறிவியலாளர்கள் பணி தான் அவர்களுக்குஉதவிபுரிகின்றது. இந்தத்தனிமங்கள்எல்லாம்பூமியில்கிடைக்கின்றன.

**தனிமங்களின் வருகை**

நட்சத்திரங்களில் தான் இவை அனைத்தும் முதலில் உருவாகின என்று அறிவியலாளர்கள் சொல்லுகிறார்கள். ஏன் பூமியில் நாம் காணும் அனைத்துப் பொருள்களும்நட்சத்திரத்திலிருந்துதான் உருவாகின.

சூரியன் என்ற நட்சத்திரத்தில் இது போன்றபொருள்கள்உருவாகிக்கொண்டிருக்கின்றது. ஆனால் சூரியனில் உருவாகும்பொருள்கள்எமக்குக்கிடைக்காது. சூரியனுடைய தாத்தாவாகிய முதல் தலைமுறை நட்சத்திரம் உருவாக்கியதை நாம் அனுபவிக்கிறோம். மூன்றாம்தலைமுறையைச் சேர்ந்த நாம் இப்போதுகாணும்சூரியன் உருவாக்கும் பொருள்கள் எமக்குப் பின்னால் வரும் தலைமுறைக்கும், உயிர்களுக்கும்உபயோகமாகும்.


**உரு மாற்றம்**

அண்ணளவாக 1370 கோடி ஆண்டுகளுக்கு முன் தோன்றி ஒரு பலூனைப் போல விரிவடைந்த இந்தப் பிரபஞ்சத்தின் ஆரம்பத்தில் இரண்டே இரண்டு தனிமங்கள் தான் இருந்தது. அவைஜதரசன்மற்றும்ஹீலியம்(75 சதவீதம் ஜதரசன், 25 சதவீதம் ஹீலியம்) என்பனவே. வாயுக்களான இவைஇரண்டுமல்லாமல்நாம்காணும் நட்சத்திரங்கள், கோள்கள், தூசு என்பன கூடப்பிரபஞ்சத்தின்ஆரம்பத்தில்இல்லை. இந்த இரண்டு தனிமங்கள் (வாயுக்கள்) தான் இப்போது நாம் காணும் கோடிக்கணக்கான நட்சத்திரங்களும், அதைச் சுற்றிவரும்கோள்களும், இந்தபூமியும், அதில்நாம்காணும்அனைத்துப்பொருள்களுமாக உருமாற்றம் கண்டுள்ளன.

**மாறுதல் செயல்முறை**

பிரபஞ்சத்தின் ஆரம்பத்தில் தோன்றிய ஜதரசன் அணுக்களின் ஈர்ப்புவிசையினால் ஏற்பட்ட பிணைப்பினால் தான் பிரபஞ்சத்தின் முதல் தலைமுறை நட்சத்திரங்கள்உருவாகின. பலகோடிவெப்பத்தைக் கொண்ட இந்த நட்சத்திரங்களின் உள்ளே ஏற்படும் வெப்பத்தினால் ஜதரசன் அணுக்கள் இணைந்து கொண்டு ஹீலியம் என்ற தனிமமாக புதிதாக உருவாகின. இந்த இணைப்பில் தோன்றும் ஆற்றல்தான்ஒளியாகிறது. நட்சத்திரங்களுக்குள்ளே தொடர்ந்து பல கோடி ஆண்டுகளாக இந்த இணைப்பு நடந்து கொண்டே இருக்கின்றது.

நட்சத்திரதிற்குள்ளே இரண்டு ஜதரசன் மூலக்கூறுகள்இணைந்துஒருஹீலியம் அணு புதிதாக உருவாவதுபோலவே இன்னும் பல அணுச்சேர்க்கைகள் அங்குநடைபெறுகின்றன. புதிதாகஉண்டான இரண்டு ஹீலியம் அணுக்கள் இணைந்து 'பெரிலியம்" என்ற தனிமம் உண்டாகிறது. அத்தோடு ஒரு ஹீலியம் அணுவும், ஒரு பெரிலியம் அணுவும் சேர்ந்து உயிர்களுக்குத் தேவையான முக்கியமானதனிமம்'காபன்" உருவாக்கப்படுகிறது.




புதிதாக தோன்றிய அணுக்களின் இணைப்புமேலும்தொடர்கிறது. இரண்டு பெரிலியம்அணுக்கள்இணைந்து உயிரின் ஆதாரமான பிராணவாயு (KAON) உருவாகிறது. இரண்டு காபன் அணுக்கள் இணைந்து ஒரு 'மக்னீசியம்' அணு உருவாகிறது. இப்படிபற்பலஅணுச்சேர்க்கைகள் நடந்து ஒன்று, இரண்டு என்று தனிமங்களைவரிசைப்படுத்தியஅட்டவணையில் உள்ள 26 என்ற எண் கொண்ட இரும்பு வரை நட்சத்திரங்களுக்கு உள்ளே பெருமளவில் உற்பத்தியாகிறது.

நட்சத்திரங்களுக்குள்உள்ளஅண்ணளவாக கோடி பாகை செல்சியல் உடைய வெப்பத்தில்தான்இந்தஅணுச்சேர்க்கைகள்நடக்கமுடிந்தது. அறிவியல்வளர்ந்த இந்தக் காலத்தில் புதிய தனிமங்களை உண்டாக்கும்பணியில்மனிதன்இறங்கி சில தனிமங்களை உருவாக்கி வெற்றியும்பெற்றுள்ளான். முன்னதாகபூமியில் உள்ளதனிமங்களிலிருந்துதான்அவை உருவாக்கப்பட்டன.

சிறிய அளவில் தான் இவற்றை உருவாக்க முடியும். பெருமளவில் பூமியில் கிடைப்பவைநட்சத்திரங்களில்உற்பத்தியானவையே. தனிமங்களின் அட்டவணையில் இரும்பிற்கு மேல் உள்ள தனிமங்களான தங்கம், வெள்ளி, யூரேனியம் போன்றவை உருவாகுவதற்கு நட்சத்திரங்களில் உள்ள வெப்பத்தைக் காட்டிலும் அதிக வெப்பம் தேவை. அதனால்நட்சத்திரங்களுக்குள்தனிமங்கள் உற்பத்தி என்பது மூடப்பட்ட தொழிற்சாலைபோல நின்று விடுகிறது.

**வாயுக்கூட்டம்**

அந்த முதல் தலைமுறைச் சூரியன் தனது வாழ்நாள்கள்முடிந்தபின் அதிபயங்கரமாக வெடித்துச்சிதறும். பிரபஞ்சத்தில் அது மிக அற்புதமான காட்சியாகும். 'சூப்பர் நோவா'என்றுஇதனைக் கூறுவார். அப்படி வெடிக்கும் போது உண்டாகும் அதிபயங்கர வெப்பத்தில் இரும்பு அணுக்களும் அணுச்சேர்க்கையால் இணைந்து இரும்பிற்கு மேல் அணு எண் கொண்ட யூரேனியம், தங்கம், வெள்ளி போன்ற மற்றெல்லா தனிமங்களும்உண்டாகின. நட்சத்திரம் வெடிக்கும் போது வாயுக்களாக அவை பிரபஞ்சத்தில் தூக்கி எறியப்பட்டன. பல கோடிமைல்கள்பரந்துவிரிந்துகிடக்கும் பார்க்க பரவசமூட்டும் இந்த வாயுக்கூட்டங்களை 'நேபுல்லா' என்றழைப்பர்.

இந்த 'நேபுல்லா' என்ற வாயுக்கூட்டதில் நட்சத்திரத்தில் உருவான எல்லாத் தனிமங்களுடன் பிரபஞ்சத்தில் ஏற்கனவே உள்ளஜதரசன்வாயுவும்கலந்திருக்கும். பிரசவ மருத்துவமனையில் பெண்கள் அனுமதிக்கப்படும்போது எல்லோருக்கும் தெரியும் குழந்தைகள் பிறக்கப் போகின்றன என்று. அதுபோலவே பிரபஞ்சத்தில் காணும் இந்த 'நேபுல்லா' என்ற வாயுக் கூட்டங்களை காணும் விண்வெளி ஆய்வாளர்கள் அந்த வாயுக்கூட்டத்தில்'நட்சத்திரங்கள்"பிறக்கப் போகின்றன என்பதைஉணர்ந்தும்தெரிந்தும் கொள்கின்றனர்.

காரணம் ஈர்ப்பு விசைதன் பணியை அங்கு ஆரம்பிக்கும். ஜதரசன் அணுக்கள் ஒன்றை ஒன்று இழுத்து வெப்பமும்அடர்த்தியும்அதிகமாகிப்புதிய அடுத்த தலைமுறை நட்சத்திரம் சூரியனைப்போலஉருவாகும். நட்சத்திரத்தின் தோற்றம் ஒரு அதி பயங்கர வெடிப்புடனும், அதிர்வுடனும் நடக்கும். புதிதாக தோன்றிய நட்சத்திரத்தைச் சுற்றித் தூசுகளும், வாயுக்களும் வெடிப்பினால் எறியப்படும். அவைகள் அந்த நட்சத்திரத்தைச் சுற்ற ஆரம்பிக்கும்.

அவைகளும் ஈர்ப்பு விசையால் இணைந்து முதலில் சிறு சிறு பாறைகளாக உருவாகும். அந்தப் பாறைகள் மேலும் ஒன்றுடன் ஒன்று இணைந்து அந்தநட்சத்திரத்தைச்சுற்றிவரும்கோள்களாகஉருவாகும். அந்தத்தூசுகளிலும், வாயுக்களிலும் தான் எல்லாத் தனிமங்களும் உள்ளன. அதனால்தான் அந்தக் கோள்களில்ஒன்றானபூமியிலும்அனைத்துத் தனிமங்களும் கிடைக்கின்றன

> “நட்சத்திரங்களுக்குள் உள்ள அண்ணளவாக கோடி பாகை செல்சியஸ் வெப்பத்தில்தான் இந்த அணுச்சேர்க்கைகள் நடக்க முடிந்தது. அறிவியல் வளர்ந்த இந்தக் காலத்தில் புதிய தனிமங்களை உண்டாக்கும் பணியில் மனிதன் இறங்கி சில தனிமங்களை உருவாக்கிவெற்றியும் பெற்றுள்ளான். முன்னதாக பூமியில் உள்ள தனிமங்களில் இருந்து தான் அவை உருவாக்கப்பட்டன.











# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை பொன்னுச்சாமி



கச்சாய், கொடிகாமத்தைப்பிறப்பிட மாகவும் மீசாலை வடக்கு, இராமா கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை பொன்னுச் சாமி17.09.2017 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப் பிள்ளை-சேதுப்பிள்ளைதம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற அப்பாக் குட்டி செல்லையா - மீனாட்சி தம்பதிய ரின் அன்பு மருமகனும் ஞானம்மா வின் அன்புக்கணவரும் ஸ்ரீ பத்மநாதன், கலாரஞ்சனி (U.K.), கம லரஞ்சனி, யோகநாதன் (அதிபர் - வ/ கற்காரம்குளம் இளங்கோ வித்தியா லயம்), விஜயநாதன் (கனடா), இதய ரஞ்சனி (கனடா), விமலரஞ்சனி, சுபரஞ்சனி (ஆசிரியை - யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி), கோபிநாதன் (U.K.)ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற கனகம்மா, திருஞானசம்பந்தமூர்த்திராசா (U.K.), சித்திவிநாயகர், இராஜபாமா (ஆசிரியை - நெளுக்குளம் கலைமகள் ம.வி.), அருள்நிதி (கனடா), பாஸ்கரன் (கனடா), குகேந்திரன் (உரிமையாளர் - கஜமுகன் மல்ரிசென்ரர், மீசாலை), அனுச்சந்திரா (U.K.) ஆகியோரின் பாசமிகு மாமனும் காலஞ்சென்ற தம்பிஜயா, காலஞ்சென்ற சுப்பிரமணியம், காலஞ்சென்ற வள்ளிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற ஆறுமுகம், அன்னம்மா ஆகியோரின் அன்புமைத்துனரும்பிரகலதா, பிரதீபன் (பிரான்ஸ்), பிறேமலதா (பிரான்ஸ்), சாந் தீபன் (தபாலதிபர் மருதானை, கொழும்பு), வசந்தன் (கனடா), சியாழினி (U.K.), கஜந்தன், பிருந்தன், விதுஷன், நகுலபாஸ்கரன், சங்கீதன், ஹரிஸ் (கனடா), ஆத வன் (கனடா), லௌகீகன் (கனடா), மேனகா (கனடா), நிரேஸ், கீர்த்தனா, கஜனி, ஜஸ்ருதி, சேஷகன், கெயிலன் (U.K.) ஆகியோரின் அன்புப் பேரனும் கின்சியா, தனுஸ்கா, சானுஜன், சானிகா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மீசாலை வடக்கு, இராமாவில், கொடிகாமம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**0212050376,**
**0777328657, 0773686873**

## தமிழ்...

ஆராயப்பட்ட விடயங்கள் தொடர்பில் அந்தக் கட்சியின் செயல ரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சிவசக்தி ஆனந் தன் ஊடக அறிக்கை ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். அந்த அறிக்கையில் முக்கியமாக தெரிவிக்கப்பட்டுள்ள தாவது:

20ஆவது திருத்தச் சட்டவரைவை ஈ.பி.ஆர்.எல்.எவ். நிராகரிக்கின்றது. ஒற்றையாட்சிக்குள் அதிகாரப்பரவலாக் கல் தொடர்பான அறிக்கையாகவே வழிநடத்தல் குழு வின் இடைக்கால அறிக்கை வருவதற்கான சாத்தியக்கூ றுகள் தென்படுவதால் அறிக்கை வெளிவந்ததும் மீண் டும் அரசியல்பீடம் கூடி அது தொடர்பில் விவாதித்து மக்களுக் குத் தெளிவுபடுத்துவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்தில் இலங்கை அரசு கேட்டுக்கொண்டவாறு இரண்டு வருடகால அவகா சம் கொடுத்து அரசைக் குற்றவாளிக் கூண்டிலிருந்து பிணை எடுத்த பெருமை தமிழ் அரசுக் கட்சியையே சேரும். இத்தகைய சூழலில் தமிழ் அரசுக் கட்சி தான் விட்ட தவறுகளைத் திருத்திக் கொண்டு அரசின் கையா லாகாத்தனத்தை பன்னாட்டுச் சமூகத்துக்கு வெளிச்சம் போட்டுக் காட்ட முன்வரவேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சி களுடன் கலந்து பேசி ஒருமித்த முடிவுகள் எடுக்காமல் தமிழ் அரசுக் கட்சியினர். கூட்டமைப்புச் சார்பாக அறிக் கைகள் சமர்ப்பிப்பதை யும் பின்னிணைப்புகள் வழங்கு வதையும் நாம் கண்டிக்கின் றோம் என்றுள்ளது. (வ-5)

## சாராயம்...

காம் வாய்க்கால் சாலையில் நேற்றுமாலை இடம்பெற் றது. 8 மோட்டார் சைக்கிள்களில் வந்த கும்பல் ஒன்று தம்மை வெட்டியது என்று காயமடைந்தவர் கள் பொலி ஸாருக்கு வாக்குமூலம் அளித்துள்ளனர்.

பரந்தனில் மதுபான சாலையிலேயே இந்தப் பிரச்சினை ஆரம்பித்துள்ளது. அங்கு சுமார் 25 வயது மதிக்கத்தக்க இளைஞர் கும்பலுக் கும் 23 வயதுக்கு உட்பட்டதாக மதிக் கத்தக்க மற்றொரு இளைஞர் கும்பலுக்கும் இடையே சாராயம் குடித்துக்கொண்டிருந்தபோது வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. அங்கிருந்து அவர்கள் சென்றபின்னரும் முறுகல் நீடித்தது.

25 வயது மதிக்கத்தக்க கும்பலைச் சேர்ந்தவர்கள் வயல் ஒன்றில் உழவு இயந்திரம் மூலமாக உழுதுகொண்டிருந் தனர். அங்கு இருதரப்பினரும் அலைபேசியில் கதைத் துள்ளனர் என்றும் அதனால் முறுகல் முற்றியதாக வும் விசாரணையில் கூறப்பட்டுள்ளது. அதனையடுத்து 23 வயதுக்கு உட்பட்டவர்கள் என்று மதிப்பிடப்படும் கும்பல் 8 மோட்டார் சைக்கிள்களில் சென்று வயலில் வைத்து வாள்வெட்டு நடத்தியுள்ளனர்.

இந்தச் சம்பவங்களின்போது 6 பேர் படுகாயமடைந்தனர். வாள்வெட்டுக்கு இலக்கான 4 பேர் கிளிநொச்சி மருத்துவம னையில் சேர்க்கப்பட்டனர். ஒருவர் சாதாரண மருத்துவ விடுதிக்கு மாற்றப்பட்டார். 3 பேருக்கு அவசர சிகிச்சைப் பிரி வில் வைத்துக் சிகிச்சை அளிக் கப்படுகின்றது. 2 பேர் சிறுகாய மடைந்தனர்.

வாள்வெட்டு நடத்திய கும்பல் அங்கிருந்து தப்பிச் சென்றுவிட் டது. பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத் துக்குச் சென்ற கிளிநொச்சி பொலிஸ் நிலையக் குற்றத்த டுப்பு பதில் பொறுப்பதிகாரி உப பரிசோதகர் சுமனசிறி தலை மையிலான குழுவினர் விசார ணைகளை மேற்கொண்டனர்.

"வாள்வெட்டு நடத்திய கும்பல் பரந்தனில் உள்ள இராணுவ முகாம் ஊடாகத் தப்பிச் சென் றது" என்று கூறப்பட்டது. அது தொடர்பில் பொலிஸார் குறித்த முகாமுக்குச் சென்று நிலமை யைக்கூறி விசாரித்துள்ளனர். இராணுவத்தினர் தமது முகாம் வளாகத்துக்குள் தேடிப் பார்த்த னர். எவரும் இல்லை. இரா ணுவ முகாமுக்குள் புகுந்தனர் என்ற தகவல் வதந்தி" என்று பொலிஸார் தெரிவித்தனர். விசாரணையை அடுத்து அந்த முகாமின் இராணுவத்தினர் உசாரடைந்து முகாமுக்கு வெளியேயும் பாதுகாப்பில் ஈடு பட்டனர்.

இராணுவ முகாமுக்கு அருகாக உள்ள பாதையால் வாள்வெட் டுக் கும்பல் தப்பிச் சென்றது என்று கூறப்பட்டது. வாள் வெட்டு நடத்தியதாகக் குற்றஞ் சாட்டி 4 பேரின் பெயர் விவரங் கள் வழங்கப்பட்டுள்ளன. எவ ரும் கைது செய்யப்படவில்லை. விசாரணை தொடர்கிறது" என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-4,35,8)

## கஞ்சா...

தது. இந்தச் சம்பவம் முல்லைத்தீவு. வெலிஓயாவில் நடந்துள்ளது.

தாக்குதல் சம்பவத்தை அடுத்துப் பொலிஸார் அந்த பகுதியில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர். தாக்குதலில் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத் தில் 16 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் இருவர் பெண்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

ஜானக புரவில் நீண்டகால மாக ஒரு பெண் கஞ்சா வியா பாரத்தில் ஈடுபட்டுவந்துள்ளார். அவரைப் பொலிஸார் பல தடவைகள் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தியுள்ள னர். அந்தப் பெண்ணின் கணவரும் கஞ்சா விற்பனை யில் ஈடுபட்டவர் என்று கூறப்படுகின்றது. தற்போது அவ ரது மகனும் கஞ்சா விற்பனையில் ஈடுபடுகின்றார் என்று பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது.

அந்தப் பகுதிக்கு நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணிய ளவில் பொலிஸார் வாகனத்தில் சென்றனர். சம்பந்தப் பட்ட நபரை இனங்கண்டு சோதனையிடப்பட்டதில் அவ ரிடம் இருந்து 3 கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டன. அந்த நபரைக் கைது செய்ய முயன்றபோது அவர் கூச்சலிட்டு ஆள்களைச் சேர்த்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அங்கு திரண்டவர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே தர்க்கம் ஏற்பட்டு அது முறுகல் நிலையை எட்டியது. ஒன்று கூடியவர்கள் பொலிஸாரைத் தாக்க ஆரம்பித்துள்ளனர். அதில் பொலிஸாருக்குக் காயம் ஏற்பட்டது. பொலிஸ் வாக னமும் சேதமடைந்தது. காயமடைந்த 3 பொலிஸார் வெலிஓயா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

சம்பவத்தை அடுத்து நேற்றுக் காலை முல்லைத்தீவில் இருந்து சென்ற 100 பொலிஸார் அந்த இடத்தைச் சுற்றி வளைத்தனர். பொலிஸார் மீது தாக்குதல் நடத்தியவர்கள் என்று சந்தேகிக்கப்படும் 16 பேர் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்களில் இரு பெண்கள் உட்பட 12 பேர் வெலிஓயா பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப் பட்டுள்ளனர். நால்வர் முல்லைத்தீவு மருத்துவமனை யில் பொலிஸ் பாதுகாப்பின் கீழ் சிகிச்சை பெறுகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-10,ரி3)

## காணாமல்...

விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படாது என்ற உத்தரவா தத்தை அரச தலைவர் வழங்கியுள்ளார் எனத் தெரியவ ருகின்றது.

பலவந்தமாக காணாமல் ஆக்கப்படுதலை குற்றமாக அறிவிக்கும் பன்னாட்டுச் சமவாயத்தில் இலங்கை 2015ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் கையெழுத்திட்டிருந் தது. இதற்கு அமைவாக சட்டவரைவு உருவாக்கப்பட்டு நாடாளுமன்றில் சமர்ப்பிப்பதற்கு திட்டமிட்டி ருந்தது. மாகாநாயக்க தேரர்கள் எதிர்ப்பு வெளியிட்டிருந்த நிலை யில், சட்டவரைவை நாடாளுமன்றில் விவாதத்துக்கு அரசு எடுத்துக் கொள்ளவில்லை.

இந்த நிலையில் மீளவும் சட்டவரைவு எதிர்வரும் 21ஆம் திகதி விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட இருந்தது. இதற்கு தற்போதும் எதிர்ப்புக்கள் வெளியிடப்பட்டன.

எதிர்ப்பு வெளியிட்ட மகிந்த அணியின் முக்கிய உறுப்பி னர்கள், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்துப் பேசினர். இந்தச் சந்திப்பையடுத்தே, எதிர்வரும் 21ஆம் திகதி விவாத்துக்கு மேற்படி சட்டவரைவு எடுத்துக் கொள்ளப்படாது என்று தெரியவருகின்றது. (வ-5)

## அரசமைப்புக்கான...

என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் கருதுகின்றது. அதனால் புதிய அரசமைப்பு ஒன்றுக்கான மக்கள் கருத் துக் கணிப்பை நடத்துவதற்கு முன்னதாக எந்தவொரு தேர்தலையும் அரசு நடத்தக்கூடாது என்று தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பு அரசிடம் வலியுறுத்தியுள்ளது.

"தேர்தலால் புதிய அரசமைப்புக்குப் பாதிப்பு ஏற்படலாம். அதனால் எந்தவொரு தேர்தலையும் நடத்துவதற்கு முன் னர் புதிய அரசமைப்புக்கான பொது வாக்கெடுப்பை நடத் தவேண்டும் என்று நாம் அரசுக்குப் பலமுறை கூறியுள் ளோம். மாகாணசபை, உள்ளூராட்சி எந்தத் தேர்தலாக இருந்தாலும், அந்தத் தேர்தல்களை நடத்துவதற்கு முன் னர் புதிய அரசமைப்புக்கான பொது வாக்கெடுப்பு நடத்தப் படவேண்டும். எமது நிலைப்பாட்டை அரசுக்கு இப்போ தும் எடுத்துரைத்துள்ளோம்" என்றார் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன். (உ-5)

## வங்காள...

கழக புவியியல் துறை மூத்த விரிவுரையாளர் நா.பிரதீப ராஜா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் காரண மாக நாடு முழுவதும் காலநிலை மாற்றம் ஏற்பட்டுள்ளது. தாழமுக்கமானது தற்போது இலங்கையின் தெற்குப் பகுதியில் இருந்து வடக்கை நோக்கி நகர்கிறது. இதனால் வடக்கு மாகாணத்தின் கரையோரங்களில் மணிக்கு 70 தொடக்கம் 80 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசுகின் றது. நிலப்பரப்புப் பகுதியில் மணிக்கு 60 தொடக்கம் 70 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசுகின்றது.

காற்றின் வேகம் இரண்டு நாட்களுக்கு நீடிப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதால் புத்தளம் தொடக்கம் பொத் துவில் வரையான கடற்பகுதியிலும் வடக்கு கடற்பரப்பி லும் கடற்றொழிலுக்குச் செல்வதைத் தவிர்ப்பது நல்லது. தாழமுக்கம் வடக்கை நோக்கி வருவதால் இன்றுமுதல் இரு தினங்களுக்கு காற்றின் வேகம் அதிகரித்துக் காணப் படும் - என்றார். (வ-8)

# ஞானசார தேரர் நாட்டைவிட்டு ஓட்டம்

## சிங்கள ஊடகச் செய்தியால் பரபரப்பு

பொதுபல சேனாவின் பொதுச் செயலர் கலகொட அத்தே ஞானசார தேரர் போலி கடவுச்சீட்டு மூலம் நாட்டை விட்டுத் தப்பிச்சென்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சிங்கள இணையத்தளம் ஒன்று செய்து வெளியிட்டுள்ளது.

பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்குகள் விசாரணையில் உள்ளன. எனினும் அவர் சட்டத்தின் பிடியில் சிக்காமல் வலம் வந்து கொண்டிருந்தார். அவருக்கு, முன்னாள் நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்சவின் ஆதரவும் பாதுகாப்பும் இருப்பதாக அப்போது பல்வேறு தரப்பினராலும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தன. இந்த நிலையில் சிங்கள புலனாய்வு இணையத்தளம் ஒன்று ஞானசார தேரர் போலி கடவுச்சீட்டு மூலம் கடந்த முதலாம் திகதி ஜப்பானுக்குத் தப்பிச் சென்றிருக்கிறார் என்று செய்தி வெளியிட்டுள்ளது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசகர்களில் ஒருவரான உலபனே சுமங்கல தேரர் என்பவரே ஞானசார தேரருக்கு போலி கடவுச்சீட்டு பெற உதவியுள்ளார் எனவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-5)

# யாழ். சிறைச்சாலைக்குள்ளிருக்கும் கைதிக்கு கஞ்சாவை வழங்க முயற்சி

## *10 நாள்களில் 3ஆவது சம்பவம்*

யாழ்ப்பாணம், செப். 18

யாழ்ப்பாணச் சிறைச்சாலைக்குள் உணவுப் பொதியுடன் கஞ்சா போதைப் பொருள் மறைத்து வைத்துக் கடத்தும் முயற்சி தடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 10 நாள்களில் இடம்பெற்ற 3ஆவது சம்பவமாக இது பதிவாகியுள்ளது என்று சிறைச்சாலைத் தரப்பினர் தெரிவித்தனர்.

சிறையிலுள்ள குறிக்கப்பட்ட பெயரையுடைய கைதி ஒருவருக்கு வழங்குமாறு கூறி சிறைச்சாலைக்கு அருகில் உள்ள வீடு ஒன்றுக்குச் சென்ற இருவர் உணவுப் பொதியை அந்த வீட்டுக்காரரிடம் வழங்கிவிட்டுச் சென்றுள்ளனர். அதில் சந்தேகம் கொண்ட அந்த வீட்டுக்காரர் உணவுப் பொதியைச் சிறைச்சாலைத் தரப்பினரிடம் கொடுத்து சம்பவத்தைக் கூறியுள்ளார். அதனைச் சோதனையிட்டபோதே அந்தப் பொதியில் மில்லிகிராம் அளவுடைய கஞ்சா போதைப் பொருள் பைக்கட்டுக்கள் காணப்பட்டன என்று யாழ்ப்பாணச் சிறைச்சாலைத் தகவல்கள் தெரிவித்தன.

இதுதவிர, கடந்த 10 நாள்களில் இடம்பெற்ற இரண்டு சம்பவங்களில் உணவுப் பொதிக்குள் கஞ்சா வைத்துக் கொண்டு சென்ற குற்றச்சாட்டில் இரண்டு பேர் வெவ்வேறு நாள்களில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (வ-4-8)

## காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விவகாரம்:

# உரிய தீர்வு கிடைக்காவிடில் போராட்டத்தைக் கைவிடோம்

## உறவினர்கள் உறுதிபடத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.18

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விவகாரத்தில் அரசு உரிய பதிலைத் தரும் வரை, எமது போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை. எத்தனை நாள்கள் வீதியில் காத்திருந்தாலும், பன்னாடுகளின் அழுத்தத்துடன் மைத்திரி அரசு எமக்குத் தீர்வைப் பெற்றுத் தரும் என்று எதிர்பார்க்கின்றோம்.

இவ்வாறு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் உறவினர்கள் கூட்டாகத் தெரிவித்தனர். வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விவரங்களை வெளிப்படுத்தக் கோரி, அவர்களின் உறவினர்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

வீதியோரங்களில் கூடாரங்களை அமைத்து மழை, வெயில் பாராது அவர்களது போராட்டம் நேற்றும் தொடர்ந்தது. வடக்கு மாகாணத்தில் கிளிநொச்சி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களிலும், கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை மாவட்டத்திலும் உறவுகள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அவர்கள் போராட்டத்தை ஆரம்பித்து 6 மாதங்களைக் கடந்துள்ளது. இது வரை போராட்டத்துக்கான சரியான தீர்வு எவராலும் வழங்கப்படவில்லை.

"ஐ.நா. பிரதிநிதிகள் உட்பட அரசியல்வாதிகளும் நலம் விசாரித்து விட்டுச் செல்கின்றனர். எமது பிள்ளைகள் எங்கே என்ற விவரத்தை உரியவரிடம் கேட்கத் தயங்குகின்றனர். எம்மால் ஒப்படைக்கப்பட்ட பிள்ளைகளை இழந்து இன்று வீதியில் நிற்கின்றோம். நிம்மதியற்ற வாழ்க்கை வாழ்கின்றோம். இன்னும் போராட்ட நாள்கள் நீடித்தாலும், கோரிக்கை நிறைவேறும் வரை போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை. பன்னாடுகளின் அழுத்தத்துடன் அரசு எமக்குத் தீர்வு தரும் என்று எதிர்பார்த்திருக்கின்றோம்" என்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர். (ஐ)

### *ஒன்பது...*

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: சகல மாகாண சபைகளுக்குமான தேர்தல்களை ஒரே தினத்தில் நடத்தும் நோக்கில் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டவரைவை நிறைவேற்ற முடியாமல் போனால், தேர்தலை ஒரே நாளில் நடத்த முடியாமல் போய்விடும். இது தொடர்பில் கவனம் செலுத்தி அரசு மாற்றுத் திட்டம் பற்றிச் சிந்திக்க வேண்டும்.

சகல மாகாண முதலமைச்சர்கள் மற்றும் மாகாண ஆளுநர்களுடன் விரைவாகப் பேச்சு நடத்தி அடுத்த மாதம் 2ஆம் திகதி சகல மாகாண சபைகளையும் கலைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். அனைத்து மாகாண சபைகளுக்குமான தேர்தலையும் ஒரே தினத்தில் நடத்த முடியும்.

இவ்வாறு ஒரே தினத்தில் சகல மாகாண சபைகளுக்குமான தேர்தல்களையும் நடத்துவதனால் தேவையற்ற காலதாமதத்தை குறைத்துக்கொள்ள முடியும். தனித்தனியாகத் தேர்தல்களை நடத்துவதால் ஏற்படும் அநாவசிய செலவினத்தையும் தவிர்க்க முடியும். பொதுச் சொத்துக்களை தேவையற்ற விதத்தில் பாவிப்பதையும் கட்டுப்படுத்த முடியும்- என்றார். (வ-5)

### *20ஐ...*

தன் தெரிவித்தார்.

20ஆவது திருத்தம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் நிலைப்பாடு என்ன? என்று கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"20ஆவது திருத்தச் சட்டவரைவில் திருத்தம் கொண்டு வரப்படும் என்று அரசு தெரிவித்துள்ளது. நாடாளுமன்றில் 20ஆவது திருத்தம் இரண்டாம் வாசிப்புக்கு எடுத்துக் கொள்ளப்படும்போது அந்தத் திருத்தங்கள் முன்வைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. 20ஆவது திருத்தச் சட்டவரைவுக்கு ஆதரவு தெரிவிப்பதா இல்லையா? என்பது தொடர்பில், நாம் எமது நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பேச்சு நடத்தவுள்ளோம் " என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மேலும் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நாளை செவ்வாய்க் கிழமை இந்தப் பேச்சுக்கள் நடைபெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (வ-5)

### *சீன...*

களில் பங்கேற்க இருப்பதாலும், எந்தநேரத்திலும் தேர்தலுக்கான அழைப்பு வெளிவரலாம் என்பதாலுமே சீனாவுக்கான எனது பயணத்தைக் கைவிட்டேன்" என்று மகிந்த ராஜபக்ச 'உதயன்' பத்திரிகைக்குத் தெரிவித்தார்.

இந்தியா மகாராஷ்டிரா மாநிலத்தில் நடைபெறும் பௌத்த நிகழ்வில் பங்கேற்பதற்காக ஒக்ரோபர் 14ஆம் திகதி இந்தியாவுக்குச் செல்லவிருந்த மகிந்தவை டில்லி அரசின் உயர் மட்டப் பிரமுகர்கள் சந்தித்து, கொழும்பு அரசுக்கு அதிர்ச்சியளிக்கும் வகையில் பேச்சு நடத்தத் திட்டமிட்டிருந்தனர்.

இதை முறியடிக்கும் வகையில் குவான்சோ நகரில் நடக்கும் கண்காட்சி ஒன்றில் பங்கேற்பதற்காக, எதிர்வரும் 21ஆம் திகதி சீனா வருமாறு மகிந்தவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. சீன அரசின் அயலுறவுத்துறைப் பிரிவின் ஆலோசனையின் பிரகாரம், குவான்டொங் மாகாண ஆளுநரின் அழைப்பின் பேரிலேயே மகிந்த ராஜபக்சவின் இந்தப் பயணம் இடம்பெறவிருந்தது.

இது இந்தியாவுக்குக் கடும் எரிச்சலை ஏற்படுத்திய நிலையிலேயே, சீனப் பயணத்தை மகிந்த ராஜபக்ச திடீரெனக் கைவிட்டுள்ளார் என கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. (வ-5)

### *மிக...*

நாளை பி.ப. 1 மணிக்கு சபாநாயகர் கரு ஜெயசூரிய தலைமையில் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து மூன்று நாள்கள் நடைபெறும்.

நாளை 19ஆம் திகதி, அரசமைப்பின் 20ஆவது திருத்தம் தொடர்பில் உயர் நீதிமன்றம் வழங்கியுள்ள வியாக்கியா னத்தை சபாநாயகர் கருஜெயசூரிய நாடாளுமன்றத்துக்குத் தெரிவிப்பார். அரசின் நிலைப்பாட்டை தலைமை அமைச்சர் ரணில் அல்லது சபை முதல்வர் இதன் பின்னர் குறிப்பிடுவார்.

நாளைமறுதினம் புதன்கிழமை 20ஆம் திகதி, 20ஆவது திருத்தச் சட்டவரைவு இரண்டாம் வாசிப்புக்காக எடுத்துக் கொள்ளப்படும். அரசு முன்வைத்த 20ஆவது திருத்தத் துக்கு பொது வாக்கெடுப்பு அவசியம் என்று உயர் நீதிமன்றம் பி.ப. 1 மணிக்கு சபாநாயகர் கரு ஜெயசூரிய தலைமையில் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து மூன்று நாள்கள் நடைபெறும்.

நாளை 19ஆம் திகதி, அரசமைப்பின் 20ஆவது திருத்தம் தொடர்பில் உயர் நீதிமன்றம் வழங்கியுள்ள வியாக்கியா னத்தை சபாநாயகர் கருஜெயசூரிய நாடாளுமன்றத்துக்குத் தெரிவிப்பார். அரசின் நிலைப்பாட்டை தலைமை அமைச்சர் ரணில் அல்லது சபை முதல்வர் இதன் பின்னர் குறிப்பிடுவார்.

நாளைமறுதினம் புதன்கிழமை 20ஆம் திகதி, 20ஆவது திருத்தச் சட்டவரைவு இரண்டாம் வாசிப்புக்காக எடுத்துக் கொள்ளப்படும். அரசு முன்வைத்த 20ஆவது திருத்தத் துக்கு பொது வாக்கெடுப்பு அவசியம் என்று உயர் நீதிமன்றம் வியாக்கியானம் முன்வைத்துள்ள நிலையில், இரண்டாம் வாசிப்புக்காக எடுத்துக் கொள்ளப்படவுள்ளதால் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக நோக்கப்படுகின்றது. 20ஆவது திருத்தத்தை அரசு கைவிடுவதாக அறிவித்தால், மாகாண சபைகளுக்கான தேர்தல் நடவடிக்கைகள் ஆரம்பமாகும்.

இதேவேளை, 21ஆம் திகதி பல தரப்புக்களாலும் பல மாதங்களாக எதிர்பார்க்கப்பட்டுவரும் வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்படவுள்ளது. அன்றைய தினம் நாடாளுமன்றம் அரசியல் நிர்ணய சபையாகவே காலையில் கூடும்.

அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், நாடாளுமன்றத்தின் வழமையான நிகழ்ச்சி நிரலின்படி, காணாமல் ஆக்கப்படுதலை குற்றமாக அறிவிக்கும் சட்டவரைவு விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். இந்தச் சட்டவரைவுக்கு சில தரப்புக்கள் எதிர்ப்பு வெளியிட்டுள்ளதால், அன்றைய தினம் எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது என்று தெரிவிக்கப்படுகின்றது. (வ-5)

### *மாகாண...*

தும் கலப்பு முறையிலேயே (தொகுதி மற்றும் விகிதாசார முறைமைகள் கலந்து) இடம்பெறும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிமசிங்கவும் கடந்த இரு தினங்களில் வெவ்வேறு நிகழ்வுகளில் தெரிவித்திருந்தனர்.

அவ்வாறாயின் இந்த மாத இறுதியிலும் அடுத்த மாத முற்பகுதியிலும் காலம் முடிவடையும் கிழக்கு, வடமத்திய மற்றும் ஊவா மாகாண சபைகளுக்கான தேர்தல் எதிர்வரும் டிசெம்பர் 9ஆம் திகதி நடத்தப்பட வேண்டும். அந்தத் தேர்தலை கலப்பு முறைமையில் நடத்துவது சாத்தியப்படுமா? என்பது சந்தேகமே. மாகாண சபைகளுக்கான தொகுதி எல்லைநிர்ணயம் இன்னும் முடிவாகவில்லை. அவ்வாறிருக்கையில் 3 மாகாண சபைகளுக்குமான தேர்தலை கலப்பு முறைமையில் நடத்துவதாயின் அரசமைப்பில் திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும். அதனைக் கொண்டு வருவதற்கு காலதாமதமாகும்.

அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டவரைவை நிறைவேற்றும் அரசின் திட்டம் கைகூடாமல் போகும் நிலையிலுள்ளது. அதனால் 3 மாகாண சபைகளுக்குத் தேர்தலை நடத்துவது குறித்து அரசுக்குள் குழப்பநிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-5)

### *குடாநாட்டில்...*

களை விடுவிக்கவும் இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

வள்ளுவர்புரம் மற்றும் காங்கேசன்துறைச் சந்தியின் மேற்காக உள்ள பிரதேசத்தை விடுவிப்பதற்கு தமக்கு ஒரு மாத கால அவகாசத்தைப் படையினர் கோரியுள்ளனர். அந்தப் பகுதிகளில் அமைந்துள்ள ஆயுதக் கிடங்குகளை, பளையை அண்டிய பகுதிக்கு மாற்றம் செய்து வருவதாகவும், அவை முழுமையாக இடமாற்றம் செய்யப்பட்ட பின்னர் விடுவிப்பதாகவும் தெரிவித்தனர்.

அச்சுவேலியில் அமைந்துள்ள இராணுவ முகாம், ஆனைக்கோட்டை கூழாவடியில் அமைந்துள்ள இராணுவ முகாம், சங்கானை பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள இராணுவ முகாம், நல்லூரில் இரண்டு வீடுகளை உள்ளடக்கி அமைந்துள்ள இராணுவ முகாம், பருத்தித்துறையில் இரண்டு வீடுகளை உள்ளடக்கி அமைந்துள்ள இராணுவ முகாம் என்பன, இந்த ஆண்டு இறுதிக்குள் அகற்றப்படும் என்று படைத் தரப்பினர் தெரிவித்துள்ளனர். தமது முகாம்களை இடமாற்றம் செய்வதற்கு பணம் கிடைத்துள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர். இராணுவத் தளபதி மகேஸ் சேனநாயக்கவை தம்மைவிட உங்களுக்கே (அதிகாரிகளுக்கு) நன்றாகத் தெரியும் என்றும், காணி விடுவிப்புக்கள் விரைவாக நடைபெறும் என்றும் இராணுவத்தினர் உறுதியாகத் தெரிவித்தனர் என்று அதிகாரிகளால் கூறப்பட்டது.

யாழ்ப்பாண நகரத்திலுள்ள இராணுவ முகாம்களை கோட்டைக்கு இடமாற்றுவதற்கு இராணுவத்தினர் இதன்போது கேட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (வ-5,32)

## சக்திவேல் சம்பியன்

யாழ். செப். 18
உதயசூரியன் விளையாட்டுக் கழகத்தின் கால்பந்தாட்ட வெற்றிக் கிண்ணத்தைக் கைப்பற்றியது கொடுக்கிளாய் சக்திவேல் விளையாட்டுக் கழகம்.
வத்திராயன் உதயசூரியன் விளையாட்டுக் கழகம் நடத்திய கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் குறித்த கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்த இறுதியாட்டத்தில் கொடுக்கிளாய் சக்திவேல் விளையாட்டுக் கழகமும் கம்பர்மலை யங்கம் பன்ஸ் விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின. ஆட்டத்தின் இரண்டாவது நிமிடத்தில் சக்திவேலின் சார்பாக முதலாவது கோல் பதிவானது. வேறெந்த மாற்றமும் ஏற்படவில்லை. 1:0 என்று சக்திவேல் அணியின் ஆதிக்கத்துடன் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியிலும் மாற்றங்கள் ஏற்படவில்லை. கிண்ணம் வென்றது சக்திவேல்
(ம-108)

## றோயல் சம்பியன்

யாழ். செப். 18
அராலி அண்ணா விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 9 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரில் ஊரெழு றோயல் அணி சம்பியனானது.
அராலி அண்ணா விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக் கழக அணி மோதியது. கோல்கள் எதுவும் பதிவாகாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியின் 18 ஆவது நிமிடத்தில் ஊரெழு றோயல் அணியின் கயகோபன் தனது அணிக்கான முதலாவது கோலினைப் பதிவு செய்தார். முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் றோயல் அணி வெற்றி பெற்று கிண்ணம் வென்றது.
(ம-23)



# வடக்கு அணி வெளியேற்றம்

கரணவாய் செப் 18
தேசியமட்ட பூப்பந்தாட்டத் தொடரில் அரையிறுதியாட்டத்துடன் வெளியேறியது வடமாகாண ஆண்கள் அணி.
42ஆவது தேசிய விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான பூப்பந்தாட்டத் தொடர் கொழும்பு பூப்பந்தாட்டத் திடலில் இடம் பெற்று வருகின்றது. நேற்று இடம்பெற்ற அரைறுதியாட்டத்தில் வடமாகாண அணியும் மேல் மாகாண அணியும் மோதின.
3 தனிநபர் ஆட்டங்களையும் 2 இரட்டையர் ஆட்டங்களையும் கொண்ட இந்தத் தொடரில் 3:1 என்ற அடிப்படையில் மேல் மாகாண அணி வெற்றிபெற்றதை அடுத்து வடக்கு அணி இறுதிக்குத் தகுதி பெறாமல் வெளியேறியது. வடமாகாண அணி 42 வருடங்களுக்குப் பின்னர் அரையிறுதி ஆட்டத்திற்கு முன்னேறியிருந்ததை குறிப்பிடத்தக்கது.
(ம-108)

# வடமாகாண அணி தேசியச் சம்பியன்



யாழ்ப்பாணம், செப். 18
43ஆவது தேசிய விளையாட்டு விழாவின் ஒரு அங்கமான பெண்களுக்கான துடுப்பாட்டத் தொடரில் வடக்கு மாகாண பெண்கள் அணி சம்பியனானது.
குருநாகல் மாவட்டத்தில் நேற்று இடம்பெற்ற இறுதியாட்டத்தில் வடக்கு மாகாண அணியை எதிர்த்து மேல் மாகாண அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய மேல் மாகாண அணி சகல இலக்குகளையும் இழந்து 34 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.
35 ஓட்டங்க ளைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய வடக்கு மாகாண அணி 4.4 பந்துப் பரிமாற்றங்களில் இலக்குகள் எதையும் இழக்காமல் வெற்றிபெற்றது. சாம்பவி 18 ஓட்டங்களையும், றஜீதா 16 ஓட்டங்களையும் பெற்றனல்.
(ம-23-108-422)



வவுனியா வடக்கு கல்வி வலயத்தினால் வவுனியா வடக்கு பாடசாலை மாணவர்களுக்கான பயிற்சி முகாமொன்று ஓமந்தை மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் கரப்பந்தாட்டம், கால்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம் எறிபந்தாட்டம் சதுரங்கம், கபடி, தடகளம் ஆகிய விளையாட்டுக்கள் தொடர்பில் பயிற்சி வழங்கப்பட்டது.
(ம-422)

## பாகிஸ்தானுக்கு டு பிளாசிஸ் நன்றி தெரிவிப்பு

பாகிஸ்தானுக்கு எதிரான ரி-20 தொடருக்கான உலகப் பதினொருவர் அணிக்குத் தலைமை தாங்கியவரான பிளாசிஸ், இந்தத் தொடரில் பாகிஸ்தான் தமக்கு வழங்கி உபசரிப்புக்கு நன்றி தெரிவித்தார்.
பாகிஸ்தானுக்கு வேறெந்த அணியும் சுற்றுப் பயணம் மேற்கொள்ளாததை அடுத்து, பாகிஸ்தான் பாதுகாப்பானது என்பதை வெளிப்படுத்த எடுத்துக் கொண்ட முயற்சியே இந்த ரி-20 தொடர். இந்தத் தொடருக்கான உலகப் பதினொருவர் அணிக்கு பிளாசிஸ் தலைமை தாங்கினார். தொடர் முடிவடைந்து மீண்டும் தென்னாபிரிக்காவுக்குச் சென்றுள்ள அவர், இந்தத் தொடரில் தமக்கு வழங்கிய பாதுகாப்புக்கும் உபசரிப்புக்கும் நன்றி தெரிவித்தார்.
(ம)


# வீரகத்திப்பிள்ளை ம.வித்தி. கரப்பந்தாட்டத்தில் சம்பியன்



யாழ்ப்பாணம், செப். 18
கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட கரப்பந்தாட்டத் தொடரில் தொண்டைமனாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம் சம்பியனானது.
கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் நேற்று இந்த இறுதி ஆட்டம் நடைபெற்றது. இந்த இறுதியாட்டத்தில் தொண்டைமனாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயமும், உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியும் பலப்பரீட்சை நடத்தின.
மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 25:21 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன். சரிவில் இருந்து மீண்ட தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய அணி அடுத்த இரண்டு செற்களையும் முறையே 25:22, 25:17 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:1 என்ற செற் கணக்கில் கிண்ணம் வென்றது.
(ம-108)



இலங்கை பளுதூக்கல் சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட நடுவர்களுக்கான பரீட்சையில் வடக்கு மாகாணத்தைச் சேர்த்த டினோயா சித்தியடைந்துள்ளார்.
(ம-23)




பாகிஸ்தான் அணிக்கும் உலகப் பதினொருவர் அணிக்கும் இடையிலான மூன்றாவது ரி-20 ஆட்டம் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இந்த ஆட்டத்தில் உலகப் பதினொருவர் அணியின் சார்பாக இந்திய அணியின் முன்னாள் தலைவர் டோனி, தற்போதைய தலைவர் கோக்லி ஆகியோரைத் தவற விடுகிறோம் என்று தமது ஆதங்கத்தை வெளிப்படுத்துகின்றனர் பாகிஸ்தான் ரசிகர்கள். (ம)

# பாகிஸ்தானை எதிர்ப்பதற்கு கூடுதல் பயிற்சி கட்டாயம்

## பகலிரவு டெஸ்ட் தொடர்பில் கருத்துத் தெரிவித்தார் சந்திமல்




"பகலிரவு டெஸ்ட் ஆட்டத்தில் பாகிஸ்தானை எதிர்கொள்ள இலங்கை வீரர்களுக்கு கூடுதல் பயிற்சி தேவைப்படுகிறது" என்று இலங்கை அணித்தலைவர் சந்திமல் தெரிவித்தார்.

இந்தியாவுக்கு எதிரான சொந்த மண்ணில் கிடைத்த படுதோல்வியை அடுத்து இலங்கை அணி பாகிஸ்தானுடன் விளையாடவுள்ளது. டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டம் எதிர்வரும் 28ஆம் திகதி நடைபெறவுள்ளது. இரண்டாவது ஆட்டம் அடுத்த மாதம் 6ஆம் திகதி பகலிரவு டெஸ்ட் ஆட்டமாக நடைபெறவுள்ளது. இந்தத் தொடர் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே சந்திமல் இவ்வாறு தெரிவித்தார்.

"ஒருசில உள்ளூர் பகலிரவு டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடியுள்ளோம். ஆனால் பன்னாட்டு அரங்கில் பகலிரவு டெஸ்ட் ஆட்டமொன்றில் இதுவரை விளையாடவில்லை. பாகிஸ்தானை எதிர்ப்பதே இலங்கையின் முதலாவது பகலிரவு டெஸ்ட் ஆட்டம். அதற்கேற்ப இலங்கை வீரர்கள் தயாராக இருத்தல் அவசியம். பாகிஸ்தானை எதிர்கொள்வதற்கு கூடுதல் பயிற்சிகள் தேவைப்படுகின்றன" என சந்திமல் மேலும் தெரிவித்தார். (ம)

## சாமர சில்வாவுக்குத் தடை

இலங்கை அணியின் முன்னாள் வீரரான சாமர சில்வா, கிரிக்கெட் ஆட்டங்களில் விளையாடவும் அது சார்ந்த நடவடிக்கைகளில் ஈடுபடவும் இரண்டு ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டுள்ளது.




கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற உள்ளூர் ஆட்டமொன்றில் பனடுரா கிரிக்கெட் கழகம் மற்றும் களுத்தரா கலாசார சங்கம் ஆகியன மோதின. இரு அணிகளும் பிடிப்பற்ற, திட்மிட்ட தோல்வியடையும் விதத்தில் விளையாடின. இதனால் இரண்டு அணியின் தலைவர்களான டி சில்வா மற்றும் தேசப்பிரிய இருவரும் விசாரணைக்காக அழைக்கப்பட்டனர். இது தொடர்பான விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வந்தன. இந்தப் பின்னணியிலேயே சாமர சில்வாவுக்கு இரண்டு வருடங்கள் தடை விதிக்கப்பட்டது. (ம)

## ஹிகுவைன் நீக்கம்

ரஷ்யாவில் அடுத்த வருடம் நடைபெறவுள்ள உலகக்கிண்ணத் தொடரில் பங்கேற்பதை உறுதி செய்வதற்கு அடுத்தடுத்த ஆட்டங்களில் வெற்றிபெற வேண்டும் என்ற சிக்கல் ஆர்ஜென்ரீனாவுக்கு ஏற்பட்டுள்ள நிலையில் அந்த அணியில் இருந்து நட்சத்திர வீரரான ஹிகுவைன் நீக்கப்பட்டுள்ளார். (ம)

## சாதனைகளுக்காக விளையாடுவதில்லை


### கோக்லி தெரிவிப்பு




"மைதானத்துக்குள் செல்லும்போது அணியின் வெற்றியே முதன்மைக் காரணமாக இருக்கிறதே தவிர, தனிப்பட்ட சாதனைகளை எண்ணி ஒரு போதும் விளையாடியது இல்லை" இவ்வாறு தெரிவித்தார் இந்திய அணித் தலைவர் கோக்லி. ஆஸ்திரேலியத் தொடர் தொடர்பாக நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"மூன்று இலக்க ஓட்டங்களுக்காக நான் விளையாடுவது இல்லை. இதனால்தான் என்னவோ என்னால் அதை இலகுவில் கடந்து செல்ல முடிகிறது. மைல்கல் சாதனை படைக்க வேண்டும் என எனக்கு நானே அழுத்தம் கொடுத்துக்கொள்ள மாட்டேன். என்னைப் பொறுத்தவரையில் அணிக்காக வெற்றித் தேடிக் கொடுக்க வேண்டும் என்பதையே முக்கியமாகக் கருதுகிறேன். நான் 98 அல்லது 99 ஓட்டங்களில் ஆட்டமிழக்கால் இருந்தாலும் சதத்தைப்பற்றி நினைக்க மாட்டேன். அணியின் வெற்றியையே கருத்தில் கொள்வேன். எனவே எனது உள்நோக்கம் சதம் அடிக்க வேண்டும்என இருந்ததில்லை. ஒருபோதும் இருக்கவும் செய்யாது. தனிப்பட்ட சாதனைகளுக்காக என்னை நான் தயார்ப்படுத்துவதில்லை" என கோக்லி மேலும் தெரிவித்தார். (ம)

## டெஸ்ட் அரங்கிலிருந்து விடைபெற்றார் டுமினி




தென்னாபிரிக்க அணியின் சகலதுறை வீரரான ஜெ.பி. டுமினி பன்னாட்டு டெஸ்ட் அரங்கில் இருந்து ஓய்வு பெற்றுச் சென்றுள்ளார். தென்னாபிரிக்க அணியின் முன்னணி வீரரான டுமினி, ஒருநாள் மற்றும் ரி-20 ஆட்டங்களில் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகின்ற போதிலும் டெஸ்ட் ஆட்டங்களில் சமீப காலமாகப் பெரியளவில் பிரகாசிக்கவில்லை. இதனால் இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கான தென்னாபிரிக்க அணியில் டுமினிக்கு இடம் கிடைக்கவில்லை. இந்த நிலையில் பன்னாட்டு டெஸ்ட் அரங்கில் இருந்து ஓய்வு பெறும் முடிவை அவர் நேற்றுமுன்தினம் அறிவித்தார். (ம)

## இங்கிலாந்தை வீழ்த்தியது மேற்கிந்தியத் தீவுகள்

இங்கிலாந்துக்கு எதிரான ரி-20 ஆட்டத்தில் 21ஓட்டங்களால் வெற்றி பெற்றது மேற்கிந்தியத் தீவுகள் அணி.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 9 இலக்குகளை இழந்து 176 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக லூயிஸ் 51 ஓட்டங்களையும், கெய்ல் 40 ஓட்டங்களையும், பவல் 28 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பிளங்கட், ரசிட் இருவரும் தலா 3 இலக்குகளையும், கரன், ஜோர்தான் இருவரும் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இங்கிலாந்து 19.3 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 155 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. கேல்ஸ் பெற்ற 43 ஓட்டங்களே அதிகபட்சம். அவரை விட பட்லர் 30 ஓட்டங்களையும், பிளங்கட் 18 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் வில்லியம்ஸ், பிரீத்வைட் இருவரும் தலா 3 இலக்குகளையும், நரைன் 2 இலக்குகளையும், ரெய்லர், நேர்ஸ் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

4 பந்துப்பரிமாற்றங்களை வீசி 15 ஓட்டங்களை மட்டுமே விட்டுக் கொடுத்த நரைன் ஆட்டநாயகனாகத் தெரிவானார். (ம)



# பார்சிலோனா அதிரடி ஆட்டம்


ஸ்பெய்னின் கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான லா லிகா தொடரில், நேற்றுமுன் தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் கெட்டாபே அணியை வீழ்த்தியது பார்சிலோனா.
ஆட்டத்தின் 11ஆவது நிமிடத்தில் கெட்டாபேயின் சார்பாக முதல் கோல் பதிவானது. 19ஆவது நிமிடத்தில் பதிலடி கொடுத்து கோல் கணக்கை 1:1 என்றாக்கினார் பார்சிலோனாவின் நட்சத்திர வீரர் சுவாரஸ். மேலதிக மாற்றங்கள் எதுவும் ஏற்படவில்லை. முதல் பாதியின் நிறைவில் இரு அணிகளும் தலா ஒரு கோலைப் பெற்றிருந்தன.
ஆட்டத்தின் 52ஆவது நிமிடத்தில் பவுலினோ பார்சிலோனாவின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்தார். அதுவே வெற்றிக் கோலாகவும் அமைந்தது. முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது பார்சிலோனா.
(ம)



## வென்றது லெசியோ

இத்தாலிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்ட மொன்றில் லெசியோ அணி அபார வெற்றி பெற்றது.
லெசியோவை எதிர்த்து பலம்வாய்ந்த மிலன் பலப்பரீட்சை நடத்தியது. ஆனால் 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று வியக்க வைத்தது லெசியோ. தொடரில், லெஸியோ சார்பாக சிரோ இம்மொபைல் மூன்று கோல்களைப்பெற்றார். லூயிஸ் அல்பேர்ட்டோ ஒரு கோலைப்பதிவுசெய்தார். ஏ.சி. மிலன் சார்பாகப் பெறப்பட்ட கோலை றிக்கார்டோ மொன்டொலிவோ பெற்றார்.
(ம)

**Personal Class-கணினி**
உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்
Ms office 2016, Internet & E-mail,
DTP (Photoshop CC, CorelDraw X7, PageMaker,
Indesign, Illustrator) Web Design.
சிறுவர்களுக்கான கணினி வகுப்புக்கள்
TP:0779672038



# அடங்கியது ஆஸி.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரில் சென்னையில் நேற்று நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் 26 ஓட்டங்களால் வெற்றிபெற்றது இந்திய அணி.
நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. தவான் விலகிய காரணத்தால் இந்திய அணியின் ஆரம்ப வீரராக ரோகித்துடன் ரகானே களமிறங்கினார். 11 ஓட்டங்களை இந்திய அணி பெற்றிருந்த நிலையில் ரகானே, கோக்லி, பாண்டே மூவரும் பவிலியனுக்குத் திரும்பியிருந்தனர்.
ரோகித், கேதர் யாதவ் கூட்டணி இணைந்து இந்திய அணியை மீட்டெடுக்க சிறு முயற்சி எடுத்தது. எனினும் பெரிதளவில் வெற்றி கிடைக்கவில்லை. அணி 64 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 28 ஓட்டங்களுடன் ரோகித் ஆட்டமிழந்தார். 40 ஓட்டங்களுடன் ஸ்ரொய்னிஸின் பந்துவீச்சில் நடையைக்கட்டினார் கேதர்.
இணைந்தது டோனி, பாண்டியா கூட்டணி. டோனி நிதானித்தார். ஆனால் பாண்டியா சிறிது சுதந்திரமாக அடித்தாடிக் கொண்டிருந்தார். அதற்கு டோனியும் தாராள அனுமதி வழங்கியிருந்தார். இருவரும் அரைச்சதம் கடந்தனர்.
மீண்டும் இந்தியக் கொடிகள் காற்றில் அலையாடின. சாம்பாவின் பந்துப்பரிமாற்றம் ஒன்றில் மூன்று சிக்கர்களை பறக்க விட்டார் பாண்டியா. அவர் 83 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். டோனி 79 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க முடிவில் 7 இலக்குகளை இழந்து 281 ஓட்டங்களைக் குவித்தது இந்திய அணி.
பந்துவீச்சில் கட்டர் நைல் 3 இலக்குகளையும், ஸ்ரொய்னிஸ் 2 இலக்குகளையும், பல்க்நெர், சாம்பா இருவரும் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.
மழை குறுக்கிட்டதால் ஆஸ்திரேலிய அணிக்கு 21 பந்துப்பரிமாற்றங்களில் 164 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.
பும்ராவின் வேகம் புயல் போல் வேலை செய்தது. பாண்டியாவும், புவனேஸ்வர் குமாரும் ஓட்டங்களை கட்டுக்குள் வைத்திருந்தனர். ஒரு முனையில் இலக்குச் சரிவு, மறுமுனையில் ஓட்டமற்ற பந்துகள் என்று இருமுனைப் பின்னடைவு ஆஸ்திரேலியாவுக்குக் கொடுக்கப்பட்டது. ஆஸியின் முன்வரிசை பெரியளவில் பிரகாசிக்கவில்லை.
ஆனால் மத்திய வரிசையில் மக்ஸ்வெல் சிறு பதற்றத்தை வழங்க எத்தனித்தார். அவர் 18 பந்துகளில் 4 சிக்சர்கள் அடங்கலாக 39 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார். இந்த இலக்குச் சரிவுடன் 137 ஓட்டங்களுடன் அடங்கியது ஆஸி.
26 ஓட்டங்களால் வெற்றிபெற்றது இந்திய அணி.
(ம)

# டோனி 100



பன்னாட்டு அரங்கில் தனது 100ஆவது அரைச்சதத்தை நிறைவுசெய்தார் இந்திய அணியின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரரான டோனி.
ஆஸ்திரேலிய அணி இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒரு நாள் தொடரின் முதலாவது ஆட்டம் சென்னையில் நேற்று நடைபெற்றது. ஒரு கட்டத்தில் வெறும் 11 ஓட்டங்கள் பெறப்பட்டிருந்த நிலையில் மூன்று இலக்குகளை இழந்து தடுமாறியது இந்தியா. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ரகானே 5 ஓட்டங்களுடனும், கோக்லி ஓட்டம் எதனையும் பெறாமலும், பாண்டே ஓட்டம் எதனையும் பெறாமலும் ஆட்டமிழத்து ஏமாற்றினர். ஆனால் டோனி, பாண்டியா மற்றும் புவனேஸ்வர் குமாருடன் இணைந்து அணியை மீண்டும் கட்டியெழுப்பினார். அவர் 75 பந்துகளில் அரைச்சதம் கடந்தார். கடைசிக் கட்டத்தில் அடித்தாடி 88 பந்துகளில் 79 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார்.
இந்த அரைச்சதம் டோனி பதிவுசெய்த 100ஆவது அரைச்சதமாக அமைந்தது. ஒருநாள் ஆட்டங்களில் 66 அரைச் சதங்களையும், டெஸ்ட்டில் 33 அரைச் சதங்களையும், ரி-20 ஆட்டங்களில் ஒரு அரைச்சதத்தையும் டோனி பதிவு செய்துள்ளார்.
100 அரைச்சதங்களைப் பதிவுசெய்த டோனிக்கு அவரது ரசிகர்கள் சமூக வலைத்தளங்களில் வாழ்த்துக்களைக் குவித்து வருகின்றனர். கிரிக்கெட் வீரர்களும் தமது வாழ்த்தைத் தெரிவிக்கின்றனர். இந்திய கிரிக்கெட்டின் கடவுள் என்று அழைக்கப்படும் சச்சின், தனது சமூக வலைத்தளத்தில் 'டோனிக்கு வாழ்த்துக்கள். மற்றுமொரு 100. ஆனால் இம்முறை இலக்குக்கு முன்னுக்குப் பெற்றுள்ளீர்கள்' என்று குறிப்பிட்டுள்ளார். முன்னதாக முடிவடைந்த இலங்கைக்கு எதிரான தொடரில் டோனி, தனது 100ஆவது ஸ்டம்பிங்கை நிறைவு செய்தார். இதையே சச்சின் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
(ம)

sachin tendulkar
@sachin_rt

Yet another 100 for @msdhoni! This time in front of the stumps! Congratulations on a century of 50s Mahi 👍



## அணியில் மீண்டும் ஜடேயா



ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான ஒருநாள் தொடருக்கான இந்திய அணியில் திடீர் மாற்றமாக ஜடேயா உள்வாங்கப்பட்டுள்ளார்.
இந்தத் தொடருக்கான அணியில் சகல துறை வீரரான அக்சர் பட்டேல் இடம்பிடித்திருந்தார். பயிற்சியின் போது காயம் காரணமாக அவர் விலகியதை அடுத்து ஜடேயா அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார். இந்த இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது ஒருநாள் ஆட்டம் நேற்று நடைபெற்றது. இந்த ஆட்டத்தில் ஜடேயா களமிறக்கப்படவில்லை.
(ம)


ஆங்கிலம்
3 மாத பயிற்சி நெறி
இம்முறை A/L எழுதியோர், தொழில்புரிவோர், வெளிநாடு செல்வோர், இளைஞர் யுவதிகள் இணையமுடியும்!
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் - 23.09.2017
1. காலை 08.00-10.00
2. காலை 10.00-12.00
3. பி.ப 01.00-03.00
4. மாலை 03.00-05.00
ஆங்கிலத்தில் ஓரெழுத்து தெரியாதவர்களும் கூட 3 மாதங்களிலேயே சரளமாக ஆங்கிலம் பேசமுடியும்!
மூன்று மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பிவழங்குவதற்கான உத்தரவாதம்
சாம்சன் அவர்களின் நேரடிவழப்பு - ஒரு பிரிவில் 20 பேர் மட்டுமே.
SAAMSON
Expert in Language Training
403, [illegible], யாழ்நகர்.
077 1570 486
021 320 3313

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.09.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.